# செம்மண்

நிலம் 1 துகள் 39 வள்ளுவர் ஆண்டு 2052, 10 - 16 சித்திரை 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-




# கற்றாழையைக் கொல்கிறது கொரோனா

■ நியாக்குட்டி ■

" கற்றாழைக் கன்றுகளை நாட்டி, நீரூற்றி வளர்த்து அறுவடையைப் பெற முற்பட்டபோது வந்து குதித்தது கொரோனா. இதனால் கற்றாழைச் செய்கை பலவிடங்களிலும் மூச்சிழுத்துக் கிடக்கிறது. "

காடுகள், மேடுகள், கடற்கரை யோரங்களில் கவனிப்பாரற்றுக் கிடந்த கற்றாழைச் செடிகளைச் சில காலங்களுக்கு முன்பு பலரும் முண்டியடித்துத் தேடிப் பிடுங்கிச் சென்றனர். ஒரு வகைச் செந்நிறக் கற்றாளையில் விசேட மருத்துவ மற்றும் நோய் தீர்க்கும் அரியகுணம் இருப்பதாகக் கூறி அதைத் தேடியலைந்தோர் பலர்.

வைத்தியர்கள், அழகு சாதன நிலையதாரர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள், "மேக்கப்", "பியூட்டி பார்லோர்"களைக் கையாள்கின்ற சீமாட்டிகள், பழ ரசம் தயாரிக்கும் நிறுவனங்கள் எனப் பலதரப்பினருக்கும் கற்றாழைகள் தேவைப்பட்டன. இவர்களுக்கு விற்பதற்காகப் பலரும் தேடுவாரற்றுக் கிடந்த கற்றாழையைக் கையகப்படுத்த முண்டியடித்தனர்.

காடுமேடங்கும் தாமாக முளைவிட்டுச் செழித்திருந்த கற்றாழைச் செடிகளுக்கு ஆபத்து நேர்ந்தது. அவற்றை அளவுக்கதிகமாக -சட்டத்துக்குப் புறம்பாகப் பிடுங்கிச் செல்பவர்கள் அதிகரித்தனர். இந்த விடயத்தில் கவனம் செலுத்திய காவல்துறை கற்றாழைச் செடிகளைப் பிடுங்கிச் செல்வோருக்கு எதிராக நடவடிக்கைகளை முடுக்கிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிரீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்


## யாழ். முதல்வர் கைது ஓர் அரசியல் கயமை அதற்கு கடும் கண்டனம்

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் வெள்ளிக்கிழமை அதிகாலை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கடமையில் ஈடுபடக் கூடிய காவலர்கள் சிலரை பணி நியமனம் செய்து அவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடை தொடர்பில் எழுந்த கரிசனைகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். பயங்கரவாதத்தை மீண்டும் உயிர்ப்பிக்க முனைகின்றார் என்று அவர் மீது குற்றச்சாட்டுச் சுமத்தப் பட்டுள்ளது.

5 ஆண்கள் மற்றும் அவர்களின் உடைகள் தொடர்பில் யாழ்ப்பாணக் காவல்துறையினர் விழிப்பூட்டப்பட்டார்கள். அது தொடர்பில் யாழ்ப்பாணக் காவல்துறையினர் மற்றும் பயங்கரவாதத் தடுப்புத் திணைக்களத்தினர் விசாரணைகளை நடத்தினார்கள். அதில், போர்க் காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காவல்துறையினர் அணிந்த சீருடைகளுக்கு ஒப்பானவையாக இந்த 5 பேரும் அணிந்திருந்த சீருடைகளும் இருந்தன என்பது கண்டறியப்பட்டது'' என்று காவல்துறைப் பேச்சாளர் பதில் காவல் மா அதிபர் அஜித் ரோகண ஊடகங்களிடம் தெரிவித்திருக்கிறார்.

யாழ். மாநகர சபைக்குள் சட்டம் ஒழுங்கை நடைமுறைப் படுத்தும் விதத்தில் இலங்கைச் சட்ட விதிகளுக்கு அமையவே 5 காவலர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு இள நீல நிறத்தினாலான மேற்சட்டையும் கடும் நீல நிறத்தினாலான காற் சட்டையும் வழங்கப்பட்டிருந்தது. இந்தச் சீருடையே புலிகளின் காவல்துறைச் சீருடையை ஒத்தவை என்று கூறி மாநகர முதல்வரைக் கைது செய்திருக்கிறது காவல்துறை.

மாநகரக் காவலர்களுக்கு இந்தச் சீருடைகள் வழங்கப்படுவதற்கு முன்னதாக உரிய இடங்களுக்கு அறிவிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டிருந்தது என்கின்றன மாநகர சபை வட்டாரங்கள். அப்படியிருந்தும் அந்தச் சீருடையை வழங்கியமை புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நடவடிக்கை என்று குற்றஞ்சாட்டியிருக்கிறது காவல்துறைத் தரப்பு.

இன்றைய நவீன காலத்தில் ஒவ்வொரு நிறத்திற்கும் ஒரு நிற ஒதுக்கீட்டு எண் (கலர் கோட்) இருக்கின்றது. புலிகளைத் தடைசெய்யும் வர்த்தமானி அறிவித்தலில் அவர்களின் சீருடை மற்றும் அவர்களின் காவல்துறை சீருடைகளின் நிற ஒதுக்கீட்டு எண் என்ன என்பது தொடர்பில் எந்த அறிவிப்பும் இல்லை. அப்படியிருக்கும்போது இள நீலம் மற்றும் கடும் நீலம் என்பவற்றை புலிகளின் காவல்துறையின் நிறம் என்று வரையறுப்பது வெறும் அபத்தம். அரசியல் நோக்கம் கருதிய குற்றச்சாட்டு.

விடுதலைப் புலிகள் தங்களது நிகழ்வுகளுக்கான கொடிகளுக்கு மஞ்சள் மற்றும் சிவப்பு நிறங்களைப் பயன்படுத்தினார்கள். ஆனால் புலிகளுக்கு முன்னரே உருவான கட்சிகள் பலவும் தமது கொடிகளாகவும் இதே நிறத்தையே பயன்படுத்துகின்றன. புலிகளின் சமகாலத்திலும் அதன் பின்னரும் உருவான பல இயக்கங்கள் பின்னர் கட்சிகளாக மாறிய நிலையில் அதே நிறங்களைப் பயன்படுத்துகின்றன. அதே போன்று கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பணியாற்றும் சில பணியாளர்களுக்கும்கூட யாழ். மாநகர காவலர்களின் சீருடையுடன் பெருமளவில் ஒத்துப்போகும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இவை எல்லாம் புலிகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுவதில்லை. அவை தொடர்பில் விசாரணைகளோ சட்ட நடவடிக்கைகளோ எடுக்கப்படுவதில்லை.

ஆனால், யாழ். மாநகர முதல்வரால் முறையான அனுமதி பெறப்பட்டு உருவாக்கப்பட்ட சீருடைக்கு மட்டும் புலிச் சாயம் பூசப்படுவதன் பின்னணியில் அரசியலும் தமிழர்களை மிரட்டும் அடக்குமுறையும் மட்டுமே மறைந்து கிடக்கின்றன. அதனால் இந்த நடவடிக்கையை மிகக் கடுமையாகக் கண்டிக்கின்றது செம்மண். வேண்டுமென்றே சோடிக்கப்பட்ட இந்தக் குற்றச்சாட்டிலிருந்து முதல்வர் மணிவண்ணன் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்.

அவரது கைதுக்கு எதிராக அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் கட்சி, அரசியல் பேதங்களை ஒதுக்கிவிட்டு ஓரணியில் திரண்டு நிற்பதன் மூலம் தமிழர்களின் நிறத் தெரிவுச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது தலையாய கடமை.





கற்றாழைக்கான தேவை அதிகரித்ததால் சிலர் அதைத் தமது விவசாய முயற்சியாக்கினர். தோட்டமாகச் செய்து கற்றாழை வளர்த்துப் பயனடைய முன்வந்தனர். கற்றாழைக் கன்றுகளை நாட்டி, நீரூற்றி வளர்த்து அறுவடையைப் பெற முற்பட்ட போது வந்து குதித்தது கொரோனா. இதனால் கற்றாழைச் செய்கை பலவிடங்களிலும் மூச்சிழுத்துக் கிடக்கிறது. செய்கையாளர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர்.

''கொரோனா வாறதுக்கு முதல் இதுக்கு நல்ல மவுசிருந்தது. கொரோனா வர நாலைஞ்சு மாதங்களுக்கு முதல் போன வருசத்துக்கு முதல் வருச டிசெம்பரிலைதான் இவ்வளவு கண்டுகளையும் நட்டனான். வடிவா வளந்து வந்த கண்டுகள் அழகாய்ப் பூத்து நிண்டதுகள். போன வருச மழையோட தண்ணி நின்டு கொஞ்சக் கண்டுகள் அழுகிப் போச்சு. பிறகு நான் தண்ணியிறைச்சுப் புல்லுப் புடுங்கி வடிவா வளந்து தண்டுகளை வெட்டுற பருவம் வந்ததும் வெட்டுவம் எண்டு வெளிக்கிட வாங்கிறதுக்கு ஒருத்தரும் வரயில்லை.

கொரோனாப் பிரச்சினையோடை ஏற்றுமதியில்லையாம் எண்டு சொல்லி இதை எடுப்பார் இல்லை. அப்பிடியே கிடக்கு... இதைத் தேடி வந்த வெளி மாவட்டத்தாக்கள் இப்ப வாறதில்லை. யாழ்ப்பாணமிருந்து ஒன்றிரண்டுபேர் வந்து பாத்திட்டுப் போயினம். ஒருத்தரும் வாங்குவாரில்லை.

கிலோ நூறு, நூற்றியிருபது ரூபாக்குப் போனது. இப்ப இருவத்தைஞ்சு முப்பது கேக்கினம். அதுக்கும் வாங்குவாரில்லை.. பலபேர் வந்து பாத்திட்டுப் பாத்திட்டுப் போயினம். செய்ததுக்கு ஒருக்காலும் நான் குடுக்கயில்லை. மருந்தடிக்கிறது, உரம் போடுடறது எண்டு சொல்லுகினம். ஆனால் நான் அப்பிடிச் செய்யிறதில்லை. சாப்பாட்டு - மருந்துத் தேவைக்கு எடுக்கிற சாமான எண்டதாலை நான் அப்பிடியொண்டும் செய்யவில்லை...''

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யூலியஸ் தேவிகா தனது புதிய - கன்னி முயற்சி பயனற்றுப்போனதைக் கவலையுடன் கூறினார்.

200 கற்றாழைக் கன்றுகளை நாட்டி, அவற்றைப் பராமரித்து, நீர் இறைத்து வளர்த்து, களை பிடுங்கி நல்ல செழிப்பாக ஆக்கிவிட்டு விளைச்சலை ஒரு தடவையும் விற்க முடியாமல் போன சோகம் அவருடைய முகத்தில் குடிகொண்டிருந்தது.

வறண்டுபோய் புல் மண்டிக் கிடக்கின்ற அவருடை கற்றாழைத் தோட்டத்திலும் அந்தச் சோகம் வெளிப்பட்டது. ஆனாலும் அவரது முயற்சியால் நீர் பெறுகின்ற அந்தக் கற்றாழைகள் இப்போதும் சதைப் பெருக்கத்துடன் தண்டுகள் குண்டாகிச் செழித்தேயிருக்கின்றன.

தென்பகுதி மற்றும் கொழும்பிலிருந்து வந்த நிறுவனதாரர்கள், கொள்வனவாளர்கள் [illegible] இயங்குகின்ற ஒரு [illegible] கற்றாழைகள் தீவகக் கரையோரங்களில் தமாக வளர்ந்து கிடப்பதையறிந்து அங்கெல்லாம் அவை கொள்வனவு செய்யப்பட்டன. இதனாலுண்டான ஊக்கமே அல்லைப்பிட்டி யில் யூலியஸ் தேவிகா போன்ற சில கற்றாழைச் செய்கையா ளர்களைத் தோற்றுவித்தது.

அத்தோடு பெருமெடுப்பில் கற்றா ழைச் செய்கையில் ஈடுபட்டுக் கொழும்பு மற்றும் தென்பகுதிக்குக் கற்றாழையைப் பெருமளவில் ஏற்றுமதி செய்யும் திறனுடன் அல்லைப்பிட்டியில் இயங்குகின்ற தனியார் தோட்ட நிறுவனமும் இவர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருந்தது. இதனால்தான் அல்லைப்பிட்டியில் தேவிகாபோல இன்னும் சிலர் இந்தப் புதிய முயற்சியில் இறங்கினர். ஆனால், இன்றைக்கு அவர்கள் இதனால் பயனற்றுப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவி காவைவிடப் பெருமெடுப்பில் கற்றா ழைச் செய்கையில் கால்பதித்தவர் அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இந்திரன். அங்கேயுள்ள தனியார் பண்ணையைவிடத் தன்னிடம் அதிக கற்றாழைக் கன்றுகள் உள்ளன என்று அவர் பெருமைப்பட்டார். ஆனால், அவற்றை விற்க முடியாமல் உள்ள பெரும் பிரச்சினை பற்றி அவரும் கவலைப்படவே செய்தார். யூலியஸ் தேவிகாவைப் போலல்லாமல் ஒன்றிரண்டு தடவைகள் அறுவடை செய்து விற்பனை செய்த திருப்தி அவரிடம் இருந்தது.

''என்னட்டைத் தொடந்து 25, 30 கிலோ எண்டமாதிரிக் குடுத்துக்கொண்டிருக்கிற அளவுக்குக் கண்டுகள் கிடக்கு. ஆயிரம் கண்டுகளுக்குக் கிட்;ட வைச்சிருக்கிறன். கன காலத்துக்குப் பிறகு இப்ப ரெண்டு மாதத்துக்கு முதல்தான் அறுநூறு கிலோ மாதிரி வெட்டினான். 35 ரூவா போட்டுக் குடுத்தனான். அதுவரைக்கும் கொரோனாவலை கற்றாழை பிரியோசனமில்லாமப் போச்சுது. ஏற்றுமதியில்லையெண்டுசொல்லி எடுப்பாரில்லை. ரெண்டு மூண்டு மாதத்துக்கு ஒருக்காத்தான் ஒரு கண்டிலையிருந்து ரெண்டு, மூண்டு தண்டுகளை வெட்டலாம். அப்பிடி வெட்டினால்தான் தொடர்ந்து விளைச்சலெடுத்தண்டி ருக்கலாம்.

கற்றாழை செய்ய வெளிக்கிடக்குள்ள



நூறு ரூவாக்கு மேலதான் குடுத்துக் கொண்டிருந்தனான். இப்ப 35ரூவாக்குக் குடுக்கிறதுக்கே படாதபாடு படவேண்டியிருக்கு. கொண்டுபோறதுக்குப் பொமிசன் இல்லாததாலை தொகையா எடுக்கிறதில்லை. கொழும்புக் கொம்பனிக்காரர் எண்டால் பொமிசனிருக்கும் நிறைய எடுப்பாங்கள். மற்றது இஞ்சையிருக்கிற பண்ணைக்காரர் அனுமதி வைச்சிருக்கினம். அவை அனுமதியோடை குடுக்கிறவை. சிலநேரம் எங்களிட்டை வேண்டியும் குடுக்கிறவை. இப்ப அவையிட்டையும் யாரும் எடுக்கிறதில்லை. கொரோனா வந்து எல்லாருக்கும் நட்டம்தான். அதோடை போனவருசம் மழை வெள்ளம்போட்டு கற்றாழைக்கும் அழிவு. எல்லாம் அழுகிப்போச்சுது. இதெல்லாம் நான் திரும்ப உருவாக்கினது. (கைநீட்டிக் கண்டுகளைக் காட்டுகிறார்) ஆனால், இப்படிக் கொரோனாவாலை ஏற்றுமதியில்லாமலிருந்தால் கற்றாழைக்கு இனி அழிவுதான்...''

பெருந்தொற்றான கொரோனா வந்து உலகளவில் ஏராளம் விடயங்களைப் பெருமளவில் முடக்கியது. அவையெல்லாம் அனைவரது காதுகளுக்கும் எட்டின. ஆனால், பல அடிமட்ட மனிதர்களின் வாழ்வையும் அது தலைகீழாக்கியுள்ளது. அவை பெருமளவில் பேசப்படுபவையாக இல்லை. அதற்கு ஓர் உதாரணமே இந்த அல்லைப்பிட்டிக் கிராமத்து மனிதர்களின் கற்றாழைச் செய்கையும் அதை நம்பிய சீவியமும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நடந்தேறிய போர்க்குற்றம்

> இலங்கையில் சிங்களப் படையினர் தமிழ் மக்கள் மீது அத்துமீறுகிறது என்று குற்றம் சாட்டிய இந்தியா, வடக்குக் கிழக்கில் தமிழ்மொழி தெரியாத தனது படையையே களமிறக்கியது.



● நியூட்டன்

போர்க் குற்றங்கள் என்றால் என்ன என்பதற்கு உரோம் பிரகடனத்தின்படி வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களில் 5 முதன்மைத் தலைப்புகளின் கீழ் தரப்படுத்துகிறார்கள். பொதுமக்கள் மீதும் பொதுமக்களின் கட்டடங்கள் மீதும் தாக்குதல் நடத்துவது, போரில் பிடிக்கப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்தவர்களை படுகொலை செய்வது, பலவந்தமாகக் காணாமல்போகச் செய்வது, போர்க்களத்தில் சிக்குண்ட மக்களுக்கு உணவு, மருந்து, குடிதண்ணீர் போன்றவற்றைத் தடை செய்வது, சிறுவர்களைப் படையில் சேர்ப்பது ஆகியனவே அவை.

இலங்கையில் நடந்த போரில் இந்தக் குற்றங்களைப் பல தரப்பினர் மேற்கொண்டிருக்கின்றனர். இலங்கைப் படைத்தரப்பே இதில் முதன்மையானது, அதற்கடுத்து இந்தியப் படைத்தரப்பு, அடுத்து ஜே.வி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ். புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி, விடுதலைப் புலிகள் எனப் பல தரப்பினரும் இந்தக் குற்றங்களில் ஒன்றையோ பலதையோ புரிந்திருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

இலங்கைப் படைகளானவை 1971ஆம் ஆண்டிலிருந்து 1989ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜே.வி.பி. போராட்டத்தை நசுக்கியபோதும் பல்வேறுபட்ட போர்க் குற்றங்களில் ஈடுபட்டிருக்கின்றது என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு. அதற்கான தெளிவான ஆதாரங்கள் பல உள்ளன. அதேவேளை இலங்கை மற்றும் இந்திய அரசுகளால் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டு, 1983ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நீடித்த ஆயுதப் போராட்டத்தை ஒடுக்குவது என்ற பெயரில் பெரியளவு போர்க்குற்றங்களை இலங்கைப் படைத்தரப்பு நிகழ்த்தியது என்கிற குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இதைவிட இங்கு நிகழ்ந்த கலவரங்களிலும் இலங்கைப் படைத்தரப்பின் பங்கு இருந்தது. அத்தோடு இந்தக் காலப்பகுதிக்குள் வன்புணர்வுகள், ஆட்கடத்தல்கள் என்பனவற்றுக்கும் போரின் இறுதியில் அதைப் பன்மடங்கில் நிகழ்த்தியதிலும் இந்தப் படைத்தரப்பின் பங்கே முதன்மையான இடத்தைப் பிடிக்கிறது. இதற்கு அடுத்த இடம் இதே குற்றங்களை நிகழ்த்திய இந்தியப் படைத் தரப்புக்குரியது.

### இந்தியப் படைத்தரப்பின் குற்றங்கள்

இலங்கைப் படையினரைப் போலவே தமிழ் மொழி தெரிந்திராத ஓர் படையை வடக்குக் கிழக்கில் இறக்கி மிக மோசமான போர்க் குற்றங்களைச் செய்து முடித்தது இந்தியா. இலங்கையில் சிங்களப் படையினர் தமிழ் மக்கள் மீது அத்துமீறுகிறது என்று குற்றம் சாட்டிய இந்தியா, வடக்குக் கிழக்கில் தமிழ்மொழி தெரியாத தனது படையையே களமிறக்கியது. கோவில்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள், பொதுச்சந்தைகள், பொதுமக்கள் கூடும் இடங்கள் எனத் தாக்குதல் நடத்தக்கூடாது என்று சர்வதேச சட்டத்தில் வரையறுக்கப்பட்ட இடங்களில் எல்லாம் அத்துமீறித் தாக்குதல் நடத்திப் போர்க் குற்றங்களை மேற்கொண்டது இந்தியப் படை.

### ஜே.வி.பி. போர்க் குற்றங்கள்


1971ஆம் ஆண்டில் முதலாவது கிளர்ச்சியையும் 1989ஆம் ஆண்டில் இரண்டாவது கிளர்ச்சியையும் மேற்கொண்டதன் மூலம் ஜே.வி.பியினரும் போர்க் குற்றங்களை மேற்கொண்டனர். இவர்களின் போராட்டம் சிங்கள மக்களிடையே நடத்தப்பட்டதால் இந்தக் குற்றங்களால் அவர்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். ஜே.வி.பிக்கு அடுத்து 1987ஆம் ஆண்டின் பின்பான காலப்பகுதியில் வடக்குக் கிழக்குப் பகுதியில் சிறுவர்களை முதன் முதலாகக் வலுக்கட்டாயமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். படையில் சேர்த்தது. அத்தோடு இந்தியப் படையினருடன் இணைந்து இவர்கள் செயற்பட்டதால் இந்தியப் படைத்தரப்பின் குற்றங்களிலும் இவர்களுக்குப் பங்குண்டு. இந்தியா தமிழ் மக்கள் மீது நிகழ்த்திய போர்க்குற்றத்தின் பெரும்பகுதி வரத ராஜப்பெருமாள், சுரேஷ் பிரேமச்சந்திரன் மீதும் சுமத்தப்படத்தக்கது.

### விடுதலைப் புலிகள்

இலங்கை, மற்றும் இந்திய ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறை, அநீதி காரணமாக ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டாலும் தமது போராட்ட காலத்தில் விடுதலைப் புலிகளும் சில போர்க்குற்றங்களை இழைத்தனர் என்பது மறுக்க முடியாதது. 1986இல் மாற்று இயக்கங்களைத் தடை செய்தது, சிறுவர்களைப் படையில் சேர்த்தமை, சில மதத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தியமை ஆகிய போர்க் குற்றங்களை இழைத்தார்கள்.

இவ்வாறாக இலங்கையில் பல தரப்புகள் போர்க்குற்றங்களை இழைத்திருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் அடிகோலியது அரசு மற்றும் ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைகளே.

இவ்வாறிருக்க இறுதிப் போர்க்குற்றங்கள் மற்றும் பெரியளவிலான மனிதகுல மீறல்களை இலங்கை புரிந்திருந்தமை பன்னாட்டு விசாரணைக்கு அடிகோலவிருப்பதால், இலங்கை படையினர் மாத்திரம் போர்க்குற்றம் புரியவில்லை ஏனைய அமைப்புகளும் இந்தியப் படையினரும் அதையே செய்தன என்று ஒட்டுமொத்தப் போராட்ட காலத்தையும் உள்வாங்கும் வகையான எதிர்வாதத்தை முன்வைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.



நல்லூர்க் கோவிலின் பின்வீதியில் அருண் மைத்திரேயன் தலைமையில் மேற்கொள்ளப்படும் எதிர்ப்புப் போராட்டமானது, இராணுவம் மட்டுமல்ல ஏனையவர்களும் போர்க்குற்றங்களை இழைத்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருக்கிறது.

ஆனால் இங்கே கேள்வி போர்க் குற்றங்களை யார் செய்தார்கள் என்பதல்ல, நடந்த குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மை வெளிக்கொண்டு வரப்படவேண்டும் என்பதே.

மிக அண்மையில் நடந்த இறுதிப் போரில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்களை விசாரிப்பது இலகுவானதும் சாட்சியங்களைத் திரட்டுவது வசதியானதும் என்பதால் அது பற்றி விசாரணைகளை நடத்தவேண்டும் என்பதே தமிழர்கள் வலியுறுத்தும் விடயம். அதன் பின்னர் மற்றைய காலங்களின் குற்றங்கள் தொடர்பாகவும் விசாரணைகளை நடத்தட்டும். அது யார் புரிந்திருந்தாலும் அவை குற்றங்களே அவை குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதே தேவை. அதை அரசு செய்யாதபோது வெளியாட்களைக் கொண்டு செய்விக்கவேண்டிய நிர்ப்பந்தம் பாதிக்கப்பட்ட தரப்புக்களுக்கு ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் ஆரம்பம்

● என்.குமரன்

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடக்கின்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் இருக்கின்ற விறுவிறுப்பினை விட வருடா வருடம் நடக்கின்ற இந்தியன் பிரீமியர் லீக் என்று சொல்லப்படுகின்ற ஐ.பி.எல் போட்டிகள் கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்து.

முக்கியமான அனைத்து நாடுகளின் கிரிக்கட் வீரர்களையும் இந்திய தேசிய அணி வீரர்கள், வளர்ந்து வரும் உள்ளூர் வீரர்கள் எனப் பலரையும் உள்வாங்கி பெரியளவில் நடத்தப்படுகின்ற இந்த ஐ.பி.எல். போட்டியின் 14ஆவது தொடர் வெள்ளிக்கிழமை தொடங்கியது.




கடந்த வருடம் ஏப்ரல் மாதம் இடம்பெறவிருந்த போட்டிகள் இந்தியாவில் அதிகரித்த கொரோனாத் தொற்றினால் இடைநிறுத்தப்பட்டு பின்னர் ஐக்கிய அரபு ராச்சியத்தில் இடம்பெற்றிருந்தது. இந்த 13ஆவது ஐ.பி.எல். தொடரில் பலத்த போட்டிகளின் மத்தியில் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி கிண்ணம் வென்றிருந்தது.

இந்த வருடத்துக்கான 14ஆவது ஐ. பி.எல். தொடர் கொரோ அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் இந்தியாவிலேயே தொடங்கியுள்ளது. கொரோனாவைச் சமாளிக்க ஒரு சில விசேட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

**அணிகளின் விபரம்**

வழமை மாறாத போக்கில் ஒரு கிண்ணத்துக்காக எட்டுப் பலம் பொருந்திய அணிகள் மோதிக் கொள்ளவுள்ளன. அந்த வகையில் ஐந்து முறை சம்பியன் கிண்ணத்தினைத் தனதாக்கியதுடன் இறுதியாக நடந்து முடிந்த இரண்டு தொடர்களில் (2019, 2020) கிண்ணத்தினைக் கைப்பற்றி ஹெற்றிக் கிண்ணத்தினைச் சுவீகரிக்கும் நோக்குடன் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும், சர்வ தேசப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்று முற்றுமுழுதாக கவனத்தினை ஐ.பி.எல் போட்டிகளின் பக்கம் திருப்பி இந்தமுறை மும்பையிடம் இருந்து கிண்ணத்தினை தமதாக்கி கொள்ளும் முனைப்பில் எம்.எஸ்.டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், என்ன தான் பலம் பொருந்திய அணியாக தொடர்ந்து வலம் வந்துகொண்டிருந்தாலும் இறுதிநேரங்களில் மண்கவ்வி வெளியேறுவதை வழக்கமாக்கி கொண்டுள்ள விராட் கோலி தலைமையிலான ரோயல் சலேஞ்சர்ஸ் பெங்களூர் அணியும், இளம் வீரர் படையைக் கொண்டு கடந்த வருடம் இறுதி கட்டம் வரையில் தாக்கம் செலுத்தியிருந்திய போதும் இம்முறை தமது அணித்தலைவரை உபாதை காரணமாக இழந்து இந்திய அணியின் தற்போதைய நம்பிக்கை நட்சத்திரமும் இளம் அதிரடித் துடுப்பாட்ட வீரருமாகிய ரிசப் பண்ட் தலைமையில் களமிறங்கியுள்ள டெல்லி கப்பிட்டல்ஸ் அணியினரும், இரண்டு தடவைகள் கிண்ணம் வென்று மூன்றாவது முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றலாமா என்ற நோக்கில் அனுபவ வீரர்கள் பலரையும் இளம் நட்சத்திரங்களாக தற்சமயம் ஜொலித்துக் கொண்டிருக்கும் சிலரையும் உள்ளடக்கி இயன் மோர்கன் தலைமையில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும், பெயரை மாற்றியமைத்து கிண்ணம் பெறும் நோக்கில் களமிறங்க காத்திருக்கும் கடந்த வருடம் அதிரடி காட்டிய கே.எல் ராகுல் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணியினரும், அனுப வீரர் ஸ்மித்தை வெளியேற்றி இரண்டாவது முறையாக கிண்ணம் வெல்லும் முனைப்புடன் இளம் படை ஒன்றினை கட்டியமைத்து சஞ்சு சாம்சன் தலைமையில் களம் காணவிருக்கும் ராஜஸ்தான் ரோஜல்ஸ் அணியும், வெளிநாட்டு வீரர்களை அதிகம் கொண்டதும் கடந்த வருடம் பந்து வீச்சில் மிரட்டிய நடராஜனை தங்களுக்கென்று தக்கவைத்துக் கொண்டு களம் காணவிருக்கின்ற வோர்னர் தலைமையிலான சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் என இந்த எட்டு அணிகளினதும் மகா யுத்தம் மும்பை மற்றும் பெங்களூர் அணிகள் மோதும் முதலாவது ஆட்டத்துடன் தொடங்கியது.

**எட்டு அணிகளினதும் மகா யுத்தம் மும்பை மற்றும் பெங்களூர் அணிகள் மோதும் முதலாவது ஆட்டத்துடன் தொடங்கியது.**




**அதிரடிக்குப் பஞ்சமிராது**


வழமையாகவே ஒவ்வொரு போட்டிகளிலும் ஒவ்வொரு வீரர்கள் அதிரடி காட்டுவது வழமை. அவர்களை இனங்கண்டு கொள்வதும் பின்னர் இந்திய தேசிய அணியில் இடம் கொடுப்பதும் ஐ.பி.எல். போட்டிகளின் வாயிலாக இடம்பெறுகின்ற எழுதப்படாத சட்டம். கடந்த வருடமும் ஜோக்கர் பந்துகளின் மூலம் எதிரணியினரை துவம்சம் செய்து பயமூட்டி இந்திய தேர்வாளர்களின் கழுகுப் பார்வையில் சிக்கி ஆறு மாதங்களில் இன்று இந்நிய அணியில் தவிர்க்கமுடியாத வீரராக உருவெடுத்துள்ள தமிழக வீரர் நடராஜன் முதற்கொண்டு மற்றைய தமிழக வீரர்களான வருண் சக்கரவர்த்தி, வாசிங்டன் சுந்தர் மற்றும் இசான் கிஷான், சூரியகுமார் யாதவ் என பலரும் இம்முறையும் அதிரடி காட்டத் தயாரகியுள்ளதுடன்.., கிரிக்கெட்டின் கடவுள் சச்சினின் மகன் அர்ஜீன் ரென்டுல்கார் உள்ளிட்ட புதிதாக உள்வாங்கப்பட்டுள்ள உள்ளூர் அதிரடி வீரர்கள் என அனைவரது ஆட்டமும் ரசிகர்களின் கண்களுக்கு விருந்து படைக்க காத்திருக்கின்றது.

**ரெய்னாவின் வருகை**

மற்றைய அணிகளைவிட சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கென தனியானதொரு ரசிகர் பட்டாளம் உள்ளது. எனினும் கடந்த வருடம் சென்னையணியின் நம்பிக்கை நட்சத்திரமும் சின்னத் தல என்று அழைக்கப்படும் ரெய்னா சில காரணங்களுக்காக அணியிலிருந்து விலகியிருந்தார். இந்த நிலையில் கடந்த வருடம் இறுதிப் போட்டிவரைகூட சென்னையணி செல்லும் வாய்ப்பினை தவறவிட்டிருந்தது. அதற்கு காரணமாக ரெய்னாவின் விலகலும் ரசிகர்களால் கூறப்பட்டது. இந் நிலையில் இம்முறை ரெய்னா மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார். மேலும் இம்முறை சென்னையணி அதிக பலம் பொருந்திய அணியாக உருவெடுத்துள்ளது.. ஆகவே சென்னை அணிக்கு இம்முறை கிண்ணம் வெல்ல வாய்ப்பிருப்பதாகவே சொல்லப்படுகின்றது.

வழமையை விட இம்முறை தொடர் பல வீரர்களை இனங்காட்டும் என்பதுடன், இம்முறையுடன் முக்கிய வீரர்கள் சிலரையயும் ஐ.பி.எல். தொடரில் இருந்து நிரந்தரமாகவே வெளியேற்றும் என்பதில் ஐயமில்லை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"

**பூனைக் குடும்பத்திலுள்ள பெரிய விலங்கு என்று புலியை முக்கியப்படுத்தும்போது புலியினத்திலுள்ள சிறிய விலங்கான சருகுப் புலியைக் கவனத்தில் கொள்ளாது விடுகின்றமை ஏனோ...? அதுவும் புலிகளே இல்லாத யாழ்ப்பாணத்தில் இந்தச் சருகுப் புலிகளையாவது வாழவிடலாம் அல்லது பாதுகாக்கலாம் அல்லவா...?**

# பரிதாபப் புலிகள்...?

நமக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகள் பற்றியதல்ல இந்த விடயம். நமக்காகப் போராடி உயிர்க்கொடை செய்த புலிகளின் செயலுக்கு ஈடாக இங்கேதும் இருக்கமுடியாது. அப்படியிருக்க, இந்த விடயம் அன்றாடம் உயிரிழக்கும் சில புலிக ளைப் பற்றியது தான். அதுகும் சருகுப் புலிகளைப் பற்றியது.

பெருமளவானோரின் கவனத்தை ஈர்க்காத இந்தச் சருகுப் புலிகளின் சாவுகள் எனது மனதைக் குடைந்தபடியிருக்கின்றன. அவையும் உயிர்தானே என்ற பரிதாப வேட்கை என்னுள் மேலெழுந்ததால் இதை வெளிப்படுத்துகிறேன்.

மோட்டார் சைக்கிளில் வியாபாரம் நிமித்தம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் பயணித்தலையும் எனக்கு மக்கள் குடியிருப்புகள் குறைந்த பகுதி வீதிகளில் கண்ணுற்ற இந்தச் சருகுப் புலிகளின் சாவுகள் மனதைக் கனக்கச் செய்தன. வீதிகளில் விபத்துக்குள்ளாகி நசியுண்டு, உடல் பிதுங்கிப் பற்கள் வெளித் தெரியவும் கண்கள் சிதைந்தி ருக்கவும் கண்டு கலங்கியதால் கிளர்ந்த உணர்வு இது. இவற்றில் சில கரும்புலிகளைப் போலவும் உடல் சிதறிக் கிடக்கக் கண்டு மிகவும் கவலைகொண்டிருக்கிறேன்.

காட்டுக்குள் தமக்காக எல்லை வகுத்துக்கொண்டு வாழும் விலங்கினம் என்று புலிகளுக்குப் புகழாரம் சூட்டுகிறார்கள். மட்டுமன்றி இதிகாச - புராணங்கள், வரலாறுகள் - சரித்திரங்கள் மரபுவழியிலும் புலிகளின் வகிபாகம் மற்றும் தடங்கள் இருக்கின்றன. மனிதர்களுக்குப் பிடித்தமான விலங்கு எது என்று ஒரு தடவை நடந்த வாக்கெடுப்பில் (அனிமல் பிளானெட் என்கிற அமைப்பு நடத்திய இந்த வாக்கெடுப்பில் 73 நாடுகளைச் சேர்ந்த 50 ஆயிரம் பேர் வாக்களித்தனர்) நாய்களைப் பின்தள்ளிப் புலிகள் முதலிடம் பிடித்தன என்றும் அறிந்தேன்.

இத்தகைய பெருமை வாய்ந்த புலிகளின் தொகை அருகி வருவது பன்னாட்டு மட்டத்தில் பிரச்சினையாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இலங்கையில் சிறுத்தைப் புலிகளின் தொகைகூடக் குறைந்தளவில் இருப்பதாகவே கூறப்படுகிறது. அதுவும் வடக்கில் அது மிக அரிது. யாழ்ப்பாணத்தில் என்று பார்த்தால் அது இல்லவே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அப்படியிருப்பதாலோ என்னவோ நான் தினமும் காணும் இந்தச் சருகுப் புலிகளின் சாவுகள் மனதை அரிக்கின்றன.

பூனைக் குடும்பத்திலுள்ள பெரிய விலங்கு என்று புலியை முக்கியப்படுத்தும்போது புலியினத்திலுள்ள சிறிய விலங்கான சருகுப் புலியைக் கவனத்தில்கொள்ளாது விடுகின்றமை ஏனோ...? அதுவும் புலிகளே இல்லாத யாழ்ப்பாணத்தில் இந்தச் சருகுப் புலிகளையாவது வாழவிடலாம் அல்லது பாதுகாக்கலாம் அல்லவா...?

நல்லூர் முத்திரைச் சந்தியிலிருந்து செம்மணி வீதியூடாகச் சென்றுகொண்டிருந்த ஒரு சமயம் செம்மணி வீதியின் இருபுறங்களிலும் இருக்கின்ற மாயானங்களை எட்டுவதற்குச் சில நூறு மீற்றர்கள் தொலைவில் ஒரு நாள் சருகுப் புலியொன்று டிப்பர் மோதி நசியுண்டு கிடப்பதைக் கண்டேன். ஏதோ பூனையொன்று இறந்து கிடக்கின்றதுபோல என்று எண்ணிக்கொண்டே அதைக்



கடந்தபோது வளைந்து நீண்ட அதன் கூரிய நீண்ட பற்களும் உடல்வாகும் அது பூனையில்லைப் புலிக்குட்டியாக இருக்கும் என்று எண்ண வைத்தன.

அந்தச் சந்தேகத்தில் அதை அணுகியபோதுதான் அது சருகுப் புலி என்று தெரிந்தது. என்னைப் [illegible] உறுதிப்ப [illegible] நின்று

ஒளிப்படங்களும் எடுத்துச் சென்றனர். பின்னர் பத்திரிகைகளிலும் செய்திகள் வந்தன. இது நடந்து இன்றைக்கு ஒரு வருடமிருக்கும்.

இருபுறமும் வயல்வெளிகளுடைய மனிதக் குடியிருப்புகளற்ற பற்றைகளும் புதர்களும் மண்டியுள்ள அந்தப் பகுதியில் இன்னும் சில சருகுப் புலிகள் வசிக்கலாம். அங்கு அதிகரித்திருக்கின்ற மனித நடமாட்டத்தாலும் தமக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதற்காகவும் அவை வெளியே நடமாடுவது அதிகரிக்கலாம் இதனால்தான் அழிகின்றன என்று எண்ணிச் சென்றேன். ஆனால், இந்த அரிய விலங்குகளைப் பாதுகாப்பதற்கு உரியவர்கள், உயரிய பதவி வகிப்பவர்கள் ஏதாவது வழியைக் கண்டறியலாம்தானே என்றும் எண்ணத் தோன்றியது.

காரணம், நசியுண்டு கிடக்கும் அவற்றின் முகத்திலும் கண்களிலும் இழையோடியுள்ள பரிதாபம் அவற்றின் குழந்தை, குட்டிகள் பற்றியும் வாழ்வை இழந்த சோகம் பற்றியும் எனக்குள் பலவாறான சிந்தனைகளைத் தட்டிவிட்டமையே. செம்மணிச் சம்பவத்துக்கு முதலிலும்கூட எனக்கு அதே உணர்வு ஏற்பட்டிருக்கிறது.

செம்மணி வீதியில்தான் சருகுப் புலிகள் இருக்கின்றன என்றில்லை. செம்மணி வீதியில் நான் இதைக் காண்பதற்கு முன்பே குறிகாட்டுவான் வீதியில் அல்லைப்பிட்டியை அடுத்துள்ள இரண்டு, மூன்று கிலோ மீற்றர்கள் வீதியில் அடிக்கடி இந்தச் சருகுப் புலிகள் விபத்துக்குள்ளாகி இறந்துகிடப்பதைக் கண்டிருக்கிறேன். செம்மணி வீதியைவிட அதிக புலிகள் அங்கிருக்கலாம். அப்போதெல்லாம்கூட எனக்கு மேற்கண்ட பரிதாபச் சிந்தனையும் அவற்றைப் பாதுகாக்கலாம் தானே என்ற சிந்தனையும் தோன்றியிருக்கிறது.


செம்மணிச் சம்பவத்துக்குப் பின்னர், நாவற்குழி, கோவிலாக்கண்டி வீதி, மற்றும் புன்னாலைக் கட்டுவன் வீதிகளில் இந்தச் சருகுப் புலிகள் நசியுண்டு கிடக்கக் கண்டிருக்கிறேன். இவற்றால் மனிதர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் படும் என்கிறார்கள். ஆனால், மனிதர்களற்ற பகுதிகளில் அவற்றை வாழ விடலாம் அல்லவா, அல்லது பாதுகாத்து ஏற்ற இடத்தில் உயிர்வாழ வழி செய்யலாம் அல்லவா...? சிறிய மற்றும் எண்ணிக்கையில் குறைந்த அந்த உயிரினத்தில் அலட்சியம் காட்டாமலிருப்பது மனிதாபிமானத்தின் உயர்ச்சியில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை பிறந்தாலே கொண்டாட்டம்தான்..!

13

என்.குமரன்



"வருசம் வேற வருகுது.. என்ன மாதிரி ஆயத்தங்கள் போகுது?" எண்டு என்னைக் கேட்ட மகேந்திரத்தாரிட்ட, "அப்ப இந்தக் கிழமை வருசத்தைப் பற்றியே பேசலாம் என்றேன்." அவரும் உற்சாகமாக "ஓம் ஓம்..." எண்டு சொல்லிக் கொண்டு தொடங்கினார்.

"தம்பி, எங்களிட்ட இருக்கிற ஒரு பழக்க வழக்கம் என்னவெண்டால் வருசம் முழுக்கத் திருவிழா மாதிரி தினங்கள் இருக்கும்.. தைமாதப் பொங்கல்ல துவங்கி வருசம் தீபாவளி எண்டு கனக்க இருக்குது.. எண்டாலும் சித்திரை பிறந்தால்தான் எங்கடையாக்களுக்கு கை கால் வேலை செய்யத் துவங்கும்.. ஏன் சொல்லுங்கோ பாப்பம்.. அதுக்குப் பிறகுதான் வீட்டில நடக்க இருக்கிற நல்ல காரியங்களுக்கு நாள் வைப்பினை. வயல்ல எந்த எந்த மாதத்தில பயிர் நடுகிறது எண்டது வரைக்கும் முடிவு செய்வினம்..

சித்திரை பிறந்துச்சுது எண்டால் ஊரில இருக்கிற பல கோயிலுகளும் கொடியேறித் திருவிழா நடக்கும், முக்கியமா யாழ்ப்பாணத்தில மருதடிப் பிள்ளையார் கோயில் தேர் சித்திரை வருசப்பிறப்பினண்டுதான் நடக்கும்.. உப்பிடி கோயில் திருவிழாக்கள் ஒருபுறம் இருக்க கலியாணங்கள் செய்தவைக்குச் சாப்பாடு குடுக்கிறது, புதுசா வியாபாரம் தொடங்கிறது, புதுப் புதுப் புதுத் தொழிலுகளைத் தொடங்கிறது எண்டு தமிழாக்கள் வருசப் பிறப்பை அடிப்படையாக் கொண்டு உப்பிடிக் கனக்க செயற்பாடுகளை தொடங்கிறது வழமை..



இனி நான் கதைக்க வந்த விசயத்துக்கு வருவம். அந்தக் காலத்தில எங்கடையாக்களின்ர முக்கிய தொழில் விவசாயம் தானே.. அந்த விவசாயத்தில சித்திரை வருசம் பிறந்துச்சுது எண்டால் என்ன என்ன நடக்கும் எண்டு சொல்லுறன் கேளுங்கோ..

சித்திரை வருசப்பிறப்புக்கு முதல் நாள் அந்தக் காலத்து ஆக்கள் வயலுக்குள்ள பானை வைச்சுப் பொங்குவினை பொங்கி அயல் தோட்டக்காரர், வேலை செய்யிறவை எண்டு எல்லாருக்கும் குடுப்பினை.. அது முடிய வருசப் பிறப்பு வரும்.. வருசப்பிறப்பு எண்டால் சொந்தங்கள் பந்தங்கள் அண்ணன் தம்பி எண்டு எல்லாரும் ஒரு வீட்டில ஒண்டு கூடுவினை.. கூடி நல்ல சாப்பாடுகள் சமைச்சு சாப்பிட்டு ஒருடத்தில இருந்து கதைக்க தொடங்குவினை.. என்னத்தைப் பற்றி எண்டால் எந்த எந்த மாதத்தில என்ன என்ன பயிருகளை நடலாம், எந்த நட்சத்திரங்கள் வாற நாள் பாக்க வேணும்.. எண்டெல்லாம் கதைப்பினம்..

அப்பிடிக் கதைச்சுக் கொண்டிருக்கேக்க பெம்பிளையள் சொல்லுவினம் "வீட்டில கலியாணம் செய்யாமல் இருக்கிற பிள்ளைக்கும் வேளைக்கு கலியாணம் செய்து வைக்க வேணும் வருசமும் பிறந்திட்டுது எண்டு இப்பிடி நல்ல காரியங்கள் நடக்கிறதுக்கான பேச்சுகளும் தொடங்கும்.."

அதைவிட முக்கியமா சித்திரை பிறந்திச்சுது எண்டால் விவசாயிகளுக்கு இருக்கிற முக்கியமான சடங்கு என்னவெண்டால் தம்பி ஏர்பூட்டு இல்லாட்டி ஏர்மங்களம்.. அதுதான் வருசப் பிறப்பு வந்தால் முக்கியமா நடக்கிற சடங்கு.. ஏர்மங்களம் எண்டால் அந்தக் காலத்தில தம்பி வயல் பெரிய திருவிழா நடக்கிற கோயில் போலத்தான் இருக்கும். அண்ணன் தம்பி, ஊராக்கள், வழமையான வயல் வேலைகாரர் எண்டு எல்லாருமாச் சேர்ந்துதான் இந்த ஏர்மங்களம் ஏர் பூட்டு விழாவைச் செய்வினை.. இந்த ஏர் மங்களம் செய்யிறது வருசம் பிறந்து ரண்டு மூண்டு நாளில செய்வினை.

எங்கட ஊரில அம்பனை வயலிலதான் செய்யிறதுகூட.. அந்தண்டு பன்னாலை ஆக்கள், அளவெட்டி ஆக்கள் எல்லாரும் சேர்ந்துதான் செய் வினை.. ஒரு நேரத்தைப் பார்த்து அந்த நேரத்துக்கு வரச் சொல்லுவம்.. ஏர் பூட்ட வெளிக்கிட்டம் எண்டால் வெடி சுடுவினை.. வெடி சுட்டால் மற்ற ஆக்களும் எல்லாம் ரெடி ஆகீட்டு எண்ட அர்த்தத்தில வருவினை.. அம்பனை வயலில ஐம்பது பேர் தோட்டம் செய்தால் ஐம்பது சோடி மாடு நிக்கும்.. ஏனெண்டால் உழவு செய்யிறதுக்கு வச்சிருப்பினை கட்டாயம் .. கமக்காரரும் எல்லாரும் வெள்ளை வேட்டி சால்வை கட்டிக் கொண்டு தலைப்பாகை எல்லாம் கட்டிக் கொண்டுதான் நிப்பினை.. பாக்க சும்மா அந்தமாதிரி இருக்கும் வயலை.. "திருவிழா தோத்துப் போடும்.."

## வெளுத்துவாங்கும் மகேந்திரத்தார்



விடியவில வயலுக்குப் போக முதல் கோயில்ல போய் கற்பூரம் கொழுத்தி தேங்காய் அடிச்சுப் போட்டு, ஏர்மங்களம் செய்யிறதுக்குத் தேவையான நிறைகுடச் சாமானுகள், கலப்பை, எரு, நுகம், நொச்சித்தடி எண்டு எல்லாத்தையும் கொண்டு வரிசையா வருவினை.. வந்தவை தங்கட தங்கட காணியளில உழவு மாடுகளைக் கொண்டு வந்து விட்டிட்டு நல்ல நேரத்தில சரியான வளத்துக்கு வடக்கு விட்ட மாட்டில ஏர் பூட்டி கிழக்குப் பக்கமா மூண்டு வளையம் சுத்துவினை.. தங்கட தங்கட சொந்தக் காணியளிலதான் பூட்டுவினை.. துடக்குகள் இருந்திச்சு எண்டால் அந்தக் காணிக் காரர் ஏர்பூட்டமாட்டினை ஏனென்டால் மங்களகரமான விசயம் எண்டதால அப்பிடிச் செய்வினை.. இந்த வழமையெல்லாம் எங்கட அப்பா, அப்பான்ர அப்பா காலத்தில இருந்தது.. அப்பிடியெண்டால் 100 வருசத்துக்கு முதல் இருந்த வழமையள் இது.. இண்டைக்கு ஒண்டும் இல்லை.

ஏர்பூட்டி முடிய வீட்ட வந்து மாட்டை கொட்டில்ல கட்டமாட்டினை வெளியில விட்டிருப்பினை.. கமக்காரரின்ர மனிசி குல்லத்திலை நெல்லுக் கொண்டுவந்து மாட்டுக்கு குடுப்பா, மாடும் நல்ல வடிவா சாப்பிடும்.. பிறகு பொங்கல் பொங்கி வந்திருக்கிற வேலைகாரர், சொந்தக்காரர் எல்லாருக்கும் சாப்பாடு குடுப்பினை.. சாப்பாடு எல்லாம் சாப் பிட்டு முடிய கமக்காரர் என்ன செய்வார் எண்டால் வந்திருக்கிற ஆக்கள் எல்லாரையும் கூப்பிட்டு கைவிசேசம் குடுப்பார்.. அப்பிடி சந்தோசமா முடியும் இந்த ஏர்பூட்டு.

சித்திரை வருசப் பிறப்புக்கு, எங்கட தமிழாக்களின்ர பாரம்பரிய விளையாட்டுகளும் நடக்கும்.. கைக் கொடிச்சவாரி, ரோட்டுச் சவாரி, வண்டில் சவாரி எண்டு சவாரியள் விதம் விதமா ஒவ்வொரு இடங்களிலயும் நடக்கும். அதேபோல சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் எண்டு அதுகளும் ஒவ்வொரு கழகங்கள், சங்கங்களால வைப்பினை.. அதைவிட முக்கியமா போர்த் தேங்காய் அடிக் கிற விளையாட்டு நடக்கும்.. அது வருசப் பிறப்பண்டு கோயிலடியள், மைதானங்கள் சில இடங்களில பெடியள் வீடுகளிலையும் விளையாடுவாங்கள்.. அதேபோல வருசத்தோட அண்டி கோழிச் சண்டையும் சில இடங்களில நடக்கும்..

வருசம் பிறந்திச்சுது எண்டால் முந்தின எங்கடயாக்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான்.. வீடுகளுக்குப் போய் பலகாரங்கள் குடுக்கிறது.. கைவிசேசம் வாங்கிறதுக்குப் போறது.. சொந்தங்களைப் புதுப்பிக்கிறதுக்குப் போறது எண்டு வருசம் அமோகமா இருக்கும்..

இண்டைக்கு எங்க பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் எல்லாம் அருகிக் கொண்டு போய், வருசப்பிறப்பு வழமையான ஒரு நாள் மாதிரி வந்திட்டுது.. அதிலையும் இந்த முறை கொரோனா வேற வந்து எங்கட சனத்தை சிப்பிலியாட்டுது.. இந்த வருசத்தோட கொரோனாவும் ஓரளவுக்கு எண்டாலும் குறைஞ்சால் சந்தோசம்தான்.." என்று பெருமூச்சு விட்டார்.

புதுவருடப் பாரம்பரியங்கள் தொலைந்து போனதைப் போலவே, தொடக்கத்தில் இருந்த மகேந்திரத்தாரின் உற்சாகமும் வடிந்துபோனது.

(தொடரும்)

**சித்திரை பிறந்தால்தான் எங்கடையாக்களுக்கு கை கால் வேலை செய்யத் துவங்கும்.. ஏன் சொல்லுங்கோ பாப்பம்.. அதுக்குப் பிறகுதான் வீட்டில நடக்க இருக்கிற நல்ல காரியங்களுக்கு நாள் வைப்பினை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெங்குச் செய்கையை ஊக்குவிக்கும் தேங்காய் எண்ணெய் குழறுபடி!

■ ஸூடோ ஸ்வாமி ■



எதிர்வரும் புது வருடப் பிறப்பை கொண்டாடுவதற்கு இன வேறுபாடு இன்றி நாட்டு மக்கள் தயாராகி வருகின்றார்கள். கடந்த வருடம் வருடப் பிறப்பு நிகழ்ந்தபோது நாடு முழுமுடக்கத்தில் (லொக்டவுண்) வைக்கப்பட்டிருந்ததால், கொண்டாட்டத்தினைப் பற்றி நினைத்தும் பார்த்திருக்க முடியவில்லை. எனினும் இம்முறை ஒப்பீட்டளவில் நிலைமை முன்னேற்றம் என்பதால், புத்தாண்டு பரபரப்பு களைகட்டத் தொடங்கியிருக்கிறது. கொரொனா தொற்றுடனான சூழலில் புத்தாண்டு அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்கு ஏதுவாக சுகாதார அமைச்சும் தனது பங்கிற்கு புதுவருட கொண்டாட்டங்களின்போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து வழிகாட்டி குறிப்பொன்றினை வெளியிட்டிருக்கின்றது.



பிறக்கவுள்ள பிலவ வருடம் என்ன என்ன சங்கதிகளை தாங்கி வரப்போகின்றது என்ற எதிர்பார்ப்பில் இருக்க, ஊடகங்கள் தாங்கிவரும் செய்தி ஒன்று சங்கடத்தினை தோற்றுவித்திருக்கிறது. நாட்டு மக்கள் பண்டிகைக்குத் தயாராகும் சூழலில், சந்தையில் கிடைக்கக்கூடிய தேங்காய் எண்ணெய் தொடர்பில் அவதானமாக இருக்கும்படியான அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த சில வாரங்களாக இந்த விவகாரம் சூடாக உள்ள நிலையில், உடனடியாக நடைமுறைக்குவரும் வரையில் பாம் எண்ணெய் இறக்குமதியைத் தடைசெய்யவும் அரசு தீர்மானித்திருக்கிறது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் தொகுதிகள் சிலவற்றில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அதிகமான அளவில் அவ்லாரொக்சின் என்னும் நச்சுப் பதார்த்தம் இருப்பது ஆய்வுகூடப் பரிசோதனைகளிலிருந்து கண்டறியப்பட்டிருந்தது. முதற்கட்டப் பரீட்சிப்பு நடைபெற்று குறித்த நச்சுப் பதார்த்தத்தின் அளவு அதிகம் என்பது தெரியப்படுத்தப்பட்ட நிலையில், குறித்த முடிவை உறுதிப்படுத்துவதற்காக இரண்டாம் பரீட்சிப்பும் இடம்பெற்றிருந்தது.

முதலாம் பரீட்சிப்பின் பின்பு குறித்த தரம் குறைவான தேங்காய் எண்ணெய் தொகுதிகளை மீள-ஏற்றுமதி செய்யுமாறு குறித்த இறக்குமதி நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது பரிசோதனையிலும் நச்சுப் பதார்த்தத்தின் அளவு அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகம் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னணியில், குறித்த தொகுதிகளை மீள ஏற்றுமதி செய்யுமாறு சுங்கத் திணைக்களத்தினால் பணிக்கப்பட்டிருக்கிறது. எனினும் இரண்டாவது பரிசோதனை முடிவுகள் வெளி வரமுன்பதாகச் சர்ச்சைக்குரிய தேங்காய் எண்ணெய் தொகுதிகள் பொதுமக்களின் புழக்கத்திற்கு விடப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் நிலையிலேயே தேங்காய் எண்ணெய் சந்தை சூடு பிடித்திருக்கிறது.

அகில இலங்கை தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களினால் ஊடகங்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட இந்தத் தரமற்ற தேங்காய் எண்ணெய் விவகாரத்தில், இறக்குமதி செய்யப்பட்ட 13 கொள்கலன்கள் சந்தைக்குள் விடப்பட்டிருப்பதாக குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இந்த நிலையில், அவ்லாரொக்சினினால் மாசுபடுத்தப்பட்டதென கருதப்படும் தேங்காய் எண்ணெய் கொண்டகொள்கலன்கள் இரண்டு தங்கொட்டுவ மற்றும் தம்புள்ள பகுதிகளில் கைப்பற்றப்பட்ட நிலையில், அவற்றிலிருந்து பெறப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

இதேவேளை தரமற்ற தேங்காய் எண்ணெய்யைக் கொண்டுள்ள ஆறு கொள்கலன்களை மீள மலேசியாவிற்கு அனுப்ப இலங்கை சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**நாடாளுமன்றிலும் தேங்காய் எண்ணெய்!**

சந்தையில் உள்ள தேங்காய் எண்ணெயின் தரம் தொடர்பான நிச்சயமற்ற தன்மை, கடந்த செவ்வாய்நாக்கிழமை நாடாளுமன்றிலும் பேசு பொருளாகியிருந்தது. எதிர்க்கட்சித் தலைவரான [illegible] ஒன்றுக்குப் பதிலளிக்கையிலே வர்த்தகத்துறை அமைச்சரான பந்துலகுணவர்த்தன தேங்காய் எண்ணெய் இறக்குமதியோடு சம்பந்தப்பட்ட விவரங்களைச் சபைக்குத் தெரியப்படுத்தினார்.

வருடாந்தம் மெற்றிக்தொன் கணக்கில் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்வதை வெளிப்படுத்திய வர்த்தக அமைச்சர், இறக்குமதி செய்யப்படுவதில் பாதியளவு வீட்டுத் தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகையில் மிகுதி கைத்தொழில் துறைக்கு பயன்படுத்தப்படுகிறது. 12,798 மெற்றிக்தொன் தேங்காய் எண்ணெய் 2017ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்டிருக்கையில், 2018ஆம் ஆண்டில் அது 10,913 மெற்றிக்தொன் ஆக இருந்திருக்கிறது. 2019ஆம் ஆண்டில் மாத்திரம் 44,626 மெற்றிக்தொன் தேங்காய் எண்ணெய் தருவிக்கப் பட்டிருக்கிறது.



**நாட்டு மக்கள் பண்டிகைக்குத் தயாராகும் சூழலில், சந்தையில் கிடைக்கக்கூடிய தேங்காய் எண்ணெய் தொடர்பில் அவதானமாக இருக்கும்படியான அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது**

**அவ்லாரொக்சின் பதார்த்தம்**

அவ்லாரொக்சின், பயிரிடப்படும் தாவரங்களில் காணப்படும் சிலவகை பூஞ்சணங்களினால் விடுவிக்கப்படும் ஒருவகை நச்சுப் பதார்த்தம் ஆகும். சோளம், நிலக்கடலை, தானியங்கள் மற்றும் தேங்காய் என்பவற்றில் வாழக்கூடிய அஸ்பேகிலஸ் பிலேவுஸ் மற்றும் அஸ்பேகிலஸ் பராசிரிகஸ் வகை பூஞ்சணங்களினால் இது உற்பத்தி செய்யப்படுகிறது.

சூடான மற்றும் ஈரப்பதனான இடங்களில் அபரிமிதமாகக் காணப்படும் இந்த வகை பூஞ்சணங்களின் தொற்றுக் காரணமாக உணவுப் பயிர்கள் விளை நிலத்திலோ, அறுவடையின் போதோ அல்லது சேமிப்பின் போதோ பாதிக்கப்ப டலாம். இந்த அவ்லாரொக்சினானது புற்றுநோயை உருவாக்கக்கூடிய ஒரு கூறாகக் காணப்படுகின்றது.

அவ்லாரொக்சினில் பல வகைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயலவர்களை இழந்த ஈழத் தமிழர்

வி.அருணாசலம்

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழரின் பூர்வீக நிலங்கள் என்பதும் தமிழர் ஒரு தேசிய இனம் என்பதும் உண்மையே இருப்பினும் ஈழத் தமிழர்கள் தம்மை உரியவாறு கட்ட மைத்துக்கொள்ளவில்லை என்பது யதார்த்தத்தில் புரிகிறது. அடிப்படையில் நாட்டுப்பற்றில்லாத ஒரு மக்கள் கூட்டமாக ஆக்கப்பட்டுவிட்டதும், பிறப்பு வீதம் மிகவும் குறைந்த ஒரு சிறுபான்மை இன மாக அருகி வருவதும் எதிர்காலத்தில் ஈழத் தமிழருக்கு இருக்கக்கூடிய சவால்களாகும்.

**யார் அயலவர்கள்...?**

ஈழத் தமிழர்களின் அயலவர்கள் இலங்கைத் தீவுக்குள் வசித்து வருகின்ற சிங்கள மக்களே. சிங்கள-தமிழ் மக்கள் இணைந்து வாழும் தன்மை பிரித்தானிய ஆட்சிக்காலத்திலேயே இல்லாது போயி ருந்தது. சிங்கப்பூர், மலேசியாவில் கையா ண்ட நிர்வாக வழிமுறைகளையே பிரித்தா னியர்கள் இலங்கையிலும் கையாண்டார்கள்.


அவர்களுக்குத் தேசியப் பற்றுள்ள சுதேச மக்கள் எப்போதும் எதிரிகளாக இருந்த மையால் சிறுபான்மை இனமான தமிழ்ப் பெரும்புள்ளிகளைத் தமது நிர்வாகத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொண்ட னர். இதனால் சிறுபான்மையினர் தமது முதலாளிகளின் முடிக்கு விசுவாசமாக இருந்தார்களே தவிர, தாம் வாழும் நாட்டுக்கு விசுவாசமாக இருக்கவில்லை.

''வைட் கொலர் ஜொப்'' எனக் கூறப்படு கின்ற ஆட்சி அதிகாரத் தொழிலைப் பின்பற்றுவதில் தமிழர்களில் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினர் அக்கறை செலுத்தினர். சிங்களவர்களைச் சிங்கள பௌத்தம் என்ற கட்டமைப்புக்குள் அநகாரிக தர்மபால போன்ற சிலர் வழிநடத்தினர். இவர்கள் பிரித்தானியரை எதிர்க்கும்போதெல்லாம் பிரித்தானிய நிர்வாகம் பாதிக்கப்பட்டு விடாதபடி தமிழ் அரச ஊழியர்கள் அவர்களுக்குச் சேவகம் புரிந்தனர். இதனால் வெள்ளைக்காரருடன் இணைந்து தம்மைத் தமிழர்கள் ஒடுக்குகின்றார்கள் என்ற பொது அபிப்பிராயம் சிங்கள மக்களிடம் வளர்ந்தது. இதனால் தமிழர்கள் தமது அயலவர்களான சிங்களவரின் உறவை எப்போதோ இழந்தனர்.

**தமிழ் நாட்டுத் தமிழரின் உறவு**

இலங்கை சுதந்திரமடைந்த மறு ஆண்டே (1949) பிரித்தானியர் காலத்தில் தோட்டக்கூலிகளாகத் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட ஏறத் தாழ பத்து லட்சம் மக்களைத் திருப்பி அனுப்பவேண்டும், அவர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்கப்படக்கூடாது என இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா தலைமையிலான அப்போ தைய அரசு முடிவெடுத்தபோது வடக்குக் கிழக்குத் தமிழரின் முதலாவது கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டது. அதன் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் செயற்பட்ட விதம் தவறா னது எனக்கூறி அதே ஆண்டில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைத் தொடங்கிய எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தாலும் மலையகத் தமிழருக்கென எந்தப் பாதுகாப்பையும் வழங்க முடியாதுபோயிற்று. ஜி.ஜி. பொன்னம்பலம் டி.எஸ். சேனநாயக்காவுக்குச் சார்பாக இருந்ததுபோல செல்வாவும் அவருக்குச் சார்பாகவே செயற்பட்டார். இன்றுகூட அரசியல் நெருக்கடிகள் வரும்போது மாவை சேனாதிராசா, சம்பந்தன் போன்றவர்கள் தமிழ் நாட்டுத் தமிழர்கள் எமது தொப்புள்கொடி உறவுகள் என்று உதட்டளவிலேயே கூறி வருகின்றனர். அப்படிக் கூறினாலும் உண்மை அவ்வாறல்ல.

தமிழ்நாட்டுத் தமிழருடன் உண்மயான தொப்புள் கொடி உறவிருந்திருந்தால் இலங்கையிலும் அக்காவின் மகளைத் திருமணம் செய்து அம்மம்மாவை மாமியாக உறவு மாற்றியிருப்பார்கள். 1983 இனக்கலவரம் தொடங்குவதற்கு முன்னர் ஜி.ஜி.பொன்னம்பலம், செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஆகியோர் தமிழ்நாட்டுத் தலைவர்களின் முழு ஆதரவைப் பெற்றிருக்கவேண்டும். அது நடக்கவில்லை.




கலவரத்தின் பின்னர் அமிர்தலிங்கம் போன்றவர்கள் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தார்களே தவிர தமிழ்நாட்டுத் தமிழர்களின் ஆதரவை முழுமையாகப் பெறக்கூடிய அரசியல் கட்டமைப்பையோ, புதிய செல்நெறி ஒன்றையோ வகுத்திருக்க வில்லை. சிங்களவன் காட்டுமிராண்டி அல்லது கெட்டவன் என்று தமிழகத் தலைவர்களுக்குக் கூறிக் காய் நகர்த்துவது இவர்களின் நாடாளுமன்ற அரசியலுக்குப் போதுமானதாக இருந்தது. அவர்களது காலத்தின் பின்னரும் பழநெடுமாறன், வைகோ, சீமான், தொல் திருமாவளவன் போன்றோரை வைத்துத் தமிழ் நாட்டுத் தமிழர்களைக் கையாள முயன்றதால் ஆங்காங்கே நான்கு பேரின் உறவிருந்ததே தவிர, எட்டுக்கோடித் தமிழரையும் ஒன்று படுத்த முடியவில்லை.

> **வெள்ளைக் காரருடன் இணைந்து தம்மைத் தமிழர்கள் ஒடுக்கு கின்றார்கள் என்ற பொது அபிப்பிராயம் சிங்கள மக்களிடம் வளர்ந்தது. இதனால் தமிழர்கள் தமது அயலவர்களான சிங்களவரின் உறவை எப்போதோ இழந்தனர்**

ஈழத் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் நாட்டின் அரசியல்வாதிகளை மட்டும் நம்பாது அங்குள்ள விழிப்பு ணர்வு அமைப்புகளையும் சமூக மட்டத் தலைவர்களையும் பொது அமைப்புகளையும் கையாண்டி ருந்தால் இலகுவாகத் தமிழ்நாட்டுத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிருக்க முடியும்.

**முஸ்லிம்களின் உறவு**

ஈழத் தமிழரின் இன்னோர் அயலவரான முஸ்லிம்களின் உறவையும் ஈழத் தமிழர்கள் இழந்துவிட்டனர். வடக்குக் கிழக்கில் முஸ்லிம்களின் இனப்பெருக்கம் அதிகமாக இருப்பதால் எதிர்காலத்தில் அவர்களின் வாழ்வுக்காகத் தமிழர் தாயகப் பூமியைப் பெருமளவில் இழக்கவேண்டிய நிலை ஏற்படும்.

தமிழர் நிலங்களில் குடியேறப் போதியளவு தமிழர்கள் இல்லை என்பதே யதார்த்தமாக உள்ளதால் நிலங்கள் முஸ்லிம்க ளிடம் இழக்கப்படுவது தவிர்க்கப்படவியலாதது. இதை விடத் தமிழர்கள் மத்தியில் பல தலைவர்கள் கிளம்பி வந்துகொண்டிருப்ப தால் வடக்குத் தமிழர், கிழக் குத் தமிழர் எனப் பிரதேச வாதப் போட்டியைத் தாண்டி வடக்குத் தமிழர் வடக்கிலும் கிழக்குத் தமிழர் கிழக்கிலும் தமக்குள்ளே முரண்படும் நிலை ஏற்பட்டுள் ளது. இதனால் தமிழர்கள் தமது சொந்த ஊரிலேயே அயல வர்களை இழக்கும் துர்ப்பாக் கிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலைத் தற்போ துள்ள தமிழ் அரசியல் தலை வர்களை வைத்தோ, புதியவர்களை உருவாக்கியோ சீர்செய்துவிட முடியாத அளவுக்குத் தமிழருக்கிடையிலான பகைவேர் மிக நீண்டதூரம் சென்றுவிட்டது. ஈழத்தமிழருக்கு அயலவர்களாகத் தமிழரே இல்லாத நிலை ஏற்பட்டுவிட்டதற்குத் தூரநோக்கற்ற தமிழத் தலைவர்களின் செயற்பாடே காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருச மேற்சட்டை!

நாகேந்திரராசா

சித்திரை வருடப்பிறப்பு வரும்போதுகூடவே வரும் சிறுபராய ஞாபகம் இது. அனுபவப் படிக்கட்டுகளில் அமர்ந்து யோசிக்கும்போதெல்லாம் புன்முறுவலை உண்டாக்குவது. கொண்டாட்டங்கள், பண்டிகைத் தினங்களில் புத்தாடை அணிவதென்பது தமிழர் தம் பாரம்பரியம். தைப்பொங்கல் தொடங்கி தீபாவளி வரையும் இது இருக்கும்.

மருத்துநீர் தேய்த்து நீராடிப் புத்தாடை அணியும் சித்திரை வருடப் பிறப்பு இவற்றில் வித்தியாசமானது. கைவிசேடம் என்கிற பணம் பெறும் சம்பிரதாயம் இருப்பதாலோ என்னவோ சிறுவயதில் சித்திரை வருடம் எமக்கெல்லாம் உச்ச மகிழ்வளிக்கும் நாளாக இருந்தது.

அன்றும் அப்படித்தான் சித்திரை வருடப் பிறப்பு. அதிகாலையில் எழுந்து அனைவரும் மருத்துநீர் வைத்து நீராடியிருக்க, நேரம் தாழ்த்தி எழுந்த



> “அயலிலுள்ள முருகன் கோவிலை அடைந்து குனிந்து கும்பிட்டபோதுதான் தெரிந்தது நான் காற்சட்டைபோடாமல் வந்த விடயம்

சிறுவனான நானும் பின்னர் எஞ்சியி ருந்த மருத்துநீரைத் தேய்த்து நீராடினேன். நீராடி முடித்தவர்கள் பளிச்சிடும் புத்தாடைகளுடன் மிளிர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் எனக்கும் புதிய ஆடையை அப்பா வாங்கி வைத்திருப்பது ஞாபகத்துக்கு வந்தது. அவசர அவசரமாய் அதைத் தேடி எடுத்துப் போட்டுக்கொண்டேன். ‘அட்டா, என்ன அழகான சேர்ட்டு’ பளிச்சிடும் வெள்ளையாயிருந்தாலும் தொட்டுப்பார்க்கும்போது தான் தெரிந்தது வெள்ளிக் கலரில் இடையிடையே மினு மினுக்கும் கோடுகளும் இருந்தன. அப்பா எனக்காய் எடுத்து வைத்திருந்த அழகான அந்தச் சேர்ட் குறித்துப், “பிள்ளைக் கெடுத்த மார்ட்டின் சேர்ட்” என்று முதல் நாளில் இருந்தே பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அணிந்து கொண்டு அதன் அழகில் மயங்கிக் கிடந்த எனக்கு அந்தச் சேர்ட் அளவில் சற்றுப் பெரிதாயிருந்தாலும் அது அவ்வளவாக உறுத்தவில்லை. “என்னப்பா இந்தப் பெரிய சேர்ட் எடுத்திருக்கிறீங்கள் பிள்ளைக்கு” என்றார் அம்மா. அவர் சென்னவுடன் தான் பார்த்தேன் சேர்ட் முழங்காலுக்குக் கீழே நீண்டிருந்தது. “சும்மா இரப்பா புள்ள வளர, வளரப் போடுவான்” என்றார் அப்பா. இப்படியிருக்க, என்னைத் தேடி நண்பர்கள் வீட்டுக்கே வந்துவிட்டார்கள். அனைவரும் புத்தாடைகள் அணிந்திருந்தார்கள். அவர்களுடன் ஊர்சுற்ற நானும் புறப்பட்டேன்.


புதுவருடத்தன்று முழு ஊருமே களைகட்டியிருந்தது. வீதியில் காணும் அனைவரும் புத்தாடையில் ஜொலித்தனர். அயலிலுள்ள முருகன் கோவிலை அடைந்து குனிந்து கும்பிட்டபோதுதான் தெரிந்தது நான் காற்சட்டைபோடாமல் வந்த விடயம். திரும்பவும் குனிந்து பார்த்தேன். ஆம் நான் காற்சட்டை போடவில்லை! நீளச் சேட்டு முழங்கால் வரை மறைத்திருந்ததால் காற்சட்டை அணியும் சிந்தனையே வரவில்லை...!

---

# “ஒருசிறு புள்ளின் இறகு”

## வாழ்வின் ஒவ்வொரு கணங்களும் கவிதையே!

வேலணையூர் தாஸ்



ராஜாஜி ராஜகோபாலன் புனைகதை எழுத்தாளர் ஆகவே பெரிதும் அறியப்படுகிறார். 2014இல் “ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம்” என்ற கவிதைத் தொகுதியைத் தந்திருந்தார். நவம்பர் 2020இல் “ஒரு சிறு புள்ளின் இறகு” என்று கவிதைத் தொகுதியையும் தந்திருக்கிறார். 2014 வெளியான கவிதைகளிலிருந்து கருத்தாலும் அமைப்பாலும் முற்றிலும் மாறுபட்ட கவிதையை தந்திருக்கிறார் என்பது சில கவிதைகளை படித்துமே புரிந்து விடுகிறது .காலமும் வாசிப்பும் ஒரு கவிஞனை எவ்வளவு மாற்றி விடுகிறது என்பதற்கு இந்த தொகுதி சிறந்த உதாரணம். ஒரு மூத்த கவிஞர் இன்றைய காலத்தின் கவிதைகளைத் தந்திருக்கிறார்.

முன்பெல்லாம் கவிதை எழுதுதல் என்பது மிகக் கடுமையான பணி என ஒரு கருத்து இருந்தது. பாடுபொருள் கனதியாக அமையவேண்டும், அதாவது மொழி. சுதந்திரம் , விடுதலை என்றவாறு உணர்ச்சியான விடயங்களே எழுதப்படவேண்டும் என்றெல்லாம் ஒரு நடை முறை இருந்தது என நினைக்கிறேன். ஆனால் இன்று சில சாதாரண தருணங்களே கவிதைகள் ஆகின்றன.. ராஜாதி ராஜ கோபாலன் என்கின்ற இந்த மணற்காடரும் வாழ்வில் இடம்பெறுகின்ற மிக எளிய தருணங்களையே கவிதைகள் ஆக்கியிருக்கிறார். மிக மிக எளிய நடையில் வாழ்வின் தருணங்களை எழுதிப் போனாலும் நினைவெல்லாம் கவித்துவம் நிறைந்திருக்கும் ஒருவராலேயே இத்தகைய அழகிய கவிதைகளை தர முடியும்.


ஒரு சிறு பிள்ளைக்கு பிறந்தநாளுக்கு தொப்பியை பரிசளித்தல், பாட்டுப் போட்டி ஒன்றில் சிறுமிக்கு பரிசளித்தல், நாவற்பழம் விற்கும் பெண்ணை பற்றிய நினைவுகள், பேருந்துக்குக் காத்திருத்தல் போன்ற சாதாரண நிகழ்வுகள் இங்கு கவிதையாகியிருக்கின்றன. ராஜகோபாலன் ஒரு சிறந்த கதைசொல்லி என்பதால் சின்னஞ்சிறு கதைகளாகவே பல கவிதைகள் காட்சியாகின்றன. ஆனாலும் அவை சொல் முறையால் தேர்ந்த கவிதைகள்தான்.. ஓரிடத்தில் இவ்வாறு சொல்கிறார் “பத்து மணிக்கு படுக்க போய் விடுவீர்களா படுக்க இல்லை படுக்கைக்கு பிறகு? புத்தகம் வாசிப்பேன் புத்தகம் வாசித்ததும் படுத்து விடுவீர்களா? அதை புத்தகத்திடம் கேளுங்கள்” இவ்வாறு சாதாரண ஓர் உரையாடலைக்கூட கவித்துவமாக எழுதிப் போகிறார் மணற்காடர். சொல் முடிந்த பின்பும் தொடர்கின்ற சிந்தனைக்கு வழிவகுப்பதாக கவிதைகள் அமைந்திருப்பது இந்தத் தொகுப்பின் சிறப்பு.

தனது முன்னைய தொகுப்புகளில் ராஜாதி ராஜ கோபாலன் என்ற பெயரிலேயே எழுதிய கவிஞர் இதில் தனது பெயரை மணற்காடர் என மாற்றியிருக்கிறார். பருத்தித்துறையின் புலோலி என்னும் கிராமத்தில் பிறந்து கனடாவுக்கு புலம்பெயர்ந்து சென்று அந்நாட்டு சட்டத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கனடாவில் வாழ்ந்து வரும் ராஜாதி ராஜ கோபாலன் புலம்பெயர்ந்து சென்று இத்தனை வருடங்கள் சென்ற பின்னும் தன் தாயக நினைவுகளை மறக்காது இருக்கிறார். தான் வாழ்ந்த அந்தக் கடலும் கடல் சார்ந்த மணல் நிலத்தின் ஞாபகங்கள் இந்த புத்தகத்தில் இருக்கும் கவிதைகளில் நிறைந்தி ருக்கிறது அதனல் தான் அவர் மணற்காடர் ஆகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நுளம்புத் தத்துவம்

**வழக்கமான திரைப் படங்கள் போல இல்லாமல் வாழ்க்கையை அதன் போக்கிலேயே கமராவுக்குள் உள்வாங்கியிருப்பதுதான் படத்தின் சிறப்பு**















இது ஒரு திரைப் படம் என்ற அனுபவத்துக்கோ அல்லது படம் பார்க்கிறோம் என்ற உணர்வுக்கோ இடம்கொடுக்காமல் நல்ல கதையுடன்கூடிய, சலிப்புத் தட்டாத படம் ஒன்றைப் பார்க்க விரும்பினால், நிச்சயம் நீங்கள் இந்த ''நுளம்புத் தத்துவத்தைத்'' (''மொஸ்கிற்றோ பிலோஷொபி'') தவறவிடக்கூடாது. விறு விறுப்பில்லாத ஆனால், சலிப்பை ஏற்படுத்தாத வைத்த கண் வாங்காமல் பார்க்கும் விதத்தில் எடுக்கப்பட்டுள்ள இந்த நுளம்புத் தத்துவம் திரைப்படமாக இருந்து போதிக்கும் வாழ்வியலும், யதார்த்தமும் மிக ஆழமானது.

அதை மிக எளிமையாகத் திரைக் கோர்வை யாக்கியிருப்பதுதான் கைதட்டலுக்குரியது. 2019ஆம் ஆண்டில் வெளியாகிய இந்தப்படம் 70 நிமிடங்களில் தனது நோக்கத்தை நிறைவேற்றி யிருக்கிறது.

நாற்பது வயதை எட்டிவிட்ட நண்பர் ஒருவருக்கு அப்போதுதான் திருமணம் வாய்க்கிறது. நண்பர்களுக்குத் திருமணப் பத்திரிகை கொடுப்பதற்காகப் புறப்படும் அவர், ஒரு நண்பரின் வீட்டில் மது அருந்தும் நிகழ்வை ஒழுங்குபண்ணி அவருடைய வீட்டுக்கு மற்றைய இரண்டு நண்பர்களை அழைக்கிறார். மது அருந்திக்கொண்டே தனது திருமணம் குறித்து நண்பர்களுக்குத் தெரியப்படுத்தலாம் என்பது அவரது திட்டம். அடுக்குமாடிக் குடியிருப்பில் மனைவி மகனுடன் குடியிருக்கின்ற நண்பரின் வீட்டுக்குச் சென்று அதே குடியிருப்பிலுள்ள மற்றொரு நண்பரையும் அழைத்துப் பிறிதொரு இடத்திலுள்ள மற்றொரு நண்பரையும் அழைத்து அனைவரும் புகைத்தலும் மது அருந்துவதுமாகக் கதை வளர்க்கிறார்கள். சுவாரசியமாகவும், யதார்த்தமாகவும், அவர்களின் நட்புப் பிணைப்பாலும் நீளும் சம்பாசனைகளே படத்தைத் தூக்கி நிறுத்தும் தூண்கள். அந்த ஓர் இரவில் அவர்களிடையே போதையில் பிறந்த அந்தப் ''பிலோஷொபி'' திருமணம் செய்யவிருந்தவரைத் தலைகீழாக்கிவிடுகிறது - அவரது மனசாட்சியை உலுக்குகிறது. அந்த எதிர்வினை என்ன என்பது திரைப்படத்தின் முடிவில் மறைந்திருக்கிறது.

இந்தப் படத்தை இயக்கி அதில் நடித்துள்ளார் ஜெயப்பிரகாஷ், ஆனால், முதன்மைப் பாத்திரம் சுரேஷ் சோமசுந்தரம் குமார். அத்தோடு சிந்து ஜெயப்பிரகாஷ், பிரதீப் தாமோதரன், ரவி கதிரேசன், அனுஷா பிரபு, சித்தார்த் நாயர் ஆகிய எழுவர் மாத்திரம்தான் இந்தப் படத்தின் கதாபாத்திரங்கள்.

வழக்கமான திரைப்படங்கள் போல இல்லாமல் வாழ்க்கையை அதன் போக்கிலேயே கமராவுக்குள் உள்வாங்கியிருப்பதுதான் படத்தின் சிறப்பு. நண்பர்களின் மது அருந்தும்போக்கைச் சாதாரணமாகப் படப்பிடிப்புக்குள் உள்வாங்கியிருக்கின்ற உணர்வே படம் நிறைவடையும் வரை ஏற்படுகிறது. படத்தில் நடித்தவர்கள் உண்மையிலும் நண்பர்கள், குடும்பத்தினராக இருப்பது மேலும் ரசனைக்குரியது. யதார்த்த வாழ்க்கைக்கும், தாம் வரிந்து வைத்திருக்கும் நவீனத்துவ வாழ்க்கைக்கும் இடையிலான குழப்பங்கள் அடுத்தடுத்து விவரிக்கப்படுகின்றன. இருள் சூழும் போது மதுக் கடையில் ஆரம்பித்த கதை அப்படியே மெல்ல மெல்ல அழகாக அடுக்குமாடிக் குடியிருப்புக்குள் நகர்கிறது. அந்த இரவுக்குள்ளேயே அது நிறைவடைகிறது.

படத்தில் எவரும் நடித்திருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாதிருப்பதுதான் அவர்களுக்குச் சபாஷ் சொல்ல வைத்திருக்கிறது. படத்தையும் பாராட்ட வைத்திருக்கிறது. இயல்பாக எடுக்கப்பட்டுள்ள காட்சிகளின் அழகு திரை முழுதும் கொட்டிக் கிடக்கிறது. வாழ்க்கை முரண்பாடுகளைப் படமாக்கியுள்ள இந்தச் சிறிய தத்துவம் ஒரு பெருங்கதையைவிடப் பிரமாண்டமாகத் தெரிகிறது.

மது அருந்திக்கொண்டிருக்கும்போது பல சம்பவங்கள் இயல்பாகக் கோர்வையாகின்றன. தனக்கு நிச்சயிக்கப்பட்டவருக்கு அடிக்கடி அழைப்பெடுக்கும் மணப்பெண்ணும் அவருடைய உரையாடலும், அதில் ஒளிந்திருக்கின்ற உளவியல் மற்றும் சமூகப் பரிமாணங்களும் பலே சொல்ல வைப்பவை. ஆனால், அதையெல்லாம் தாண்டிப் பாராட்டுப்பெறப் போட்டி போடுவது நண்பர்களின் சேர்க்கையும், அவர்தம் குத்தல் - குடைசல், நையாண்டி ஆனால் அறம் மிகுந்த பேச்சுகளுமே. போதை தலைக்கேறிய பின்பும் ''நாங்கள் நண்பர்கள் உண்மையைச் சொல்ல வேண்டும்'' என்று உறுதியாக இருப்பதும், இடையில் நுளம்புகளின் தொல்லை அதிகரித்திருக்கச் சமையலறைக் கதவைச் சாத்திவிட்டு நுளம்புகளை மின்சாரத் துடுப்பால் விரட்டுவதும் அதன் பின்னர் பிறக்கும் நுளம்புத் தத்துவமும் என இன்னுமின்னும் ஏராளம் விடயங்களின் பெரும் பொதியாக இருக்கிறது நண்பர்களின் மது அருந்தும் களம்.

அந்தக் களத்தை ஒரு தடவை பார்த்தால் மாத்திரமே அந்தப் படைப்பின் முழுமையையும் நீங்கள் அனுபவிக்க முடியும். ஆக மொத்தம், இந்த நுளம்புத் தத்துவம் ஒரு பெருந்தத்துவம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்மவூர் சுத்துமாத்து...!

# வட்டி குட்டி போடும் கடைகளில்!

யாழ்ப்பாணம் நல்லூரிலிருந்து விநோதன்

குளிர்சாதனப் பெட்டி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காகக் கடந்த வருடம் யாழ்.நகரிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சென்றேன். கண்ணாடியால் அலங்கரிக்கப்பட்ட, வெள்ளை வர்ணப் பின்னணியில் அழகாக அடுக்கப்பட்டிருந்த பொருள்களின் காட்சியகமானது கொள்ளை அழகுடன் ஈர்த்தது.

தொலைக்காட்சிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சமையலறை உபகரணங்கள், சலவை இயந்திரங்கள், வளிச்சீராக்கிகள், கைபேசிகள் எனத் தனித்தனியான பகுதிக ளில் பல பொருள்களும் ஒழுங்கு முறையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அந்தக் காட்சியறைக்குள் நுழைந்ததும் குளிரால் உடல் சிலிர்த்தது.

புன்முறுவல் பூத்தவண்ணம் என்னை அணுகிய பணியாளர்கள் நான் கொள்வனவு செய்யவுள்ள பொருள் என்ன என்று கேட்டனர். "குளிர்சாதனப் பெட்டி" என்று நான் சொன்னதும் அவை காட்சிப்படுத்தப்பட்டிருந்த பகுதிக்கு என்னை அழைத்துச் சென்று ஒவ்வொரு குளிர்சாதனப் பெட்டிகளாகக் காட்டி, அவற்றின் பயன், மற்றும் விலைகளை ஒப்புவித்தனர். தாம் வைத்திருக்கின்ற அனைத்துக் குளிர்சாதனப் பெட்டிகளிலும் ஏராளம் நன்மைகள் இருப்பதைக் கூறினர். தவிர ஒரு தீமைகூட இருப்பதாகச் சொல்லவில்லை. சரி அது அவர்களின் வியாபாரத் தந்திரம் என்றுவிட்டுக் குளிர்சாதனப் பெட்டிகளுக்கு மேலே தனியான நிறுத்திகளில் எழுதி வைக்கப்பட்ட விலைகளைக் கவனித்தேன்.

பல விலைகள் குறிக்கப்பட்டிருந்தன. அதில் ஒரு குளிர்சாதனப் பெட்டியைக் குறிப்பிட்டு அதன் விலையைக் கேட்டேன். "சேர் நீங்கள் இதை ரெடிக் காஸ்ஷ் கொடுத்து எடுத்தால் டிஸ்கவுண்ட் பிறைஸ் போட்டுத் தருவம். இதின்ர டிஸ்கவுண்ட் பிறைஸ் நாற்பத்தொன்பாதாயிரத்துத் தொளாயிரத்துத் தொன்னூறு ரூபா" என்றார் (ஐம்பதாயிரம் என்று சொல்வதைவிட ஒரு ரூபா மற்றும் பத்து ரூபாக்களைக் குறைத்து விலை நிர்ணயித்திருப்பதும் வியாபாரத் தந்திரமாக இருக்கிறது). அந்த விலைக் குறிப்பில் விசேட விலை **49,990**இன் கீழே, சாதாரண விலை என்று எழுதி **64,990**ரூபா குறிக்கப்பட்டிருந்தது. "அதென்ன சாதாரண விலை?" என்று கேட்க, "அது சேர் நோர்மல் பிறைஸ். டிஸ்கவுண்ட் இல்லாமல் இதின்ர விலை இதுதான். இப்ப வருசப் பிறப்பு நெருங்கிறதாலை கொம்பனி டிஸ்கவுண்ட் அறிவிச்சிருக்கு" என்றார்.

நான் அவருடன் கதைத்துக் கொண்டிருக்கும்போது, மற்றொருவர் அதே வகைக் குளிர்சாதனப் பெட்டிதை தவணை முறையில் பணம் செலுத்திக் கொள்வனவு செய்வதற்கு வந்திருக்கவேணும், மற்றொரு பணியாளர் அவரை நான் நின்றுகொண்டிருந்த இடத்துக்கு அழைத்துவந்து எனக்கு விளங்கப்படுத்திய பணியாளரைப்போலவே அவருக்கு விளங்கப்படுத்தினார். தவணைக் கடனில் பொருளைப் பெறுவதால் அதற்குக் கழிவு விலை இருக்கவில்லை. சாதாரண விலையையே அவர் செலுத்தவேண்டியிருந்தது. அத்தோடு சேவைக் கட்டணம், காப்புறுதிக் கட்டணம் ஆகியனவும் அவரிடமிருந்து அறவிடப்படும் என்றார். அதற்கும் சில ஆயிரங்களில் தொகை சொன்னார். அவர் சொல்லிய தொகையைச் செலுத்தும் காலத்துடன் கணித்துப் பார்த்தபோது, பொருளுக்கு அந்தக் காட்சியறை குறிக்கப்பட்ட கழிவு விலையிலிருந்து அதிக தொகைப் பணம் செலுத்தவேண்டியிருப்பது தெரிந்தது.


தனியார் வங்கிகள், மற்றும் நிதி நிறுவனங்களைவிடவும் அதிக வட்டி வீதத்துடன் அந்தப் பணம் கணிக்கப்பட்டு அறவிடப்படுவதாக இருக்கிறது. அதையெல்லாம் கணித்துத்தான் சாதாரண விலை என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இந்தக் குளிர்சாதனப் பெட்டியைப் போலவே அந்தக் காட்சியறையிலுள்ள அனைத்துப் பொருள்களிலும் இருவேறு விலைகள் குறிக்கப்பட்டிருந்தன. அனைத்துப் பொருள்களுக்கும் தமிழ் - சிங்களப் புத்தாண்டையொட்டி விலைக் கழிவை வழங்குகிறார்கள்போல என்றும் இந்த விலைக்கழிவால் பயனடைபவர்கள் உடன் பணத்தில் பொருளைப் பெறும் வசதி படைத்தவர்களாகத்தானிருப்பர் என்றும் சிந்தித்தபடி அதே வீதியிலுள்ள மற்றொரு கடையிலும் குளிர்சாதனப் பெட்டிகளைப் பார்த்துவரலாம் என்று விரைந்தேன்.

தனியார் காட்சியறையில் பார்த்த அத்தனை குளிர்சாதப் பெட்டிகளும் அந்தச் சாதாரண கடையில் இருந்தன. எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அவற்றின் விலைகளைக் கேட்டபோது முன்னைய காட்சியறை கழிவு விலை என்று கூறியதையே இங்கு கடைக்காரர் பெறுமதியாகக் கூறினார். காட்சியறைப் பணியாளர் கூறிய உத்தரவாத காலமும் இவர் கூறும் காலமும்கூட ஒன்றாக இருந்தது. தனியார் காட்சியறைகள் தவணை முறையில் பொருளை விற்கும் மகா தந்திரமும் அதன் பின்னாலுள்ள விலை ஏற்றமும் எனக்குத் தெளிவானது. காட்சிய றைகளின் இந்தத் தந்திரம் பண்டிகை மற்றும் சிறப்புத் தினங்களில் மாத்திரமன்றிச் சாதாரண காலங்களிலும் நிகழ்வதுதான் என்று கூறினார்கள் இது பற்றி நான் பகிர்ந்தபோது எனது சில நண்பர்கள்.

இது தனியார் நிறுவனங்களின் வியாபாரத் தந்திரம் என்று அவர்கள் கூடவே சொன்னாலும் என்னைப்பொறுத்தவரை இதுவும் பெரியதொரு சுத்துமாத்துத்தான்.

# வெற்றிமாறன் - விஜய் சேதுபதி இணையும்

# விடுதலை



இயக்குநர் வெற்றிமாறன் இயக்கிய அசுரன் திரைப் படத்திற்கு இந்திய நடுவண் அரசின் தேசிய விருது கிடைத்திருக்கும் நிலையில் அவர் முதல் தடவையாக மற்றொரு தேசிய விருது வெற்றியாளரான விஜய் சேதுபதியுடன் இணைந்து புதிய படம் ஒன்றைத் தொடங்கியுள்ளார். விடுதலை என்று அந்தப் படத்திற்குப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் இயக்குநர் பாரதி ராஜாதான் முதலில் நடித்தார். அவரை வைத்து படப்பிடிப்பும் தொடங்கப்பட்டது. ஆனால் படப்பிடிப்பு நடந்த சத்தியமங்கலம் காட்டுக்குள் நிலவிய கடும் குளிர் பாரதிராஜாவுக்கு ஒத்துக்கொள்ளாததால் அவரது இடத்திற்கு விஜய் சேதுபதி வந்துள்ளார்.

எப்போதும் நாவல்களை படமாக்குவதில் ஆர்வம் கொண்ட இயக்குநர் வெற்றிமாறன் இம்முறை சிறுகதையைத் தேர்ந்தெடுத்துள்ளார். எழுத்தாளர் ஜெயமோகன் எழுதி, **1992**ஆம் ஆண்டு ஆனந்த விகடனில் வெளியான 'துணைவன்' சிறுகதையை அடிப்படையாகக்கொண்டே இப்படம் எடுக்கப்படுகிறது.

இதில் போலீஸாக சூரியும், போராளியாக விஜய்சேதுபதியும் நடிக்கிறார்கள். எல்ரெட் குமார் தயாரிக்கும் இப்படத்தின் போட்டோஷூட் நிறைவடைந்துவிட்டது. வெகுவிரைவில் இப்படத்தின் டைட்டில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட இருக்கிறது. இப்படத்துக்கு இசைஞானி இளையராஜா இசையமைத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனை

ஜி.மறைமுதல்வன்

பாலாவைச் சிலவேளை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம் 70-80களில் இலங்கை வானொலியைக் கேட்பவராக நீங்கள் இருந்திருந்தால் பாலாவின் குரலை யாவது நீங்கள் கட்டாயம் கேட்டிருப்பீர்கள். அக்காலகட்டத்தில் வானொலியில் கோலோச்சிய ஒரு சில நாடக நடிகர்களுள் பாலா பிரபல்யமானவன். புகழ் என்ற சொல்லுக்குப் பின்னால் அவனது வீழ்ச்சிக்கான ஆபத்தும் பின்னிப் பிணைந்திருந்ததை அவன் உணர்ந்திருக்கவில்லை.

ஆபத்து அந்தரம் என்று இப்படியாக நான் பீடிகை போட்டால் உங்க ளுக்குத் தலையும் புரியாது வாலும் புரியாது. கொஞ்சம் பின்னோக்கிப் போய் பார்க்கவேண்டும்.

இலங்கையைப் பொறுத்த மட்டில் விரும்பியோ விரும்பாமலோ ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்விலும் அரசியல் ஊடுருவி விட்டது. தமிழர்களைப் பொறுத்த மட்டில் அது கொஞ்சம் ஆழமாகவே ஊடுருவி ஆறாத வடுக்களைப் பரிசாகவும் தந்து விட்டது.

யாழ்ப்பாணத்தை பொறுத்த வரை இலங்கையில் படித்த சமூகத்தவர் என ஏனையோர் மதித்த காலம் ஒன்றிருந்தது. தடுக்கி விழுந்தாலும் ஒரு தமிழ்ச் சட்டம்பியார் வீட்டுக்கு முன்னால்தான் விழ வேண்டியிருக்கும், எனச் சிலாகித்துச் சொல்லுமளவுக்கு யாழ்ப்பாணத்தவர் இருந்தனர்.

அதனாலேயே யாழ்ப்பாணத்தவர் கொஞ்சம் இறுமாப்புடனும் மிதப்புடனும் உலவி வந்த காலகட்டத்தில் தான் யாழ்ப்பாணத்து வடமராட்சியில் உள்ள ஒருகுக்கிராமத்தில் ஒரு குடும்பத்தில் பாலா பிறந்தான்.

இலங்கை வரைபடத்தில் இடம்பெறாவிட்டாலும் பெயர்பெற்ற பல தமிழ் அறிஞர்கள் பிறந்ததால் சிறப்புற்ற கிராமமது. 'சாதி இரண்டொழிய வேறில்லை' என வாயளவில் கூறிக் கொண்டு வாழ்ந்தாலும்கூட ஈழத் தமிழரின் வாழ்விலும் அரசியலிலும் சாதி இரண்டறக் கலந்துதான் இருந்தது.

ஊரில் பாலாவின் தந்தைக்கு நல்ல மதிப்பிருந்தது. ஆசிரியராக இருந்து பின் அதிபரானவர். ஆசிரியர்களின் இலக்கணமான கண்டிப்பும் அவருடன் கூடவே பிறந்தது. சாதித் தடிப்பும் பரம்பரைச் சொத்தாகச் சேர்ந்தே வந்திருந்தது. பள்ளிக்கூடத்திலும் சரி வீட்டிலும் சரி அவர் வைத்ததே சட்டம். அவர் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாத அம்மா. அந்நாளைய லலிதா பத்மினி போல அழகான இரு அக்காமார். வீட்டின் கடைக் குட்டியாகப் பிறந்தவன்தான் பாலா.


அளவான அழகான குடும்பம் அவர்களுடையது. அவ்வப்போது சில ஏற்ற இறக்கங்கள் இருந்த போதிலும் அவர்களது இயல்பு வாழ்க்கை இனிமையாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது.

இயல்பாகவே பாலா துறுத்றுப்பானவன். தமிழில் அவனுக்கிருந்த விருப்பும் கலைகளில் அவனுக்கிருந்த நாட்டமும் அவனை ஒரு கலைப் பித்தனாக உருமாற்றிக் கொண்டிருந்தன. 'மனோகரா' படம் வெலிங்டனில் வெற்றிகரமாக ஓடியபோது அவனுக்குப் பத்து வயதும் ஆகவில்லை. அரண்மனை தர்பாரில் "புருஷோத்தமரே, புரட்டுக்காரியின் உருட்டு விழியிலே உலகத்தைக் காண்பவரே...." என ஆரம்பித்து அடுக்கு மொழியிலே ஐந்து பக்க வசனத்தை ஒரே மூச்சிலே சிவாஜி கணேசன் ஒப்புவிப்பதைப் போல சக நண்பர்கள் மத்தியில் பேசிக் காட்டிக் கைதட்டல் வாங்கி பாலாவும் ஒரு குட்டி சிவாஜியாக வலம்வந்து கொண்டிருந்தான்.

பாடசாலை மாணவர் மன்றப் பேச்சுப் போட்டியின்போது வகுப் பாசிரியையின் அனுசரணையுடன், ஒட்டு மீசையும் தலைப்பாவுமாக பாரதி போல வேடமணிந்து வந்து நின்று," அச்சமில்லை அச்ச மில்லை அச்ச மென்பதில்லையே.. உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் ..." என அவன் முழங்கியபோது அப்பழங்காலப் பள்ளிக்கூடக் கூரையே இடிந்து விழுந்து விடுமோ என அதிபரே கவலைப்படுமளவுக்கு கரகோஷாத்தால் அச்சிறு பள்ளிக்கூடமே அதிர்ந்தது.

எவ்வித எதிர்ப்புமின்றி இலகுவாகவே முதற்பரிசைத் தட்டிச் சென்றுவிட்ட அவனைத் தேடிப் பாராட்டுகள் வந்து குவிந்த போதிலும் ஒரே ஒரு சோடிக் கண்கள் மட்டும் வெறுப்பை உமிழ்ந்தபடி குரோதத்துடனும் பொறாமையுடனும் பார்த்துக்கொண்டிருந்தன.

முக்கித்தக்கி மூன்றாவது இடத்தைப் பெற்று விட்ட போதிலும் அதற்கான பாராட்டோ பின்னூட்டமோ கிடைக்காத காரணத்தால் நொந்து போயிருந்த அவனை இப்போதைக்குச் சீண்டாமல் விட்டு விடுவோம்.



பேச்சு, நடிப்பில் மட்டுமல்லாமல் ஏனைய பாடங்களிலும் ஏன் விளையாட்டிலும்கூட பாலாவின் கொடிதான் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது.

ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்ந்து என்ன விலை கொடுத்தும் அதைக் கற்றுக் கொள்ளத் துடித்த யாழ்ப்பாணிகளுள் பாலாவின் தந்தையும் அடக்கம். அந்நாளில் வேதக் காரப் பள்ளிக்கூடங்களில்தான் ஆங்கிலம் முறையாகப் போதிக்கப்பட்டது. அதற்காகவே சைவத்தில் இருந்து வேதத்திற்கு மாறியவர்கள் பலர். ஆனாலும் பாலாவுக்கு அத்தகைய நிர்ப்பந்தம் ஏற்படவில்லை. விளையாட்டு உட்பட அனைத்துப் பாடங்களிலும் அவன் காட்டிய ஆர்வமும் ஆற்றலும் சேர்ந்து தாமாகவே அவனை உள்ளீர்க்க வைத்துவிட்டன.

அவனது சாதகக் குறிப்பைப் பார்த்த சோதிடர்கள், பின்னாளில் அவனடையப் போகும் உயர்வுகளைப்பற்றி ஆரூடம் கூறினார்களேயன்றி நாற்பது வயதில் அவனுக்கு நேரப் போகும் எதிர்பாராத கண்டம் பற்றிக் கடுகளவும் கண்டு கொண்டதாக இல்லை.

சாதாரணமாக ஓ.எல்.லை எட்டிப் பார்த்தாலே காணும். வேலை வீடுதேடி வரும் காலமது. நாலைந்து திறமைச் சித்திகளுடன் தேறிய பாலாவுக்குச் சொல்லவேண்டுமா! "வாத்தியார் பிள்ளை வாத்தி" என ஆவதில் பாலாவுக்கு உடன்பாடிருக்கவில்லை. மூச்சுப்பிடித்து இத்தனை நாளும் ஓடியது காணும். இனியாவது கொஞ்சம் ஆறியிருந்து சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கலாமே என அவன் மனம் அங்கலாய்த்தது.

அதற்குத் தோதாக எழுதுவினைஞர் பரீட்சையில் அவன் சித்தி பெற்ற செய்தியும் வந்தது, அதைத் தொடர்ந்து கொழும்பில் அரச இறைவரித் திணைக்களத்தில் வேலையும் கிடைத்து விட்டது 'உத்தியோகம் புருஷ லட்சணம்' எனும் முது மொழியை மெய்ப்பிக்கும் முனைப்புடன் மூட்டை முடிச்சுகளுடன் புறப்பட்ட பாலாவைச் சுமந்து சென்ற 'யாழ் தேவி' கொழும்புக் கோட்டையில் அவனைப் பத்திரமாக இறக்கிவிட்டு ஆஸ்வாசப் பெருமூச்சு விட்டது.

"மாத்தையா கோ இந்தலா? யாப்பணத?"(அய்யா எங்கிருந்து வாறியள்? யாழ்ப்பாணமோ?) என்ற இளனி வியாபாரியின் சிங்களம் முதலில் அவனை மிரள வைத்தது. அவன் கையில் அனாயாசமாக விளையாடிக் கொண்டிருந்த கொடுவாட் கத்தி அச்சத்திற்கு அத்திவாரம் போட்டது.

கொழும்பில் காலடி வைத்த ஒருசில நாட்களிலேயே சிங்களம் தெரியாமல் அங்கு காலம் கடத்துவது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பது புரிந்தது. 'சிங்களம் படிக்காதே! சிறுமைப் பட்டுப் போகாதே!' எனத் தமிழரசுக் கட்சியினர் பன்னிப்பன்னிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களது அரசியல் ஏடான 'சுதந்திரன்' சிங்களவர்களுக்கெதிரான காழ்ப்புணர்வைத் தாராளமாகக் கக்கிக் கொண் டிருந்தது.

திணைக்களத்தில் அரை வாசிக்கும் குறையாமல் தமிழர்களாக இருந்தது ஆறுதலளித்தது. அதனால் சிங்களம் தெரியாதது பெரிதாகத் தோற்ற வில்லை. போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவானதால் சிங்களவர்களைவிடத் தமிழர்கள் - அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள் அரச அலுவலகங்களில் செல்வாக்குடன் சுதந்திரமாக வலம்வந்து கொண்டிருந்தார்கள்.

இந்நிலைமை சில சிங்களத் தலைவர்களின் பொறாமை உணர்வைத் தூண்டுவதாக அமைந்தது. போதாக் குறைக்கு தமது அரசியல் ஆசான்களாக அவர்கள் வரித்துக் கொண்ட தமிழக தி.முக.வினரின் "வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது' என்ற கோஷத்தை மாற்றிப் போட்டு, 'தெற்கு வாழ்கிறது, வடக்குத் தேய்கிறது" என்றோலமிட்ட தமிழரசுக் கட்சியினரின் கிளிப் பிள்ளை வாய்ப்பாடு, எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல சிங்களவரின் எதிர்ப்புணர்விற்குத் தூபம் காட்டுவதாக ஆனது.

சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டியைப்போல வாயிருந்ததால் வினையை விலைக்கு வாங்கிய வீணாகிப் போனவர்களைப் பற்றிப் பேசி என்ன புண்ணியத்தை? ஒரு தமிழன் சிங்களத்தைப் படிக்க விரும்பினாலும்கூட இரகசியமாகவே படித்துத் தொலைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை. அயலவனாக இருந்த சிங்களவனை அந்நியனாகப் பார்க்க வைத்தவர்கள் பழியை மட்டும் சிங்களவனில் போட்டு விட்டுத் தப்பித்து விடப் பார்த்தார்கள். ஆனால் காலம் அவர்களுக்கான பாடத்தைக் கற்றுக் கொடுத்தபோது அதைக் கண்டுணர அவர்கள் இல்லை .' பாவத்தின் சம்பளம் இறப்பு' எனும் ஆன்றோரின் வாக்குப் பொய்க்கவில்லை.

பாலாவுக்குச் சிங்களவனை வெறுக்கக் காரணம் இருக்கவில்லை. அலுவலகத்தில் அருகருகே பணிபுரிந்த சிங்களவர்கள் நல்ல மாதிரித்தான் பழகினார்கள். மொழி புரியாத பேதமை பரஸ்பரம் நெருங்கத் தடையாக இருந்தது. ஆங்கிலத்தில் பேச இருபகுதியினருமே சங்கோஜப்பட்டனர் அருகருகே இருந்த போதிலும்கூட பாலம் போடப்படாத தனித் தனித் தீவுகளாகவே அவர்கள் இருந்தனர்.

கொழும்பில் காலடி வைத்த புதிதில் வெள்ளவத்தையில் இருந்த -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரை விட்டு ஓடிப்போய் உழைப்பாலோ அதிர்ஷடத்தாலோ உயர்ந்துவிட்ட- ஒரு ஒன்றுவிட்ட மாமன் வீட்டில் அழையா விருந்தாளியாக பாலா அடைக்கலம் ஆனான்.

மாமனிடத்தில் பணமிருந்தது. தன்னை உதாசீனம் செய்த உறவினரை எள்ளி நகையாடும் குணமும் இருந்தது. நல்ல,வேளையாக அவருக்கு ஒரு மகள் இருக்கவில்லை. மகன் என்று ஒருவன் இருந்தான். அவனுக்குத் தமிழ் தெரியவில்லை. ஆங்கிலம் அவன் நாவில் அரசோச்சியது. மாமனோ சிங்களத்தில் சதிராட்டம் போட்டார்.

இந்த இடம் தனக்குச் சரிப்படாது என்று ஓரிரு நாட்களிலேயே பாலாவுக்கு விளங்கிவிட்டது. முண்டாமல் முனகாமல் மெல்லமாக அங்கிருந்து விலகித் தனக்கென ஒரு தனியறையை பாலா தேடிக் கொண்டான்.கொட்டாஞ்சேனை வீதிகளைச் சல்லடை போட்டுத் தேடித் தனது 'வசந்த மாளிகை'யைக் கண்டடைய அவன் நடாத்திய நடைபயணங்களைப் பற்றி எழுதப் போனால் அது தனிக் கதையாகி விடும்.

சிங்களக் குடும்பம் ஒன்றின் முன்வீட்டுப் 'போர்ஷனி'ல் அவன் குடிவந்தபோது அதிர்ஷடமும் அவனுடன் கூடவே குடிவந்தது. காதல் தேவனின் கடைக் கண் பார்வையும் அவன்மீது படர்ந்தது. பருவத்தின் விளிம்பில் பட்டாம் பூச்சியாகச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த அனுலாவின் அழகும் இளமையும் அவனைச் சிறைப் பிடித்துச் சிப்பிலியாட்டின. அனுலா- வீட்டுக்காரச் சிங்களவரின் ஒரே மகள்.

அவர்களுக்கு தமிழ் தெரியவில்லை. அவனுக்குச் சிங்களம் புரியவில்லை. பரத நாட்டியத்தின் பால பாடத்தில் இருவரும் பயணித்துப் புரியாதனவற்றைப் புரிந்து கொண்ட காலத்தில் கொஞ் சம் கொஞ்சமாகச் சிங்களமும் வேகவேகமாகக் காதல் பாடமும் பாலாவின் மனதிலும் இதயத்திலும் இடம் பிடித்துக்கொண்டன. அனுலாவின் நாவில் மழலையாகத் தவழ்ந்த தமிழ்ச் சொற்கள் அவர்களின் நெருக்கத்தின் அளவுகோலாகத் திகழ்ந்தன. சிரமமில்லாமல் செலவில்லாமல் சிங்களம் கற்கும் எளிய பொறிமுறையை அறிய விரும்புவோர் பாலாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்!

ஊரிலிருந்தபோது இலங்கை வானொலியில் ஒலிபரப்பான நாடகங்களைக் கேட்டு ரசிக்கும் போதெல்லாம், தானும் ஒருநாள் எப்படியாவது வானொலி நடிகனாகி விட வேண்டும் என்ற தணியாத தாகம் பாலாவைப் பிடர் பிடித்து உந்திக் கொண்டிருந்தது. கொழும்பு வாழ்க்கை நிரந்தரமான ஒரு வருடத்தின் பின் அவன் கனவு பலிதமானது.

வானொலி நடிகர்களாக விரும்புபவர்களை விண்ணப்பிக்கக் கோரி வானொலியில் ஒரு விளம்பரம் ஒலிபரப்பானது. அதைக்கூட ஊரிலிருந்து அவனது அக்கா எழுதிய ஒரு கடிதம் மூலம்தான் அவன் தெரிந்து கொண்டான். (அனுலா வீட்டு வானொலிக்கும் தமிழ் தெரியாது; அதுவும் சிங்களத்திலேயேதான் பாடும்; பேசும் என்பது நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு கொசுறுத் தகவல்!)

கொழும்பில் நிரந்தரமாக வதிபவர்களுக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய வாய்ப்பு அது. நேர்முகக் குரல் தேர்வுக்கு அவன் சமுகமளித்த போது அவனோடு திணைக்களத்தில் கடமை யாற்றும் வேறு சிலரையும் கூட அங்கு காண முடிந்தது. இத்தகைய விடயங்களை வெளியில் விட்டு விடாமல் கமுக்கமாகத் தமக்குள் வைத்திருந்து காரியம் பார்ப்பதிலும் யாழ்ப்பாணிகள் கெட்டிக்காரர். அது அவர்களுக்கேயுரிய தனிப் பண்புகளில் ஒன்று என்றும் சொல்லலாம்.

குரல் தேர்வில் தேறி ஒரு வானொலி நடிகனாக எடுபட்டபோது வானமே வசப்பட்டு விட்டதுபோல மகிழ்ச்சிக் கடலில் மிதந்தான் பாலா. அவ்வப் போது நாடகங்களில் குரல் கொடுக்கவென வந்து போய்க் கொண்டு இருந்தவனுக்கு ராகுலனின் அறிமுகம் கிடைத்ததும் அங்குதான். கிடைத்த மட்டில் போதும் எனத் திருப்திப்பட்டுவிடும் இயல்பினன் அல்ல பாலா. ராகுலன் நீட்டிய நட்புக்கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு அவனது வெற்றிப் பயணம் தொடர்ந்தது.

நாடாளுமன்றத்தில் பிரதம உரை பெயர்ப்பாளராக இருந்த எஸ்.வி.ஆரை ராகுலனுக்குத் தெரிந்திருந்தது. ஆங்கில மொழியில் பாலாவுக்கு நல்ல அறிவும் தேர்ச்சியும் இருந்தது. நாடாளுமன்ற உரை பெயர்ப்பாளனாக பாலா உயர்வு பெற அவை அடிப்படையாயின.

வானொலி நிலையத்தில் வரவேற்பாளினியாக இருந்த ராதாவும் அவனுடைய ஊர்க்காரிதான். சின்ன வயதில் பாலா படித்த அதே பாடசாலையில் படித்தவள்தான். ஆனால் பாலாவுக்கு அவளை நினைவில் இல்லை. ராதாவுக்கோ பாலாவையன்றி வேறு நினைவேயில்லை. ஊரில் படித்த காலத்திலேயே பாலாவின் அழகும் ஆண்மையும் ஆற்றலும் அவளை வசீகரித்திருந்தன. ஆனால் சாதி பேதம் பேசும் சமுகத்தில் அதெல்லாம் சரிவராதென்று தனது ஒரு தலைக் காதலை மனதுக்குள்ளேயே புதைத்துக் கொண்டு விட்ட வள் அவள்.

ராதாவுக்குப் படிப்பு சுத்தமாக ஏறவில்லை. கலைகளில் நாட்டமிருந்தது. அழகுக்கலையிலும் தேறியிருந்தாள் வீட்டில் சும்மா இருப்பதற்கு கௌரவமான ஏதாவது தொழில் பார்த்தால் பரவாயில்லை என்று அலங்காரத் தேராக வானொலி நிலையத்துக்கு வந்து போய்க் கொண்டிருந்தாள்.

தேடிப்போன மூலிகை காலிற் பட்டது போல மீண்டும் பாலாவை வானொலி நிலையத்தில் கண்டபோது புதைக்கப்பட்ட அவள் காதலும் மீண்டும் துளிர் விட ஆரம்பித்தது. வலியச் சென்று அவள் ஒட்டி உறவாடிய போதிலும் பட்டும் படாமல் பாலா எட்டியே நின்றது அவள் இதயத்தைக் காயப்படுத்த, தனது அழகு பற்றிய அவளது கர்வமும் பங்கப்பட்டது.

அவள் அழகில் அடிமைப்பட்டுப் போன கிருஷ்ணாவும் அதே வானொலி நிலையத்தில் தான் கடமையாற்றினான். சொந்த முயற்சியாலோ அல்லது அறிந்தவர்கள் எவரதும் செல்வாக்காலோ தெரியாது அவனும் ஓர் அறிவிப்பாளனாக அங்கு எடுபட்டிருந்தான். இந்தக் கிருஷ்ணா வேறு யாருமல்ல. பாலாவால் பேச்சுப் போட்டியில் தோற்கடிக்கப்பட்டு மனம் நொந்து குமுறிக் கொண்டிருந்தானே ஒருவன். அவனேதான். இத்தனை ஆண்டுகள் கடந்தும் அவனால் அத்தோல்வியை மறக்க முடியவில்லை.

**ஆடிக் கலவரம் எத்தனை பேர் வாழ்க்கையைப் பந்தாடி விட்டது! இயக்கங்கள் பல தோன்றி இயல்பு வாழ்வைச் சீர் குலைத்துக் குளிர் காயலாயின. நாடுகாண் படலம் ஈழத்தமிழர் வாழ்வின் தொடர்கதை யானது.**

பாலாவின் தந்தையையும் கிருஷ்ணாவால் மன்னிக்க முடியவில்லை. தனது சொந்தச் சாதிப் பெடியன் ஒருவனின் முறைப்பாட்டைக் கேட்டு எவ்வித விசாரணையும் இல்லாமல் புளிய மிளாறால் அவர் தன்னை அடித்துத் துவைத்த அந்த வன்கொடுமை- சாதிக்கு முன் நீதி சரணாகதியாகி விட்ட அந்த நீசத்தனம்- அவனால் மறக்கவோ மன்னிக்கவோ பட முடியாத ஒன்று. செய்யாத குற்றத்திற்காக அவன் அனுபவித்த தண்டனை மனதில் ஏற்படுத்திய வலி இன்னும் ஆறவில்லை. உடலில் ஏற்பட்ட காயங்கள் ஆறிய போதிலும் அது ஏற்படுத்திய வடு இன்னும் மாறவில்லை.

'மணந்தால் ராதாதேவி இல்லையேல் மரண தேவி' என வீர(ப்பா) வசனம் பேசிப் பிதற்றிக் கொண்டு திரிந்தவனுக்குத் தனது காதலி இனிக்க இனிக்கப் பேசிக் கொண்டிருந்தவனை இனங் கண்டபோது புண்ணில் புளிப் பத்தியது போல ஆயிற்று. ஒரே ஊரான் என்ற உரிமையுடன் பாலாவை கிருஷ்ணாவுக்கு ராதா அறிமுகம் செய்து வைத்தபோதும் பாலாவால் அவனை ஞாபகம் கொள்ள முடிய வில்லை. ஒப்புக்குச் சிரித்து, கைலாகு கொடுத்த கிருஷ்ணா உள்ளுக்குள் கறுவிக் கொண்டான்.

கொஞ்சம் கொஞ்சமாக வானலைகளை வசப்படுத்திக் கொண்டு விட்ட பாலா ஓரிரு ஆண்டுகளிலேயே மிகப் பிரபலமான வானொலி நடிகனாகி விட்டான். கோபுரத்தில் ஏறியவனைக் குப்புறத் தள்ளி வேடிக்கை பார்க்கும் விதியின் விளையாட்டை யார்தான் அறிவார்? இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழர் வாழ்வைத் தறி கெட்டு ஓட வைத்தன . 83 இல் ஏற்படுத்தப்பட்ட ஆடிக் கலவரம் எத்தனை பேர் வாழ்க்கையைப் பந்தாடிவிட்டது! இயக்கங்கள் பல தோன்றி இயல்பு வாழ்வைச் சீர் குலைத்துக் குளிர் காயலாயின. நாடுகாண் படலம் ஈழத்தமிழர் வாழ்வின் தொடர்கதையானது. திரைகடலோடித் திரவியம் தேடிய தமிழன் புகலிடம் தேடி எழுகடலோடும் இரவலனானான்.

ஆடிக் காற்றில் அம்மியே பறக்கும் போது இலவம் பஞ்சின் கதி எப்படியோ அது போலானது பாலாவின் நிலைமை. வாடகை வீட்டில் இருந்தும், அனுலாவின் மனமாளிகையில் இருந்தும் ஒரேயடியாகத் துரத்தியடிக்கப்பட்டான் பாலா. பைத்தியக்காரனைப் போல சித்தம் தடுமாறித் திரிந்தவனுக்கு அவசர அவசரமாகச் சொந்தத்தில் மணம் பேசிச் செய்து வைத்து விட்டனர் வீட்டுக்காரர்.

நாட்டு நிலைமை சீர்ப்படு மட்டும், ஆறேழு மாதங்கள் ஊரோடு போய் முடங்கிக் கிடந்த போதிலும் நல்ல வேளையாக வேலைக்குப் பழுது வரவில்லை. கிராமத்து வாசனையுடன் அவனைக் கரம்பற்றிய பாமா நல்லவள் நேசமுள்ளவள். நகரத்தின் சூதுவாதுகளை அறியாதவள்

அவளது அண்மையும் அரவணைப்பும் ஆறுதலளித்த போதிலும் பாலாவால் முன்னைப் போல் இயங்க முடியவில்லை. இழப்புகளின் வேதனையை விழுங்கிக் கொண்டு ஒட்டியும் ஒட்டாமல் ஏனோ தானோவென அவனது கொழும்பு வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

மாற்று இயக்கமொன்றின் கை கொழும்பில் ஓங்கியிருந்த அந் நாட்களில் தான் புலிகளுக்கெதிரான பிரசாரத்துக்காக அரச வானொலியில் ஒரு தொடர் நாடக நிகழ்ச்சியை அவர்கள் நடாத்த ஆரம்பித்தனர். அந் நிகழ்ச்சித் தயாரிப்பாளன் கிருஷ்ணாவும் அவ் வியக்க ஆதரவாளனே.

கிருஷ்ணாவின் காட்டில் அடை மழை கொட்டிக் கொண்டிருந்த காலமது. எண்ணியதெல்லாம் நிறைவேறி மனதுக்கிசைந்தவளை மணவாட்டியாக்கிக் கொண்டு, அந்த இறுமாப்புடன், மாமனாரின் செல்வாக்கால் மேல் தட்டை நோக்கி அவன் முன்னேறிக் கொண்டிந்த வேளை. புலிகளுக்கு எதிரான அம்மாற்று இயக்கத்தில் ஒரு முக்கிய புள்ளியான ராதாவின் தந்தைக்கு தனது சாதிக்காரனான கிருஷ்ணாவை மருமகனாக்கிக் கொண்டதில் இரட்டிப்பு மகிழ்ச்சியே.

கிருஷ்ணாவின் நீடித்த வன்மத்துக்கு கடைசியில் ஒரு வடிகால் கிடைத்தது. அது நாடகவடிவில் அவனைத் தேடி வந்தது. நையாண்டியாக எழுதப்பட்ட அந்நாடகத் தொடரில் புலிகளின் தலைவனாக நடிக்க வைத்து பாலாவைப் பலிக்கடாவாக்கத் திட்டமிட்டான் கிருஷ்ணா.

அரசியலில் எந்த வித அக்கறையோ ஈடுபாடோ சார்போ இல்லாத பாலாவுக்கு அது ஒரு தர்மசங்கடமான நிலைமை. மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது. பிரபலமான நடிகன் எனப் பெயரெடுத்ததால் வந்த வினை. அதன் பின்னால் இருந்த ஆபத்து அச்சமூட்டியது.

யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் எட்டக் கூடிய ஒரே வானொலி அதுதான். தறுதலைத் தலைவனாக நடித்து விட்டுப் பின் ஊரில் தலை காட்ட முடியாது. தலைகாட்டினால் தலை தப்பாது! நினைக்கவே ஈரக் குலை நடுங்கியது. கொழும்பிலும் ஓடி ஒளிக்க முடியாது. வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்குவானேன்?

ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி, நாலு நாட்கள் ஆஸ்பத்திரியில் போய்க் கிடந்து தொண்டைக் கட்டு நெஞ்சு நோ என்று நாடகமுமாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளித் தண்ணிக் கறி...!




தமிழர்களின் பாரம்பரிய உணவு கள் பல இருக்கின்றன. அவை இன்று வரை ஏதோ ஒரு வகையில் தலைமுறை தலைமுறையாகக் கடத் தப்பட்டுப் புழக்கத்தில் இருந்து வரு கின்றன.

கூழைப்போன்ற சில உணவுகள் உயிர்ப்புடன் இருந்தாலும் பழமை மிகுந்த உணவுகள் சில மறைந்து - மறந்து போகும் நிலையும் இருக்கிறது. அத்த கையதொரு உணவுதான் புளித் தண்ணிக் கறி வகை...!

மூத்தவர்களின் பழமை மிகுந்த இந்தக் கறி வகை ஏனைய கறி வகை களில் இருந்து வேறுபட்டது. பயன் மிகுந்தது. புளித்தண்ணிக் கறி என்பது அவசரத்துக்குத் தயார் செய்யப்படுகின்ற கறி வகையாகவே அறிமுகமா னாலும் தேங்காய்ப் பால் சேர்க்காதது ஆகையால் பழுதுபடாமல் மறுநாள் வரையிலும் வைத்துப் பயன்படுத்தமுடிவதும் தேங்காய்ப் பாற் கொழுப்பற்ற விதத்தில் உடலுக்கு ஆரோக்கியம் சேர்ப்பதும் சிறப்புக்குரியது. பால் சேர்க்காமல் அதற்கு மாறாக அதிகளவில் புளியைச் சேர்த்துச் சுவைக்கின்ற இந்தப் புளித்தண்ணி வகைக் கறியைப் பெரும்பாலும் மீனவ மக்களே அதி கம் சமைக்கின்றனர். அவர்களின் தொழில் நிமித்தமான அவசரத்தில் தயாராவதாக இந்தக் கறிவகை இருக்கிறது.

**தேவையான பொருள்கள்...?**

புளித்தண்ணிக்குச் சிறையா, பாலைமீன், திரளி, திருவன், முரல் ஆகிய சில மீன்களே அளவுக்கதிக சுவை சேர்ப்பவை ஆத லால் இந்த மீன்களில் ஏதவதொன்றைத் தெரிவு செய்து வாங்கிக் கொள்ளுங்கள். இவற்றோடு புளி 150 கிராம் அளவில், செத்தல் மிளகாய்கள், 6 அல் லது 7, சின்னவெங்காயம் 50 கிராம் அள வில், உப்பு தேவைக்கேற்ப எடுத்துக் கொள்ளுங்கள்.

**எப்படிச் சமைப்பது...?**

மீனவக் கிராமங்களில் புளித்தண் ணிக் கறி சமைக்கும் விதம் விநோதமானது. மீன்களைச் சுத்தப்படுத்தித் துண்டுகளாக்கிச் சட்டி ஒன்றில் போட் டுக் கொள்ளுங்கள். அதனுடன் உப்பையும், நறுக்கிய சின்ன வெங்காயங்க ளையும் சேர்த்து புளியைக் கரைத்து விடுங்கள். புளிக்கரைசல் சூடாகும் வரை எரித்துக் கொண்டு கையோடு, செத்தல் மிள காய்களைப் பனம் ஈர்க்கு ஒன் றில் குத்திக் கோர்த்து ஈர்க்கை வளைத்துச் சட்டிக்குள் கொதித்துக் கொண் டிருக்கும் புளித்தண்ணிக்குள் அமிழ்த்தி மூடு சட்டியால் மூடுங்கள். 2 நிமிடங் களின் பின்பு ஈர்க்கை வெளியே எடுத்து அவிந்துள்ள செத்தல் மிளகாய்க ளைக் கைப்பிடியளவான புளிக்கரைசலுக்குள் போட்டுக் கசக்கிச் சட்டிக் குள் போடுங்கள். சற்று நேரம் அவிய விடுங்கள். இதுதான் புளித் தண்ணிக் கறி. பழங்கறியானாலும் பழுதாகி விடாத புளித்தண்ணிக் கறியைச் சாப்பிட்ட மூதாதையர்கள் நோய் நோடி இல்லாமல் நெடுங்காலம் வாழ்ந்தார்கள் என்கிறார்கள் தற்காலத்தவர்கள். சோற்றை விடவும் பிட்டுடன் சேரும் போதே புளித்தண்ணி அதிகம் ருசிக்கும் என்பது அவர்களின் கருத்து.

## தண்டனை....

நாட்களைக் கடத்திப் பார்த்தான். நான்காம் நாள் ஆஸ்பத்திரியால் அவன் வீடு திரும்ப, வாசலில் வெள்ளைவான் வந்து நின்றது.

என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாமல் பாமா பரிதவித்துப் போனாள். அறியாத ஊர்; தெரியாத மொழி. எவரையோ எல்லாம் பிடித்து எத்தனை கெஞ்சியும் எதுவும் நடக்கவில்லை. கொழும்பில் நாடாளுமன்றத்தில் பெரிய வேலை என இறுமாந்ததெல்லாம் அர்த்தமற்றுப் போனது. காணாமல் போனவனைக் கண்டுபிடிக்க எவராலும் கூடவில்லை சொந்தமும் சுற்றமும் வந்து எட்டிப் பார்க்கவே அஞ்சியது.

இன்னார் யார் இனியார் யார் என்ற பேதமின்றி யார் யாருடைய காலில் எல்லாமோ போய் விழுந்தெ ழும்பினாள். ஊர்க்காரன் கிருஷ்ணாவுக்கு அரசில் நல்ல செல்வாக்காம் என்று யாரோ கூறக் கேட்டு, இக் கபட நாடக சூத்திரதாரி அவன்தான் என்பதை உணராது, அவன் வீடு தேடியும் வீணாக அலைந்து சலித்தாள்.

"இப்பதான் எங்களைத் தெரியுதோ...? ஊரில பெரிய சாதி பாப்பியள். உங்கிட ஆக்கள்தானே புலி யில பெரிய கையளா இருக்கினம். அவயளிட்டப் போக வேண்டியதுதானே?" என்ற, வெந்த புண் ணிலே வேலைப் பாய்ச்சிய கிருஷ்ணாவின் எகத்தா ளமான பேச்சையும் ஏச்சையும் கேட்டது தான் மிச்சம்.

யாருக்கு நாம் தீங்கு செய்தோம்? எவர்குடியை எப்போது கெடுத் தோம்? எமக்கேன் இந்தப்பாடு? என எதுவும் புரியாது அங்கலாய்த்தாள் பாமா.

"வெள்ளைவானும் வரவில்லை; பாலா என்ற பெயரில் யாரும் கைது செய்யப்படவுமில்லை. கள்ளத் தனமாகப் புருஷனை வெளி நாட்டுக்கு அனுப்பி விட்டு நிவாரணப் பணம் பறிக்க நீலிக் கண்ணீர் வடிக்கிறாள்" என வாய் கூசாமல் பொய்யுரைத்து அபாண்டமாகப் பழி சுமத்து பவர்களை யார் தான் என்ன செய்வது?

ஓடிக்களைத்து ஓடாகித் துரும்பாகி வாடி வதங் கிப் போனாள் பாமா. சொல்லாமல் கொள்ளாமல் திடீரென- ஏழரை ஆண்டுகள் கழிந்தபின்- அவ னைப் பிடித்தாட்டிய சனி விட்டு விலக, எவருடைய புண்ணியத்தாலோ விடுதலையாகி வெளியில் வந்து சேர்ந்தான் பாலா.

'நான்தான் பாலா' என்று அவனாகச் சொல்லித் தான் பாலாவை மற்றவர்கள் அடையாளம் காண வேண்டியதாயிருந்தது. அவ்வளவுக்கு உருக்கு லைந்து போயிருந்தான். உடலளவில் நொந்து போயிருந்தாலும் மனதளவில் பாலா மாய்ந்து போய் விடவில்லை. வாழ்ந்து காட்டவேண்டும் என்ற வைராக்கியம் அவனுக்குள்ளிருந்தது. சின்னா பின்னமாகி விட்ட வாழ்வைச் செப்பனிட்டுச் சீராக்கி விடலாம் என்ற நம்பிக்கை அவனுள் வேர் கொண்டி ருந்தது.

இழப்பதற்கு இனி ஏதுமில்லை என்ற நிலைமையே அவன் நம்பிக்கைக்கு உரமூட்டியது. சிறை வாழ்க்கை அவன் சிந்தனையைக் கூர்மைப் படுத்தி யிருந்தது. இலக்கு இதுதான் என்ற தீர்மானத்துடன், நிதானமாகவும் மிகுந்த அவதானத்துடனும் காய்ந கர்த்திக் காரியம் பார்க்கலானான் பாலா.

'அடாது மழை பெய்தாலும் விடாது தொடரு வோம்' என நாடகம் போட்டுக் கொண்டிருந்த நண்ப னின் நாடகக் குழுவில் மீண்டும் போய் இணைந்து கொண்டான். அதிர்ஷ்டவசமாக அந்தக் குழுவி னருக்கு லண்டனில் இருந்து அழைப்பு வந்தது. சந்தர்ப்பத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டு, தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான் பாலா.

லண்டனில் கால்பதித்ததும் தேம்ஸ் நதியில் கரைத்த புளி போல அந்த லண்டன் மா நகரச் சனத் திரளில் கரைந்து போய் விட்டான் பாலா. அவனைத் தொலைத்து விட்டு, நாடகக் குழுவினர் தோல்விக்கு இலக்கணம் வகுத்த ஈழத்தமிழ் வேந்தன் இராவணனைப் போல வெறுங்கையோடு இலங்கை புக்கார்.(=புகுந்தார்)

பாலா இலங்கைச் சிறையில் கழிக்க நேர்ந்த கால மும் அதனால் ஏற்பட்ட வடுக்களும் சாட்சிகளாகத் துணை செய்ய, சிறையில் கற்ற பாடங்களும் படித்த சட்ட நுணுக்கங்களும் சாதுர்யமாகப் பதில் சொல்ல உதவ நிரந்தர வதிவுரிமை நேராகவே கிடைத்து விட்டது. ஒருவாறாக மனைவி பிள்ளை களையும் கூடவே அழைப்பித்துக் கொண்டுவிட, அவன் வாழ்வில் மீண்டும் வசந்தம் வீச ஆரம்பித்தது.

ஏற்றமுண்டானால் இறக்கமும் வரத்தானே செய்யும். கிருஷ்ணாவின் வாழ்விலும் சரிவு ஏற்படத்தான் செய்தது. புலி புலியென மற்றவர் ளைக் கிலிப்படுத்தியவன் கதையில் நிஜப்புலியே வந்த மாதிரி, காட்டிக் கொடுக்கும் எட்டப்பர்களைக் கருவறுக்கும் இயக்கத்தின் உளவுப்பிரிவு கிருஷ்ணா வைக் குறிவைத்து மோப்பம் பிடிக்க ஆரம்பித்தது.

தலை தப்பினால் போதும் என்ற நிலை கிருஷ்ணா வுக்கு. உடுத்த துணியோடு எடுத்த ஓட்டம் பாலா காலடி பதித்த அதே 'ஹீதுறூ' விமான நிலையத்தில் போய்த்தான் ஓய்ந்தது. பாவம் ராதாவும் அவன் கூடவே இழுபட்டு வந்திருந்தாள்.

தடுப்பு முகாமில் சிறைப்பட்டிருந்தபோது என்ன என்ன பொய்களை எப்படி எப்படிச் சொல்லி வெள்ளையனை ஏமாற்றலாம் என ஒத்திகை பார்த்ததுடன் ராதாவையும் உருப்போட வைத் தான். தானறிந்த அரை குறை ஆங்கிலம் உதவப் போவதில்லை என்பது அவனுக்குத் தெரியும். அதனால் மொழி பெயர்ப்பாளனின் உதவி தேவை என அவன் கோரியிருந்தான்.

ஆனால் விசாரணையின் போது மொழி பெயர்ப் பாளனாக பாலா வரக்கூடும் என அவன் கனவி லும் எதிர்பார்த்திருக்கவில்லை. பாலாவைக் கண்டதும் அவனுக்கிருந்த அற்ப சொற்ப நம்பிக் கையும் தகர்ந்து தரை மட்டமானது. 'மீண்டும் இலங்கை திரும்புவதா? அதை விட இங்கேயே உயிரை மாய்த்துக் கொண்டு விடலாமே', என்று மனம் குமைந்தான். கை விலங்குடன் கூனிப் போயிருந்த பாலாவின் தோற்றம் மனக் கண்ணில் நிழலாடியது. தான் அவனுக் கிழைத்த அநியாயத் தின் பரிமாணம் பூதாகாரமாகி அவன் நெஞ்சைப் பிளந்தது நிச்சயமாக அவன் இதையெல்லாம் மறந்திருக்கமாட்டான். எப்படி முடியும்? தேடிவந்து பழி வாங்கத்தான் போகிறான். எண்ணெய்ச் சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் தவறி விழுந்த குழு நண்டைப் போல் எனது நிலைமை ஆகி விட் டதே' எனக் கிருஷ்ணா அங்கலாய்க் கலானான்.

கிருஷ்ணாவைத் தெரிந்ததாக பாலா காட்டிக் கொள்ளவேயில்லை. யாரோ ஒரு அந்நியனுடன் உரையாடுவது போலவே அவனது முக பாவம் இருந்தது. கேள்விகள் திக்குமுக்காட வைத்தன. தலை சுற்றியது; நாக்குழறியது. பதிலே வெளியே வரமாட்டேன் என்றது. ஏதோ உளறிக் கொட்டிக் கிளறி மூடினான். கண்ணீர்தான் முட்டிக் கொண்டு வந்தது. பிரயத்தனப் பட்டு அடக்கிக் கொண்டான்.

"சசா..பிழை விட்டிட்டன். உவனை அங்கயே சரிக்கட்டி இருக்கவேணும். உள்ளுக்க போனவன் அங்கயே மண்டையப் போட்டிடுவான் எண்டு நினைச்சன்.. வீணாப் போனவன் இப்ப இஞ்ச வந்து எங்கட கழுத்த அறுக்கிறான். ஆரை எவ ரைப் புடிச்சு இப்பிடி எழும்பினானோ தெரியேல்ல" என்று தன் பாட்டில் புலம்பிக் கொண்டிருப்பவனைப் பார்க்க ராதாவுக்குப் பரிதாபம் ஏற்படவில்லை. பற்றிக்கொண்டுதான் வந்தது.

கிருஷ்ணாவுக்கு வாழ்க்கையே நரகமாகிப் போனது. பாலா பற்றிய நினைப்பே நாளும் அவ னைச் சுட்டுப் பொசுக்கியது. தன்னைக் குத்திக் கொல்ல அவன் கத்தியோடு வருவதாகக் கனவு கண்டு அலறியடித்துக் கொண்டு இரவில் எழுந்தி ருந்து அரற்றுவது வழமையாகிப் போனது.

**Home Office** கடிதம் வந்தபோது அதை ராதா தான் முதலில் பிரித்துப் பார்த்தாள். ராதாவின் கண்களிலிருந்து கண்ணீர் கரகரவெனப் பெருக் கெடுக்க என்ன காரணம்? நினைக்க நினைக்க அவளுக்கு அழுகைதான் வந்தது. அவமானத்தால் கூசிக் குறுகிப் போனாள். இப்படிக் கூட ஒருவனால் பழி வாங்க முடியுமா? கத்தியை எடுத்து வந்து செருகியிருந்தால்கூட நியாயம்தான் எனச் சமாதா னப்பட்டிருப்பாள். இப்படிச் செய்துவிட்டானே?

கத்தியைச் செருக வேண்டிய இடத்தில் கருணை யைச் சொரிய அந்தப் புத்தனால்தான் முடியும். ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத் தைக் காட்ட அந்த யேசுவால்தான் இயலும். புத்த னும் யேசுவும் மறு அவதாரம் எடுத்து விட்டார்களா பாலாவின் வடிவத் தில்?

தனது காதலை நிர்தாட்சண்யமாக நிராகரித்த வனை எப்படிப்பழி வாங்கலாம் எனப் புழுங்கித் துடித்தவள்தான் ராதா. தனது தந்தையினதும் கணவனாகப் பின்னாளில் ஆனவனதும் சூழ்ச்சி யால் பாலா சிறைசெல்ல நேர்ந்தபோது உள்ளூர மகிழ்ந்தவள்தான் அவளும். அன்று அவள் நினைத்திருந்தால் பாலாவை எப்படியாவது காப் பாற்றியிருக்கலாம். அந்த மனப்பக்குவம் அப் போது அவளுக்கு இருக்கவில்லை.

அவள் வளர்ந்த சூழல் அவளை அப்படி மாற்றி யிருந்தது. சுயநலத்துக்காகச் சொந்தச் சகோத ரரையும் காட்டிக் கொடுக்கும் கல்மனம் கொண்ட வர்களின் .சேர்க்கை, அவளையும் மலம் உண்ணும் பவ்வி போல உருமாற்றியிருந்தது.


இப்போது நினைத்தால் வெட்கமாகவும் வேதனையாகவும் அவமானமாகவும் இருக்கிறது. ஒரு சிறு புழுவைப் போல சிறுமைப்பட்டுப் போய் விட்டதான கழிவிரக்கத்தில் மனம் குன்றிப்போகிறது.

'பாலாவைத் தேடிக் கண்டு பிடித்து அவன் காலில் விழுந்து கதறி அழ வேண்டும். செய்த பாவங்களைச் சொல்லி, மனம் கசிந்துருகிப் பிராயச்சித்தம் தேடவேண்டும்'. தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்தாள் ராதா.

'விறுக்'கெனப் புறப்பட்டுச் செல்லும் ராதாவை வினோதமாகப் பார்த்துக் கொண்டிருந்த கிருஷ்ணா வின் கையில் **Home Office** இல் இருந்து வந்த கடிதம் படபடத்துக் கொண்டிருந்தது. அதைப் பார்ப்பதும் படிப்பதும் மடிப்பதும் விரிப்பதுமாக இருந்த கிருஷ்ணாவால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அதில் எழுதப்பட்டிருந்ததன் சாராம்சம் இவ்வளவுதான்

'உங்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீங்கள் இந்நாட்டில் தொழில்புரிய உரித்துடையவர் ஆகக் கருதப்படுகிறீர்கள்...'ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# "ஜஸ்டிஸ் லீக்"

வீரம் செறிந்த - வேகம் மிக்க நாயகர்கள் குழுவின் சண்டைகள், விறுவிறு சாகசங்கள் என 2017ஆம் ஆண்டில் வெளிவந்த அமெரிக்க ஆங்கிலத் திரைப்படம் ஜஸ்டிஸ் லீக். பென் அஃப்லெக், ஹென்றி கெவில், கேல காடட், எஸ்ரா மில்லர், ஜேசன் மோமோவோ, ரே ஃபிஷர், ஆமி ஆடம்ஸ், ஜெரேமி ஐரன்சு, டயான் லேன், கோனி நீல்சன், ஜே.கே. சிம்மன்ஸ் ஆகியோர் இந்தப் படத்தில் நடித்திருந்தனர்.

சுப்பர்மேனின் இறப்புக்குப் பிறகு உலகத்தை ஸ்டீபன்வொல்ப் மற்றும் அதன் பாராட்மான்சு படைகளிடமிருந்து காப்பாற்றுவதற்காகச் சுப்பர் ஹீரோக்கள் போராடுவதாக இந்தப் படத்தின் கதை இருக்கும். இந்தப் படத்தை இயக்கியவர் ஸாக் ஸ்னைடர். ஆனாலும் படப்பிடிப்பின் போது அவர் களத்தில் இருக்கவில்லை. இதன் காரணமாக அவரது விருப்பத்துக்கேற்ப படம் அமையவில்லை என்பது குறையாக இருந்தது.

அதனாலோ என்னவோ இந்தப் படத்தின் தயாரிப்பு நிறுவனம் 60 மில்லியன் டொலர் நஷ்டத்தைப் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. படம் தோல்வியடைந்தது. 'ஜஸ்டிஸ் லீக்' உருவாக்கத்தின் போது தனது மகள் இறந்ததால் பாதியில் படத்தை விட்டுச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்ட ஸாக் ஸ்னைடர் மீதிப் படத்தை எடுத்து முடிப்பதற்காக இயக்குநர் ஜாஸ் வீடனை நியமித்தார். அவரது மேற்பார்வையில் எடுக்கப்பட்டுப் படம் வெளியானது. ஆனால் ஸாக் ஸ்னைடர் வழங்கிய பெரும்பாலான காட்சிகளை வீடன் நீக்கிவிட்டார் என்று ரசிகர்கள் மத்தியில் பெரும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதன் விளைவாகத்தான் ஸாக் ஸ்னைடர் மறுபடியும் ஜஸ்ரிஸ் லீக்கைத் திரைப்படமாக்கியுள்ளார். அதே பெயரில் வெளியான இந்தப் படம் இயக்குநர் ஸாக் ஸ்னைடரின் அடைமொழியோடு மறுபடியம் ஒரு பெரு நீளத் திரைப்படமாகத் திரைக்கு வந்துள்ளது.

> "பழைய படத்தில் இருந்த பிரச்சினைகளையும், அது தோல்வி அடைந்ததற்கான காரணங்களையும் நன்கு உள்வாங்கி இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிறார் இயக்குனர்.

**அதே கதை**

டூம்ஸ்டே என்ற இராட்சத வில்லனால் சுப்பர்மேன் (ஹென்றி கெவில்) கொல்லப்படச் சோகத்தில் மூழ்கிக் கிடக்கிறார் அவரது சகபாடியான பேட்மேன். இந்தச் சமயத்தில் பிரபஞ்சத்திலுள்ள உலகங்களை அழித்துக் கொண்டிருக்கும் வில்லன் டார்க்ஸீட் அதற்காக மதர் பொக்ஸ் என்ற பெயர்கொண்ட மூன்று பெட்டிகளைத் தேடுகிறார்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அவர் பூமியை அழிக்க முற்படும்போது அமேசான்ஸ், அட்லாண்டியன்ஸ், மனிதர்கள் ஆகியோரால் வீழ்த்தப்பட அந்த மூன்று பெட்டிகளும் தனித்தனியாக மூன்று இடங்களில் மறைத்து வைக்கப்படுகின்றன. பின்னர் டார்க்ஸீட் தன்னுடைய அடியாளான ஸ்டெப்பன் வொல்ஃப் என்பவரைப் பூமிக்கு அனுப்பி அந்த மூன்று பெட்டிகளையும் கண்டுபிடிக்கச் சொல்கிறார். அவை கிடைத்ததும் உடனடியாக பூமியை அழிக்கவும் உத்தரவிடுகிறார்.

இதனை எப்படியோ அறிந்துகொள்ளும் பேட்மேன் அவ்வளவு பெரிய வில்லனை எதிர்ப்பதற்குப் பல சுப்பர்ஹீரோக்கள் தேவை என்று தீர்மானித்து வொண்டர் வுமன் (கால் கேடட்), சைபார்க் (ரே ஃபிஷர்), ஃப்ளாஷ் (எஸ்ரா மில்லர்), அக்வாமேன் (ஜாஸன் மாமோ) ஆகியோரை ஒன்றிணைக்கிறார். பின்னர் ஒரு கட்டத்தில் சுப்பர்மேனின் உதவியில்லாமல் தங்களால் வெற்றிபெற முடியாது என்று தீர்மானித்துச் சுப்பர்மேனுக்கு உயிர் கொடுக்கும் முயற்சியில் இறங்குகிறது அந்தக் குழு.

சுப்பர்மேன் உயிர்த்தெழுந்து ஸ்டெப்பன் வொல்ஃப்ஜை எதிர்த்துப் போரிடுவதுதான் 2017ஆம் ஆண்டு வெளியான 'ஜஸ்டிஸ் லீக்' படத்தின் கதை. அந்தக் கதைதான் 2021இல் வெளிவந்துள்ள இந்தப் படத்தின் கதையும். ஆனால் சில காட்சிகள் சேர்க்கப்பட்டுப் படத்தின் பயண மணிநேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**பழைய - புதிய படம்**

பழைய படத்தில் இருந்த பிரச்சினைகளையும், அது தோல்வி அடைந்ததற்கான காரணங்களையும் நன்கு உள்வாங்கி இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிறார் இயக்குனர். நான்கு மணி நேரம் ஓடும் இந்தப் படத்தில் முதல் இரண்டு மணி நேரம் கதாபாத்திரங்களின் பின்னணி விவரிக்கப்படுகிறது. துணை நடிகர்களைப்போல காட்சிப்படுத்தப்பட்ட சைபார்க் மற்றும் ஃப்ளாஷ் கதாபாத்திரங்களில், சைபார்க்கும் அவரது தந்தைக்கும் இடையிலான உணர்வுப் போராட்டம், அவரது இளமைக் கால நினைவுகள், அவருடைய முழுமையான சக்தி என விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. ப்ளாஷ் கதாபாத்திரத்தின் ஆளுமையும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வொண்டர் வுமன், அக்வாமேன், ஆல்ஃப்ரெட், லாயிஸ் லேன் என ஒவ்வொருவருக்கும்கூட விரிவான காட்சிகள் படத்தில் உள்ளன. அதைவிட கிராபிக்ஸ் காட்சிகளும் மெருகூட்டப்பட்டுள்ளன. அத்தோடு இந்தப் புதிய படத்துக்கு இசையமைத்துள்ள ஜங்கி எக்ஸ்எல் சிறந்த இசை விருந்தை விறு விறுப்பான சுப்பர் ஹீரோப் படத்துக்கு வழங்கியிருக்கிறார். ஆக, முந்தைய படத்தில் விமர்சனத்துக்குள்ளான விடயங்கள் அனைத்தும் மாற்றப்பட்டுப் புதுப் பொலிவுடன் திரைக்கு வந்திருக்கிறது ஸாக் ஸ்னைடரின் ஜஸ்டிஸ் லீக்.



**பெருவில்லன்**

மார்வெலின் அவெஞ்சர்ஸ் இன்பினிட்டி வோர் மற்றும் அவேஞ்சர்ஸ் எண்ட் கேம் திரைப்படத்தில் மிரட்டிய பெருவில்லன் தானோஸைப் போன்றதொரு பயங்கர வில்லனை இந்தப் படத்திலும் காணலாம். முந்தைய படத்தில் வில்லனாக இருந்த ஸ்டெப்பன்வொல்ஃப் கீழிறக்கப்பட்டு டார்க்ஸீட் என்ற ஒரு பெரிய வில்லன் இதில் வருகிறான்.

அந்த வருகை அடுத்த பாகங்களை எதிர்பார்க்க வைப்பதாக இருக்கிறது. ஆக மொத்தத்தில் முதல் படத்திலிருந்த பலவீனங்களைக் களைந்து கதாபாத்திரங்களின் ஆழமான பின்னணி, உணர்வுபூர்வமான காட்சிகள், சிறந்த இசை, உறுத்தாத கிராபிக்ஸ் ஆகியவற்றால் ஈர்க்கிறது இந்தப் படம். என்னதான் இருந்தாலும் முதல் படத்தைப் பார்ப்பதுபோன்ற உணர்வே இந்தப் படம் முடியும் வரையும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை

இந்த இடமாற்றம்
இன்று - எம்
இதயத்தையே
இடம் பெயர வைத்து விட்டது
அகதிகளாய் அல்ல அடிமைகளாய்...

வலியோர்க்கு எளியோர்
என்றும்...
இளைத்தவர்கள்தான் என்பதை
இது சுட்டி நிற்கின்றது...

எமக்குள்ளும்
ஒரு கறுப்பு ஆடு உண்டு
அது காடு வரை...
நம்மை கழுத்தறுத்து விட்டது...

நாம் ஒருபோதும் சூதாடவில்லை
கடமையெனும் பெயரில்...
அவர்கள்தான் நம்மை வைத்து
ஆடினார்கள்...

ஆடியவர்கள் வீட்டிலே
நாமோ காட்டிலே
இதுதான் தர்மமாம்...
அவர்கள் ஏட்டுப் படிப்பிலே

எம்மை
அனுப்பி விட்டோமென்று
சிலர் எக்காளம் இடுகிறார்கள்...


தன் வினை தன்னை சுடும்பொழுது
அவர்கள் ஒப்பாரி...
நாம் இருந்த காடு வரை கேட்கும்
என்பதை மறந்தே விட்டார்கள்

நாங்கள் போகும் பொழுது
பாண்டவர்களாய் போகவில்லை
ஆனால் திரும்பும் பொழுது
நிச்சயம் பாண்டவர்களாய்
திரும்புவோம்...

எம் ஆன்மா...
உங்கள் முன்
பிரமாஸ்திரமாய் எழுந்து நிற்கும்
அந்த நம்பிக்கை எமக்குண்டு - சதியே
உனக்குண்டா...?

இன்னும்
பாரதம் முடிந்தபாடில்லை
சில சந்தர்ப்பங்களில்
அது தொடரத்தான் செய்கின்றது...

சாம் - ரமேஸ்குமார்
மருதனார்மடம்.



# விலகியது எல்.ஜி!




நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவரும் துறை அலைபேசி தொழில்நுட்பத் துறை. கடும் போட்டி நிறைந்த இந்தத் துறையில் தாக்குப்பிடிப்பது என்பது மிகப் பெரிய கலை. அந்தக் கலை தனக்கு இனிமேல் கைவராது என்று தெரிவித்து ஒதுங்கியுள்ளது எல்.ஜி. நிறுவனம்.

உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான எல்.ஜி. அலைபேசி உற்பத்தித்துறையில் அப்பிள், சாம்சுங் நிறுவனங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் இருந்தது. அதன் உற்பத்திகளுக்கு உலகின் பல நாடுகளிலும் பெரும் வரவேற்பிருந்தது. ஆனால் 2013இல் இருந்து இந்த நிலைமை கடந்த சில ஆண்டுகளாக இல்லை என்கிறது அந்த நிறுவனம். சந்தையில் எல்.ஜி. தயாரிப்புக்களுக்கு இப்போது வரவேற்பில்லை.

கடந்த சில வருடங்களில் மட்டும் தமது திறன்பேசி உற்பத்தித்துறையால் ஏற்பட்ட இழப்பு 4.5 பில்லியன் டொலர்கள் என்று அறிவித்துள்ளது அந்த நிறுவனம். இதையடுத்து தமது அலைபேசி உற்பத்தித் துறையை அடுத்த ஆடி (ஜூலை) மாதத்துடன் முழுமையாக மூடிவிடப்போவதாகவும் அது அறிவித்துள்ளது.

இதன் மூலம் தங்களால் எல்.ஜி.யின் மற்ற தயாரிப்புகளான மின்சார வாகனங்கள் மற்றும் ஸ்மார்ட்ஹோம் தயாரிப்புகள் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த முடியும் எனத் தெரிவித்துள்ளது. தற்போது உலக அளவில் ஸ்மார்ட்போன் விற்பனையில் எல்.ஜி.யின் பங்கு 2 சதவிகிதமாக இருக்கிறது. கடந்த ஆண்டு 23 மில்லியன் அலைபேசிகளை விற்பனை செய்துள்ளது அந்த நிறுவனம். இதே நேரத்தில் கடந்த ஆண்டு சாம்சங் 256 மில்லியன் திறன் பேசிகளை விற்பனை செய்துள்ளது. உலகளவில் எல்.ஜியின் ஸ்மார்ட்போன்கள் பெரியளவில் விற்பனையாகவில்லை, எனினும் வட அமெரிக்காவில் 10 சதவிகித பங்குகளுடன் ஆப்பிள் மற்றும் சாம்சங்கைத் தொடர்ந்து மூன்றாவது இடத்தில் எல்.ஜி. நிறுவனமே இருக்கிறது.

இப்போது பயன்பாட்டில் இருக்கும் எல்.ஜி. போன்களுக்கு குறிப்பிட்ட காலம் வரை மென்பொருள் மேம்பாடு வழங்கப்படும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அலைபேசி தயாரிப்பில் முன்னர் ஜாம்பவான்களாக இருந்த நோக்கியா, ஹெச்.டி.சி மற்றும் ப்ளாக்பெர்ரி போன்ற பல நிறுவனங்கள் சந்தையில் இருக்கும் கடுமையான போட்டியைச் சமாளிக்க முடியாமல் கடும் இழப்புகளைச் சந்தித்து வந்தாலும், திறன்பேசி தயாரிப்பிலிருந்து முழுமையாக விலகும் முடிவை எல்.ஜி. நிறுவனமே முதலில் எடுத்திருக்கிறது.

# வீணாகிய கொரோனா தடுப்பூசி!




இலங்கையில் கொரோனா தடுப்பூசி முதல் கட்டம் வழங்கப்பட்ட பின்னர் இரண்டாம் கட்டத்தை வழங்க முடியாமல் இருக்கிறது. முதல் கட்ட மருந்தை வழங்கிய இந்தியா அடுத்த கட்ட மருந்தை வழங்குவதற்குக் கால தாமதம் செய்வதே இதற்குக் காரணம். முதல் கட்ட மருந்து வழங்கப்பட்டவர்களில் 90 சதவீதம் பேருக்கு அது நன்கு வேலை செய்திருக்கின்றது என்று ஆய்வாளர்கள் அறிவித்துள்ளபோதும் இரண்டாம் கட்ட மருந்தும் கட்டாயம் செலுத்தப்படவேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் அமெரிக்காவில் மேரிலாண்ட் மாநிலத்தில் நடந்த தனி மனித தவறால் ஒன்றரை கோடி டோஸ் கொரோனா தடுப்பூசி மருந்து வீணாகியுள்ளது.

அங்குள்ள பால்ட்டிமோர் தொழிற்சாலையில் ஜான்சன் & ஜான்சனின் தடுப்பூசி உற்பத்தி செய்யப்படுகிறது. இது ஒரு டோஸ் மட்டும் போட வேண்டிய தடுப்பூசியாகும்.

ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்ட்ராஜெனகாவின் தடுப்பூசியும் அங்கு தயாரிக்கப்பட்டு வருகிறது.

எமர்ஜென்ட் பயோசொல்யூஷன்ஸ் என்ற மருந்து நிறுவனம் இந்த உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிலையில், நிறுவனப் பணியாளர்கள் சிலரின் தவறால் இந்த இரண்டு தடுப்பூசிகளின் வேதிப்பொருட்களும் ஒன்றாக கலந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் ஒன்றரை கோடி டோஸ் தடுப்பூசி யாருக்கும் பயனின்றி வீணாகி விட்டதாக நியூ யார்க் டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெயிலில் சுற்றித்திரியும் ஆண்களுக்கான அழகுக்குறிப்பு..!!



சண்முகதேவி கௌரிதரன்
(அழகுக் கலை நிபுணர்)

இன்றைய நாள்களில் வெயில் வெப்பம் அதிக ரித்துக் காணப்படும் வேளை யில் அதிகம் வேலை காரணமாக வெளியில் உலாவுபவர்கள் ஆண்களே..

இந்த வாரம் ஆண்களது முக அழகினை பாதுகாத்துக் கொள்ளவும், மேலும் அழகாக்கவும் எவ்வாறான வழிகளைக் கையாளலாம் என்பது பற்றி பார்ப்போம்..

ஆண்கள் வேலை நிமித்தமாக அதிகமாக வெயிலில் சுற்றிதிரி வார்கள். வீட்டுக்கு வந்தவுடன் முகத்தை நன்றாக குளிர்ந்த நீரில் கழுவவேண்டும், அல்லது நேரமிருந்தால் ஐஸ் கட்டியினை ஒரு துணியில் போட்டு முகத்தில் ஒத்தடம் கொடுக்கவும். இதனால் முகம் தெளிவடையும். இதனை தினமும் செய்யவேண்டும்.

மேலும், சில ஆண்களுக்கு முகம் உலர்ந்து சொரசொரப்பாக காணப்படும். அவர்கள் முட்டையின் மஞ்சள் கருவை எடுத்து அதில் பாலாடையும், பன்னீரையும் கலந்து முகத்தில் தடவி 10 நிமிடம் ஊறவிட வேண்டும். பிறகு இளஞ்சூடான வெந்நீரில் கழுவினால் சில நாட்களில் தோல் மிருதுவாக மாறி பளபளப்பாக மாறிவிடும்.





---

தனஞ்செயன்

# அரசியல் தவிர்க்காத அழகு :ஹான் லே

கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் தன்கதையைப் படமாக்கப் போவதாக அறிவிக்கப்பட்டபோது அதில் நடிகர் விஜய் சேதுபதி நடிப்பதற்குக் கடும் எதிர்ப்புத் தெரி விக்கப்பட்டது. அப்போது சொல்லப்பட்ட கார ணங்களில் ஒன்று பன்னாட்டு விளையாட்டு அரங் கில் முரளிதரன் விளையாடிக்கொண்டிருந்த காலத்தில் இலங்கையில் தமிழர்களுக்கு எதி ராக நடந்த, நடந்துகொண்டிருந்த இன ஒடுக்கு முறை குறித்து ஒரு தடவைகூட அவர் குரல் எழுப்பியதேயில்லை என்பதாக இருந்தது.

ஆனால், மியான்மர் நாட்டைச் சேர்ந்த அழகி ஹான் லே அப்படிப்பட்டவரல்லர். பன்னாட்டு அழகிப் போட்டிக்காக தாய்லாந்து நாட்டுக்கு வந்த அவர், தனது எதிர்காலத்திற்கு அப்பால் சென்று தனது மக்களுக்காகவும் அவர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைக்கு எதிராகவும் குரல் எழுப்பியிருக்கிறார். உலகத்தின் கண்களை அவர் பக்கம் திருப்பியிருக்கிறது அவரது குரல்.

''அழகிகள் ஒவ்வொரு முறையும் புன்னை கைக்க வேண்டும். ஒவ்வொரு மக்களிடமும் தனிப்பட்ட முறையில் இணைந்திருக்க வேண் டும்! ஆனால், இப்போது என்னால் அது முடி யாது! என் மக்கள் அங்கு இறந்துகொண்டி ருக் கும்போது என்னால் இங்கு மகிழ்ச்சியாக சிரித் துக்கொண்டிருக்க முடியாது'' என்றார் ஹான் லே.

தாய்லாந்தில் நடைபெற்ற `மிஸ் கிராண்ட் இன்டர்நேஷனல்' என்ற அழகிப்போட்டி மேடையில், 22 வயதான ஹான் லே தனது மக்களுக்காக உதிர்த்த வார்த்தைகள் இவை! கண்களில் நீர் ததும்ப, அவர் பேசிய அந்த இரண்டு நிமிடப் பேச்சு உலகையே உணர்ச்சியில் உறையவைத்திருக்கிறது.

''வாழ்வதற்காக, அப்பாவி மக்களும் இளம் பெண்களும், குழந்தைகளும்கூட தங்கள் உயி ரையும் பணயம்வைக்கிறார்களே... ஏன்? இந்த நிலைமை எங்காவது நடக்கிறது என்றால், உலகெங்கிலும் உள்ளவர்கள் ஒரு தீர்வைக் கண்டுபிடித்து அவர்களுக்கு உதவ முயல வேண்டும்.'' - ஹான் லே

இன்றிரவு நான் இந்த மேடையில் நிற்க, என் அன்பான மக்கள் எனக்காக மிகக் கடுமையாக உழைத்துள்ளனர். காரணம், என் நேசத்துக்குரிய நாடான மியான்மரில், தற்போது நிலவிவரும் சூழ்நிலையால் பெரும் அவதிப்பட்டுவரும் அவர்கள் சார்பாக, அவர்கள் அனுபவித்துவரும் `வலியையும் வேதனைகளையும்' நான் இங்கு பேச வேண்டும் என்பதற்காக!

அங்கே தெரு வீதிகளில் தங்கள் உயிரை இழந்த என் மக்களுக்காக நான் வருந்துகிறேன். உலகின் ஒவ்வொரு குடிமகனும் தங்கள் நாட் டில் செழிப்பையும், அமைதியான சூழலையுமே விரும்புகிறார்கள். அப்படி இருக்கும்போது,



சம்பந்தப்பட்ட தலைவர்கள் தங்களின் சுய நலத் துக்காக அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது.

வாழ்வதற்காக, அப்பாவி மக்களும் இளம் பெண்களும், குழந்தைகளும்கூட தங்கள் உயி ரையும் பணயம் வைக்கிறார்களே... ஏன்? இந்த நிலைமை எங்காவது நடக்கிறது என்றால், உல கெங்கிலும் உள்ளவர்கள் ஒரு தீர்வைக் கண்டு பிடித்து அவர்களுக்கு உதவ முயல வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மியான்மர் நாட்டில், கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆங் சான் சூகி வெற்றி பெற்று ஜனநாயக தேசிய லீக் கட்சி ஆட்சி அமைத்தது. ஆனால், தேர்தலில் முறைகேடு நடந்ததாகக் கூறி, 2021ஆம் ஆண்டு, பெப்ர வரி மாதம் அந்நாட்டு படையினர் ஆட்சியைக் கவிழ்த்து, அதிகாரத்தைக் கைப்பற்றினர். இதை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான மியான் மர் மக்கள் வீதியில் இறங்கிப் போராடிவரு கின்ற னர். படைத்துறை ஆட்சிக்கு எதிரான இந்தப் போராட்டத்தில், இதுவரையில் 500க்கும் மேற்பட்ட மக்கள் அந்த நாட்டுப் படையின ரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்க ளில் 43 பேர் குழந்தைகள் என `சேவ் சில்ட் ரன்' (Save Children) அமைப்பு தெரிவிக்கிறது.

இந்த நிலையில், யங்கூன் பல்கலைக்கழத்தின் பொருளாதார மாணவியும், மியான்மர் நாட் டின் இளம் அழகியுமான ஹான் லே-வின் பேச்சு உலக மக்களின் பார்வையை மீண்டும் மியான்மரின் பக்கம் திருப்பியுள்ளது. மேலும், அந்த மேடையில் ஹான் லே, ''இந்த மேடையில் நான் இப்போது பேசிக்கொண்டி ருக்கிறேன், இதேநேரம் என் நாட்டில் 100க்கும் மேற்பட்ட மக்கள் இறந்துகொண்டிருக்கிறார்கள். உயிரிழந்த அனைத்து மக்களுக்காகவும் நான் கண்ணீர் வடிக்கிறேன்'' என்றார். கண்ணீரை இருத்திக்கொண்டே தொடர்ந்து ''மியான்மர் மக்கள் ஜனநாயகத்துக்காக அங்கு வீதியில் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நானும் அந்த ஜனநாயகத்துக்காக இங்கு மேடையில் வேரூன்றியிருக்கிறேன்'' என்றதும், அரங்கத்தி லிருந்த பார்வையாளர்கள் அனைவரும் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்து ஹான் லேவின் உரிமைக் குரலுக்காக தங்களின் ஆதரவைத் தெரிவித்தனர்.

ஹான் லே தற்போது தனது தாய்நாடான மியான்மருக்குச் செல்ல முடியாது. அவரின் சமூக வலைதளப் பக்கங்களில் தொடர்ந்து கொலை மிரட்டல்கள் வருகின்றன. அவர் மியான்மருக் குச் சென்றால் நிச்சயம் கைதுசெய்யப்பட்டு சிறை யில் அடைக்கப்படுவார். ஏற்கெனவே கடந்த வாரம் மட்டும் படையினரின் ஆட்சிக்கு எதி ராகக் கருத்து தெரிவித்ததற்காக பத்திரிகை யாளர்கள் உட்பட 18 பிரபலங்கள் மியான்மர் பாதுகாப்பு படையால் கைதுசெய்யப்பட்டுள்ள னர். மேலும், `அசிஸ்டன்ஸ் அசோசியேஷன் ஃபார் பொலிடிக்கல் பிரிஸனர்ஸ்' (Assistance Association for Political Prisoners) என்ற அமைப்பு 2,500க்கும் மேற்பட்டோர் படையி னரால் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தகவல் தெரிவிக்கிறது.

இதற்கு முன்பாக ஹான் லே, யங்கூன் நகர தெருக் களில் படையினர் ஆட்சிக்கு எதிராகக் களத் தில் இறங்கி போராடிக்கொண்டிருந்தார் என்ப தும் குறிப்பிடத்தக்கது. இதனால் தன் நண்பர்கள், குடும்பம் மற்றும் மக்களின் அறிவு றுத்தலின் பேரில், அடுத்த சில மாதங்களுக்கு தாய்லாந்தி லேயே தங்க முடிவெடுத்திருக்கிறார் ஹான் லே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமையறிதல் 02

ஐயங்கொண்டான் சுவாமிகள்

ஏன் எதற்கு என்ற கேள்விகளைத் தவிர்த்து அப்படித்தான் எம்முன்னோர்கள் செய்து வந்துள்ளனர் என்ற ஒரே கருத்தை மட்டுமே கொண்டும் இன்றைய வாழ்க்கை முறைக்கும் எமது வசதிக்கும் ஒத்துப்போவதை மட்டும் கொண்டும், சொல்வார் சொற்கேட்டு பின்தொடர்கின்றவை ஏராளம். யதார்த்தத்தை உணர்ந்து சுயசிந்தனைத் தெளிவோடு எதையாவது செய்கின்றோமா?

அத்தகைய கண்மூடித்தனமான பின்பற்றுதலில் தீட்டு எனும் ஒரு விடயம் தொடர்பாக பார்த்தோம். தீட்டு என்பது ஒரு வகையான தொற்று (அபாயம்) என்பதற்கப்பால் ஒன்றுமேயற்ற ஒன்றுக்காக போலிச் சம்பிரதாயங்களை ஏற்படுத்தி வைத்துப் படுகின்ற பாடு இருக்கிறதே...? சரியாகச் சிந்தித்துப் பார்த்தால் எம் மீது எமக்குப் பரிதாபப்படுவதா அல்லது கோபப்படுவதா என்ற குழப்பமே எஞ்சும்.

சாவுக்கு தீட்டு என்று புலம்புகிறோம். எமது உடலுக்குள் ஒவ்வொரு கணமும் எத்தனை கோடி சாவுகள் தொடர்ந்தும் நடக்கின்றன? ஆலய மூலஸ்தானத்தில் நிற்றும் குருக்களின் உடலினுள்ளும் இது நடக்கிறதுதானே? கலங்கள் இறக்கின்றன. அழிகின்றன. மீளப்பிறக்கின்றன. அப்படியானால் அவற்றுக்கு சாவுத் தீட்டு பிறப்புத் தீட்டு எல்லாம் என்னவாயிற்று? எங்கே போயின?

சாவு வீடு என்பது பலரும் கூடுமிடம். பல்வேறு நோயுள்ளோரும் அவர்களுள் இருக்கலாம். இறந்து போனவரின் உடல் தீய கிருமிகளை வெளிவிடலாம். இது அறிவியல் ரீதியான ஒரு அச்சம். தவிர்க்கக்கூடாதது. அவ்விடம் சென்றால் எமது உடல் மற்றும் உடமைகளை சுத்தப்படுத்தவேண்டும் என்பது சுகாதாரத்துக்கானது. அதைத்தான் தீட்டு என்று கருதினால் நியாயமானது. ஆனால் அவ்வீட்டினது தீட்டு சாதாரணமானவர்களின் வீடுகளுக்கு முப்பத்தொரு நாள் அந்தணர் வீடுகளுக்கு



பதினொருநாள் என்கின்ற கணக்குமுறைகள் எதற்காக?

அதனையும் விட்டால் புலம்பெயர்ந்த நாட்டில் இறந்த ஒருவனுக்காக தாயகத்தில் உள்ள அவனது வீட்டிற்கும் குடும்பத்தாருக்கும் எப்படித் தீட்டாக முடியும்? அதைவிடச் சிரிப்பிற்குரிய விடயம் இந்தத் தீட்டு என்கிற விடயம் ஆண் வழி உறவுகளுக்குத்தான் ஏற்படும் என்பது. (இத்தீட்டானது இறப்பு மற்றும் பிறப்பு இரண்டிற்கும் பொருந்தும்.) எமது சிந்தனையாற்றலானது எந்தளவில் செயற்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இவற்றைக்கொள்ளமுடியும். அறிவியல் வளர்ந்து விட்டது என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் தகுதியை நாம் கொண்டிருக்கின்றோமா?

சாவு வீட்டில் உணவுண்டால் தீட்டு. சாவு வீட்டில் தேனீர் குடித்தால் தீட்டு. தந்தைக்கோ தாய்க்கோ இறுதிக் கடமை செய்த ஒருவன் உணவகத்தில் தயாரித்த உணவின் நிலைப்பாடு என்ன? அந்த உணவை மறுநாள் தாலி கட்டவிருக்கின்ற மணமகனோ மணமகளோ உண்பதில்லையா? இறப்பு வீட்டில் பிணத்திற்கருகில் இருந்த கதிரை மணமேடையில் ஒரு சில நாட்களுள் ஏறுவதில்லையா? என்கின்ற கேள்வியை மூடநம்பிக்கையுள்ள சிலரிடம் கேட்டபோது கிடைத்த பதில் இருக்கிறதே அது போதும் எமது முட்டாளத்தனத்தை நிரூபிப்பதற்கு.

அவர்களில் அனேகரின் பதிலின் சாரம், தெரியாமல் செய்வது குற்றமில்லை என்பது தான். அது என்ன தெரிந்து கொண்டு செய்வது? தெரியாமல்ச் செய்வது? தீட்டு என்று பின்பற்றுகிற விடயத்துக்கு ஆராயுமறிவிருந்து இவர் தெரியாமற் செய்தார் இவரை ஒன்றும் செய்யக்கூடாது என்றோ தெரிந்து செய்கிறார் அவரைப் பிடிக்கிறேன் என்றோ நடக்க வாய்ப்புகளேதும் இருக்குமா? தொற்று என்கின்ற அறிவியல் ரீதியானதாக இருக்கின்ற ஒரு விடயம் பாரபட்சம் பார்க்குமா? விலக்களிப்பைச் செய்யுமா? எமது சிந்தனையாற்றல் குறைபாடுதான் இவ்வாறான சமாளிப்புகள் என்பதற்கப்பால் தம்மையும் பிறரையும் ஏமாற்றுகின்ற அயோக்கியத்தனம் என்று ஏன் கருதக்கூடாது?

நம்பிக்கை என்பது அறியாமைக்கான காவலாகவே இருந்து வருகிறது. சம்பிரதாயம் என்பது நம்பிக்கையீனர்களின் காப்பரணாகவுள்ளது. சம்பிரதாயம் என்பது சிந்தனை என்பதை மழுங்கடித்தே தனது ஆட்சியை நடத்துகிறது. எனவேதான் தன்னம்பிக்கையற்றவர்களால் சுயமாக விரிதிசையில் செயற்படுவதற்கல்ல சிந்திக்கவே முடியாமலிருக்கிறது. அவர்களால் எதனையுமே கேள்விக்குட்படுத்த முடியாதுள்ளது. தமக்கு வசதியானதை கண்மூடிப் பின்பற்றவும் அதையே வழமையாக்கவும் படிப்படியாக அவற்றையே விதியாக்கவும் முற்படுகின்றனர். அதற்கு சமயக் கற்பிதங்களை உருவாக்கி தம்மை வசியாக மறைத்துக் கொள்கின்றனர்.

இவை பற்றிய சிந்தனை எழுகிறதா? சிந்தனை தொடரட்டும்.....


அவுஸ்திரேலியாவில் உயர் கல்வியைத் தொடர அநேகமான மாணவர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு

Courses available:

Diploma | Bachelor Degree | Master Degree

Bio Medical Sciences, Hospitality, Information Technology, Engineering and Nursing

கிடைக்கப்படும் நன்மைகள்:-

- படித்துக் கொண்டே ஒரு வாரத்தில் 20 மணி நேர வேலைக்கான அனுமதி உண்டு.
- பட்டபடிப்பை நிறைவு பெற்று 24 மாத வேலை செய்வதற்கான அனுமதி உண்டு.

இலங்கையில் கல்வி கற்ற பொறியியலாளர்களுக்கு ஆஸ்திரேலியா விசா!!!

Australian Skilled – Recognised Graduate Visa for Civil Machanical, Electrical, Electronics, Chemical Engineers (Graduated within the Last 2 years)

18 Months to work in any State and Cities in Australia.

தகைமைகள்:

- வயது எல்லை 31
- பொறியியலாளர் பட்ட படிப்பு
  BSc.Engg from University of Moratuwa, University of Peradeniya, University of Jaffna, University of Ruhuna
- ஆங்கிலம் - IELTS average 6

தொடர்புகளுக்கு:-

HOTLINE: 0766228891

Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com



அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக வசிப்பதற்கான வாய்ப்பை பெற கீழ் காணும் தகமைகளுடன் விண்ணப்பிக்கவும்

MIGRATE TO AUSTRALIA

| Degree Holders: | Diploma Holders: (HNDE, NDT, NDES) | NVQ IV Holders: (CGTTI, AETI, NAITA, ATI) |
| --- | --- | --- |
| Engineers<br>IT Professionals<br>Agricultural Professionals<br>Architects<br>Quantity Surveyors<br>Land Surveyors<br>Social Workers<br>Nurses | Civil Engineering Associates<br>Mechanical Engineering Associates<br>Telecommunications Engineering Associates<br>Electrical Engineering Associates<br>Maintenance Planners | Motor Mechanics<br>A/C Mechanics<br>Electricians<br>Auto Electricians<br>Fitters<br>Welders<br>Machinists |

Requirements:

- ★ Age below 45
- ★ Qualifications (Degree / Diploma / Certificate – NVQ III & IV)
- ★ Work experience in the relevant field
- ★ IELTS (6 in each) or PTE (50 in each)

CALL FOR FREE CONSULTATION:

- Partner Migration Visa
- Parents Visa
- Business Visa
- Visitors Visa

தொடர்புகளுக்கு:-

HOTLINE: 0766228891

Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# பூச்சியத்தை ஈட்டும் சூனியம்





கதை 28

காந்தரூபன் - உரும்பிராய்

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் வாழ்ந்து வரும் தமிழர்கள் மிக நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டவர்கள். இவ்விரு பிரதேச மக்களிடமும் மிகவும் தொன்மையான வாழ்க்கை முறை, பருவகால விவசாயம், பருவகாலச் சடங்குகள் எனப் பல்வேறு விடயங்கள் உண்டு. அவற்றில் பாராம்பரியத் தமிழ் மந்திரங்கள், மூலிகைகள் பற்றிய அறிவு போன்ற விடயங்களும் அடங்கும். இந்தப் பாரம்பரிய தமிழ் மந்திரங்கள் தெரிந்தவர்கள் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்களாகவும்





சிறிய இனக்குழுவாகவும் மாந்திரீகத்தைத் தமது தொழிலாகவும் - வாழ்வாதார மார்க்கமாகவும் கையாண்டு வருகின்றனர். இதில் சூனியம் வைத்தல், அதை இல்லாதாக்குதல், ஆளுக்காள் பழிவாங்குதல் போன்ற பல விடயங்கள் உள்ளன.

யாழ். குடாநாட்டில் ஆங்காங்கேயுள்ள முச்சந்திகள், மூலைமுடுக்குகளில் கழிப்புக் கழித்திருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது இத்தொழில் முறையின் ஓர் அடையாளமாகும். இதில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என வேறுபாடு இல்லை. மட்டக்களப்பில் வாழ்பவர்கள் சூனியக்காரர்கள் அல்லது மாந்திரீகக்காரர்கள் என்று கூறும் பழக்கம் யாழ்ப்பாணத்தவர்களுக்குண்டு. யாழ்ப்பாணத்தவர்களுடன் ஒப்பிடுகையில் மட்டக்களப்பில் இந்தப் பாரம்பரியம் அதிகமிருந்தாலும் யாழ்ப்பாணத்தில் இது அறவே இல்லாமலும் இல்லை. யாழ்ப்பாணத்தில் பல ஊர்களிலும் பல குடும்பத்தவர்களிடத்திலும் சூனியம் வைப்பது ஒரு போட்டி நடைமுறையாக உள்ளது. "அந்தக் குடும்பத்தோட கொழுவக்கூடாது கொழுவினால் சூனியம் வைத்து விடுவார்கள்" என்று சில ஊர்களில் உள்ளூரவர்கள் நாசுக்காகச் சொல்வார்கள். அவர்கள் சுட்டும் வீட்டிலோ, அல்லது சூனியம் செய்பவர் என்று அடையாள - சந்தேகிக்கப்படுகின்ற யாராவதோ எதையாவது குடிக்கத் தந்தால் அதை விர லால் தொட்டு ஒரு துளியையாவது நிலத்தில் தட்டிவிட்டுக் குடிக்க வேண்டும்" என்பது சிலரின் கடைப்பிடிப்பாக இருக்கிறது.

குடிப்பதற்குச் செம்பில் தண்ணீர் வழங்கும் போது அதில் நீர் நிறைந்திருப்பதால் குடிக்க முடியாது என்றுகூறி அதிலுள்ள தண்ணீரில் ஒரு பகுதியை நிலத்தில் ஊற்றிவிட்டு மீதியைக் குடிக்கும் பழக்கமும் உண்டு. இப்படிச் செய்தால் குடிக்க வழங்கும் பானங்களுக்குள் யாராவது சூனியப் பொருள்களைக் கலந்திருந்தால் அது பலிக்காது என்று மூத்தவர்கள் கூறியிருப்பதால் அவர்கள் அதை நம்புகிறார்கள்.

உணவு சேமிக்காதிருப்பது, உடல் வீங்கியிருப்பது, கை,கால்கள் இயங்காதிருப்பது, வீட்டிலிருந்து வெளியேற முடியாமல் தடைகள் உண்டாவது, பயந்த நிலையில் அமைதியாக இருப்பது போன்ற எல்லாமே சூனியத்துக்குள் அகப்பட்டதன் வெளிப்பா டுகள் என்கிறார்கள். இத்தகைய நிலைக்காட் பட்டவர்களை மீட்கவும், தொடர்ந்து முடக்கவும் மந்திரங்களும் மூலிகைகள் பற்றிய அறிவும் உள்ள சூனியக்காரர்களால் மட்டுமே முடியும். இவர்கள் யாழ். குடா நாட்டில் எல்லாப் பாகங்களிலும் இரகசிய மாகத் தொழில் செய்து வருவதும் இதன்பால் பல ஏமாற்றுக்களைச் செய்வதும் யாழ்ப்பாணத்துத் தொன்மைகளின் ஓர் அடையாளமாக இருக்கிறது.

கிராமங்கள், உள்ளூர்களில் இவர்களைச் செய்வினை செய்யும் சூத்திரதாரிகள் என்று விளிக்கிறார்கள். சூனியம் என்பது ஒரு மனிதனின் வாழ்க்கையைப் பூச்சிய நிலைக்குக் கொண்டு செல்லும் தீய நோக்கில் செய்யப்படுவதே. அதிலிருந்து மீட்பதற்காகச் செய்யப்படும் மறுத்தான் வேலைத்திட்டம் சிலவேளை நல்லதாக இருக்கலாம். இத்த கைய தீய நோக்கங்களால் அப்பாவி மக்கள் பலர் தமது கல்வியை, தொழில் முயற்சிகளை இழந்து, தீராத நோய்களை, நிம்மதியற்ற வாழ்க்கையை அனுபவித்துத் தமது வாழ்க்கையைத் தொலைத்திருக்கிறார்கள். இன்னொருவர் மீது ஏவிவிடப்பட்ட இந்தச் செய்வினை, சூனியங்களின் எதிர்வினை யாகவும் அவற்றின் தீய அதிர்வலைகளாலும் அவற்றைச் செய்தவர்களின் வாழ்க்கையும் பூச்சிய நிலைக்குச் செல்வதை நடைமுறை வாழ்வில் காணமுடிகிறது.

## தெங்குச் செய்கையை....

காணப்படுகின்றபோதிலும், B1, B2 மற்றும் G1, G2 என்பன மனிதனுக்கும் விலங்குகளுக்கும் ஆபத்தானவையாகும். ஈரல் மற்றும் சிறுநீரகத்தினைப் பாதிப்படையச் செய்யும் புற்றுநோய்க்குரிய காரணியாக அவ்லாரொக்சின் காணப்படுகிறது.

**தென்னைப்பொருட்களின் ஏற்றுமதி**

தென்னைப் பயிர்ச்செய்கையைக்கான காலநிலை, மண் வளம் என்பவற்றை நம் நாடு கொண்டிருந்தும் தெங்கு வளத்தில் தன்னிறைவடையத் தவறியதனால் மெற்றிக் தொன் கணக்கில் தேங்காய் எண்ணெய்யைத் தருவிக்கவேண்டிய கட்டாயத்திலேயே நாட்டு நிலவரம் காணப்படுகின்றது. தெங்குப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத் தப்பட்ட நிலங்கள் பாகம் பாகமாகப் பிரிக்கப்பட்டு ஏனைய தேவைகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன் பூச்சித் தாக்கங்கள் காரணமாக விளைச்சல் குறைவடைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேங்காய் எண்ணெய்யின் உள்நாட்டு தேவையைப் பூர்த்திசெய்ய பெருமளவிலான தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டாலும் தென்னை மற்றும் தேங்காய் சார்ந்த உற்பத்திகள் பெருமளவில் இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகிக்கொண்டே இருக்கின்றன. தேங்காய்ப்பூ துருவல், கொப்பரா, இளநீர், புண்ணாக்கு, தேங்காய்ப் பால், தேங்காய்ப் பால்மா, கொழுப் பகற்றப்பட்ட தேங்காய், வினாகிரி, பட்டர் மற்றும் தென்னஞ்சாராயம் என்பன தேங்காயோடு சார்ந்த ஏற்றுமதிப் பொருட்களாகும்.

இதனைவிட,மெத்தைக்குரிய நார்கள், தூரிகைக்குரிய நார்கள் என்பவற்றோடு சிரட்டையை அடிப்படையாகக் கொண்ட பொருட்களும் ஏற்றுமதிப் பட்டியலில் இடம் பிடித்திருக்கின்றன. தென்னையிலிருந்து பெறப்படும் தும்பை அடிப்படையாகக்கொண்ட பொருட்களும் ஏனைய ஈர்க்கில் போன்ற பொருட்களும் மெற்றிக்தொன் அளவில் இலங்கயிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டே வருகின்றது. நம் நாட்டில் 2021ஆம் ஆண்டின் ஜனவரி [illegible] காலப்பகுதியில் மாத்திரம் [illegible] மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஏற்றுமதி தெங்குப் பொருட்களினால் நடைபெற்றிருக்கிறது.

புதுவருடப் பிறப்பினை ஒட்டிய தான பரபரப்பு நிறைந்தவேளையில், தலைகாட்டியிருக்கும் தேங்காய் எண்ணெய் விவகாரம் சந்தையில் கிடைக்கும் எண்ணெய் தொடர்பில் நிச்சயமற்ற மனநிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. இறக்குமதி செய்யப்பட்டு நாட்டுக்குள் கொண்டுவரப்படும் தேங்காய் எண்ணெய் அவ்லாரொக்சினுக்காகப் பரீட்சிக்கப்படுகின்ற நிலையில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுச் சந்தைக்குவரும் தேங்காயெண்ணெய் அவ்லாரொக்சினுக்காகப் பரீட்சிக்கப்படுகின்றதா என்ற கேள்விக்கும் விடை தேடவேண்டியது அவசியம். ஏனெனில், தேங்காய் எண்ணெய் தயாரிப்பிற்காக கொப்பரா தயார்படுத்தப்படும்போது அது ஒழுங்கானமுறையில் தயார்படுத்தப்படாவிட்டால், [illegible]சினை வெளிவிடக் [illegible]ஞ்சணம் கொப்பராவில் குடிகொண்டு எண்ணெய்யில் வந்தடைய சாத்தியம் அதிகம்.

காசினோஜன் அல்லது புற்று நோயை ஏற்படுத்தும் காரணியாக அறியப்படும் அவ்லாரொக்சின் சர்ச்சை, நமது தேவைக்கான பயிர்பச்சைகளை நாமே பயிரிட வேண்டுமென்னும் உந்துதலைத் தோற்றுவித்திருக்கிறது.நமது வீட்டுத் தோட்டங்களில் தெங்குச் செய்கையை மேற்கொள்வதன் மூலம் எமக்குத் தேவையான தென்னைவிளை பொருட்களை நாமே அறுவடைசெய்யும் காலம் ஒன்றை(மீள) கனியச் செய்ய இந்தச் சர்ச்சை அடி அத்திபாரமாக இருக்கட்டும். பன்மைப்படுத்தப்பட்ட ஏற்றுமதிப் பொருட்கள் தென்னை விளைபொருட்களை அடிப்படையாகக்கொண்டு உற்பத்தி செய்யப்படுகையில், அது தொடர்பான முதலீட்டு முயற்சிகளை வடக்கில் தோற்றுவிக்கவும் அவ்லாரொக்சின் தொடர்பான அச்சம் அடி இடட்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கதிரேசன் காத்தவராயன்


# காசைக் கரியாக்கி வில்லங்கத்தை வாங்கிறது இதுதானோ?

அதிலை குமரேசனின்ரை கடையடிக்குப் போனன். அங்கை அதிலை நிக்க சுப்பண்ணை வந்தார். அடுத்ததாய்த் தம்பர் வந்தார். நாங்கள் கதைக்கத்தொடங்க பறக்கிற மோட்டச் சைக்கிளிலை ரண்டு பெடியள் வந்துதுகள். கெல்மெற் இல்லை ஆனால் பெயின்ர் அடிச்சமாதிரித் தலையள். வந்து "அண்ணை வெடி கிடக்குதோ?" எண்டினம். குமரேசன் இல்லையெண்டுது. புறுபுறுத்துக்கொண்டு ஏறினபடியே போனிலை "மச்சான் இவனிட்டை இல்லையாமடா... பேயன் கடை நடத்துறானாம்....." எண்டபடியே பறந்திட்டாங்கள்.

குமரேசர் ஒரு சிரிப்புச் சிரிச்சார். தம்பருக்குப் பொறுக்கேல்லை.. "என்னப்பா உப்பிடிப் பேசிக்கொண்டு போறாங்கள்?" எண்டார். "போகட்டும் தம்பண்ணை... இப்ப வெடி கிடக்கெண்டு குடுத்தால் இன்னும் கொஞ்சம் கூடக் கதைச்சிருப்பாங்கள்" எண்டார் குமரேசன். அந்தாள் எவ்வளவு அனுபவசாலி எண்டு நினைச்சுக்கொண்டன்.

குமரேசன்தான் கதைச்சார். "உவை ஆருக்கு வெடிசுடப்போயினம் தெரியுமே? உவன் கடன் கரைச்சலாலை தூக்கிலை தொங்கின வண்டனுக்கல்லே... உவங்கள்தான் கூடிச் சதி பண்ணி அவனைக் கடன்காறனாக்கினது... இப்ப வருகினம் வெடிசுட... அந்தக் காசை வண்டன்ரை பெஞ்சாதி பிள்ளைக்குக் குடுத்தா ரண்டு நாளைக்கு வடிவாச் சாப்பிடுங்கள்... அதுகள் தான் பாவங்கள்..." எண்டார்.

"அதெண்டாச் சரிதான்ராப்பா... இப்ப உதொரு புது நாகரிகமயல்லே முளைச்சிருக்குது.. பிணமிருக்கோ இல்லையோ வெடியில்லாமலுக்கு செத்த வீடுகள் இல்லையெண்டிற மாதிரி வந்திட்டுது" எண்டு சுப்பண்ணை சொல்லிக் கொண்டிருக்க தம்பர் இடையிலை "ஏன் உது மட்டுமே? உசார் மருந்து? அது இல்லாமலுக்கோ?" எண்டு சிரிச்சார்.



"தம்பு நீ வரவர புத்திசாலியா வாறாய் போல கிடக்குது" எண்டன். தம்பர் உட்பட எல்லாரும் சிரிச்சினம். "முந்தியடாப்பா சண்டையள் வெடி மருந்துப் புகை... பட்டபாடு? இப்ப கொண்டாட்ட வெடிப் புகை... கோதாரி.. கண்டகண்ட வருத்தங்கள் வாறதுக்கு உதுகுமல்லே காரணமாகுது... ஒருதரும் யோசிக்கிறதில்லை" எண்டு நான் சொல்ல அதையும் ஆமோதிச்சுத் தலையளை ஆட்டிச்சினம்.

"கான்சர் வாறதுக்கு உந்த வெடிக் கோதாரியும் ஒரு முக்கியமான காரணமாமல்லே. கான்சரிலை செத்த ஆக்களுக்குமல்லே கண்டபாட்டிலை வெடி சுடுகினம்... உது ஒரு கோதாரி நாகரிகந்தான்... மிச்சசொச்சமாயிருக்கிற சனத்தைத் துலைக்கிற வழி..." எண்டு குமரேசன் சொன்னார். அந்தாள் உண்மையிலையே வெடி விக்கிறதில்லை எண்டு அறிஞ்சனான்.

"உந்த ஸ்கொலசிப் படிப்பிச்ச வாத்தியார் பாவம். இளம் வயதிலை உந்தக் கான்சராலையல்லே போன கிழமை செத்தவர். அருமையான மனிசன். என்ரை பேரமக்கள் மூண்டு பேரை உருப்படியாக்கினது அந்தாள்தான். அந்தாளின்ரை செத்தவீட்டிலை கொழுத்தின வெடியளுக்கு அளவேயில்லை. செத்தவீட்டை முன்னுக்கு நிண்டு செய்தவை படிச்ச சமூகத்து ஆக்கள்தான்.. அவைக்குக்கூட அறிவில்லாத மாதிரியல்லே கிடக்குது" எண்டார் சுப்பண்ணை.

"என்ன சுப்பண்ணை கான்சராலை பாதிப்பாகிச் செத்தவரின்ரை சாவுக்கும் வெடிதானோ? என்னண்ணை அறிவில்லாத வேலையல்லே? எங்கடை தம்பிராசர் தன்ரை மனிசி கான்சராலை செத்ததெண்டு செத்த வீட்டிலை வெத்திலைபாக்கு சுறுட்டு ஒண்டும் வைக்கேல்லையல்லே?" எண்டார் தம்பர். பிறகு அவரே "படிக்காத மனிசனல்லே தம்பிராசர்?அதுதான் யோசிச்சிருக்குது என்ன?" எண்டார்.

"தான் பட்ட துன்பத்தை பிறர் அனுபவிக்கக் கூடாது எண்டிற பண்புக்கு படிப்பென்னத்துக்கு? இதுகள் பாக்கச் சின்ன விசயமாயிருந்தாலும் உண்டையாய் பெரிய விசயங்கள்தான். ஆனால் இதுகளை கவனிக்கிறதுக்கு நேரமிருக்கிறதில்லைப் போல. கான்சர் வந்து இளம் வயதிலை அந்தாள் செத்தது ஏன் எண்டு யோசிக்கவோ அப்பிடி அவலச் சாவு மற்ற ஆக்களுக்கு வரக்கூடாதெண்டு யோசிக்கவோ ஆக்களில்லா மல் போச்சுது..." எண்டு குமரேசன் சொல்லி பெருமூச்சொண்டை விட்டார். "நானதாலை தானே வெடி வெத்திலை பாக்கு சுறுட்டு விக்கிறேல்லை..." எண்டும் சொன்னார்.

"உண்மைதான் குமரேசு... காசைக் கரியாக்கி வில்லங்கத்தை விலை குடுத்து வாங்கி இதைத்தான் செய்யிறம்...திருந்திறது வலு கஸ்டம்" எண்டபடி வந்திட்டன்.

---

# வசந்தத்தில் வந்தது திடீர் குளிர்! வைன் தோட்டங்களில் அவலம்!!

குமாரதாஸன் பாரிஸ்



விவசாயிகளது வாழ்வு எங்கேயும் எப்போதும் போராட்டம் தான். படத்தில் நீங்கள் காண்பது கார்த்திகைத் தீபமோ, தீபங்களின் திருவிழாவோ அல்ல. வைன் தோட்டம் ஒன்றில் குருத்துவிடும் நிலையில் உள்ள முந்திரிகைச் செடிகளைக் குளிரில் இருந்து வெப்பமூட்டிப் பாது காப்பதற்காக ஏற்றப்பட்டிக்கும் மெழுகு தீபங்களின் காட்சி.

ஐரோப்பா எங்கும் இதமான வசந்த கால[illegible] ஏப்ரல் மாதத்தில் திடீரெனக் கடும் குளிர்க் காலநிலை தோன்றி உள்ளது. காலம் தவறிய மழை போன்று பருவம் தப்பிய பனி (Frost) பயிர்ச் செய்கையாளர்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

பிரான்ஸில் வசந்த காலப் பகுதியில் துளிர் விடும் பழப் பயிர்களும் வைன் செடிகளும் குளிரினால் முளை அழுகும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இருபது பாகைகளுக்கு மேல் வெயிலுடன் இதமாக நிலவிய காலநிலை பல பிராந்தியங்களில் திடீரென மைனஸ் அளவில் குறைந்திருக்கிறது.இதற்கு முன்னர் ஏப்ரல் மாதங்களில் என்றுமே இல்லாத அளவாக மைனஸ் 4.9 டிகிறி (-4.9 degrees) வெப்பநிலை பதிவாகி உள்ளது.

பிரான்ஸின் புகழ்பெற்ற வைன் தோட்டப் பிராந்தியங்களில் லேசாகப் பெய்து வரும் பனியில் இருந்து முந்திரிகைச் செடிகளின் முளைகளைப் பாதுகாக்கத் தோட்டக்காரர்கள் இரவு பகலாகப் போராடி வருகின்றனர். செடிகளுக்கு அருகே வரிசையில் மெழுகு திரிகளை ஏற்றுதல்,வெப்பமூட்டிகளை இயக்குதல், தொடர்ந்து தண்ணீர் தெளித்தல் என்று பல வழிமுறைகளைப் பின்பற்றி பயிர்களைப் பாதுகாக்க முயன்று வருகின் றனர். இந்த வழிமுறைகள் முழுமையான பலனை அளிக்குமா என்பது தெரியாது.எனினும் முயற்சி நடக்கிறது. மொழுகு திரிகளும் தீச் சுவாலைகளும் ஏற்றப்பட்டதால் இரவுகளில் தோட்டங்கள் பிரகாசமாக ஒளிர்கின்றன. கண்கவரும் அந்தக் காட்சிகளின் பின்னால் தோட்டக் காரர்களின் நம்பிக்கைகளும் சேர்ந்தே எரிகின்றன.

எதனால் இந்த திடீர் குளிர் காலநிலை?

ஆர்ட்டிக் துருவப் பகுதியில் இருந்து நேரடியாக வருகின்ற அடர்ந்த குளிர் காற்றின் காரணமாகவே நாட்டின் வடக்கு, மத்தி மற்றும் கிழக்குப் பகுதிகளில் வெப்ப நிலை வீழ்ச்சியடைந்துள்ளது என்று பிரான்ஸின் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.இந்த வார இறுதி வரை குளிர் மற்றும் மழைக் கால நிலை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சொட்டையும் வீணடிக்காது பயன்படுத்துவோம்!

■ அ.நா.மூர்த்தி

உலகத் தண்ணீர் தினம் கடந்த மாதம் (பங்குனி 22) கடந்து போனது. குடிதண்ணீரைப் பெறுவதில் தமிழர் நிலங்கள் பெரும் அவலத்தை எதிர்கொண்டுள்ள போதும் தண்ணீர் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய இந்த தினம் குறித்துப் பெரிதாக யாரும் இங்கு அலட்டிக்கொள்ளவில்லை.

உலகத் தண்ணீர் தினத்தையொட்டிய இந்த ஆண்டுக்கான தலைப்பு 'நீருக்கு உரிய மதிப்பைக் கொடுப்போம்'. உணவு, பண்பாடு, மனித நலம், கல்வி, பொருளாதாரம் மற்றும் இயற்கைச் சூழலோடு நீர் பின்னிப் பிணைந்திருப்பதால் நீருக்குக் கொடுக்கப்படும் விலையைவிட, அதன் மதிப்பு மிகப் பெரியது எனவும், இதனை மறந்தால் நாம் பெரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் தண்ணீர் தினத்துக்கான செய்தியில் ஐநா. எச்சரித்துள்ளது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், சமீப காலமாகத் தண்ணீர் பற்றி வெளிவரும் செய்திகள் பயத்தை ஏற்படுத்துகின்றன. ஒருபுறம் தண்ணீர் தேவை படு வேகமாக உயர்ந்துவரும் சூழலில், அதனுடைய அளிப்பு தொடர்ந்து குறைந்துவருகிறது. வடக்கில் யாழ்ப்பாணத்தில் சுத்திகரிக்கப்பட்ட நீர் இப்போது அனேகமாக அனைத்து குடிசனப் பகுதிகளிலும் லீற்றர் ஒன்று 5 ரூபாய்க்குக் குறையாத விலைக்கு விற்கப்படுகின்றது. போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீருக்கு மேலதிகமாக இந்தச் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வாகனங்கள் மூலம் வீடு வீடாகச் கொண்டு சென்றும் விற்கப்படுகின்றன.



தொடர்ந்து குறைந்துவரும் நல்ல தண்ணீரினால் உலகத்தில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் மிகக் கடுமையான நீர்ப் பிரச்சினையை வரும் 2025க்குள் சந்திக்க வேண்டியிருக்கும். நமது அயல் நாடான இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய 60 கோடி மக்கள் கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சந்திப்பது மட்டுமல்லாமல், சுத்தமான குடிதண்ணீர் கிடைக்காத காரணத்தால், சுமார் இரண்டு கோடி மக்கள் உயிரிழக்க நேரிடுகிறது என நிதி ஆயோக் 2018 அறிக்கை கூறுகின்றது.

மக்கள் தொகையாலும் பொருளாதார வளர்ச்சியாலும் நீரின் தேவை நாளுக்கு நாள் எல்லா இடங்களிலுமே அதிகரித்துவருகிறது. ஆனால் அதனை எதிர்கொள்வதற்குத் தக்க வகையில் நல்ல தண்ணீரைச் சேமித்து வைப்பதற்குப் போதுமான திட்டங்கள் எவையும் தூர நோக்குடன் வகுக்கப்படவில்லை.

இலங்கையில் உள்ள ஆறுகளிலும் தொடர்ந்து அள்ளப்பட்டுவரும் மணல் காரணமாக அவற்றின் நீர் பிடிப்பு நிலையும் தொடர்ந்து குறைந்து வருவதாகவும் ஆறுகள் அழிந்துகொண்டு போகின்றன என்றும் சூழலியலாளர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

**பாதிப்பு**

தண்ணீர்ப் பற்றாக்குறை தொடர்ந்து அதிகரிப்பதால் எதிர் காலத்தில் சண்டை சச்சரவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. வடக்கில் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கான திட்டம் கடும் எதிர்புகளால் கைவிடப்பட்டமை அறியப்பட்ட செய்திதான். ஒவ்வொரு குடிமகனுக்கும் நல்ல தண்ணீர் கிடைப்பதை உறுதிப்படுத்துவது அரசுகளின் தலையாய கடமை. ஆனால் இலங்கை உட்படப் பல நாடுகளில் அரசுகள் தமது இந்தக் கடமையைச் சரிவரச் செய்வதில்லை. நீர் உரிய அளவு கிடைக்காத நிலையில், ஏழை மக்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்க நேரிடும். இது ஏழை விவசாயிகளையும் உடலுழைப்புத் தொழிலாளர்களையும் பாதிக்கும். பாசனத்துக்கான நீரின் அளவு குறைந்தால், ஏழை விவசாயிகள் பயிர்ச் செய்கை செய்வதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படும். நீர்ப் பாசனப் பற்றாக்குறையால் விவசாயம் கைவிடப்படுவது அதிகரித்திருக்கிறது.

குடிநீர்ப் பற்றாக்குறையால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள். பல மணி நேரம் விரயம் செய்து நீரைத் தேடி அலைவதாலும், காத்துக் கிடப்பதாலும் 15 கோடி வேலை நாட்களை ஒவ்வோர் ஆண்டும் பெண்கள் இழப்பதாகவும், இதன் மதிப்பு ரூ.1,000 கோடி எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. நீர்ப் பற்றாக்குறையால் சில நாடுகளில் பொருளாதார வளர்ச்சி 6% அளவுக்குக் குறைய வாய்ப்புள்ளதாக உலக வங்கியின் ஓர் அறிக்கை (2016) கோடிட்டுக் காட்டியுள்ளது. இந்த மாற்றங்களால் கிராமப்புற வறுமை அதிகரித்துவிடும்.

**அலட்சியம் வேண்டாம்**

ஏறக்குறைய 85% அளவைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற விவசாயத் துறையில் நீரின் உபயோகத்தைக் குறைக்க வேண்டும். நீரை அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய பயிர்களான சிறுபோக நெல், கரும்பு, வாழை மற்றும் பருத்தி போன்ற பயிர்களின் சாகுபடிப் பரப்பளவைக் குறைக்க வேண்டும். ஒரு கிலோ அரிசி உற்பத்தி செய்வதற்கு 3,000 முதல் 5,000 லிற்றர் தண்ணீரும், ஒரு கிலோ கரும்புக்கு 1,500 முதல் 3,000 லீற்றர் தண்ணீரும் தேவைப்படுகிறது. அதிகம் தேவைப்படுகின்ற பருப்புப் பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் உற்பத்தி செய்வதற்கு மிகவும் குறைவான நீர் போதும். தண்ணீர் அதிகம் தேவைப்படும் பயிர்களைச் சாகுபடி செய்வதை நீர்ப் பற்றாக்குறையுள்ள இடங்களில் தவிர்க்க வேண்டும். பதிலாக உப உணவுப் பயிர்ச் செய்கையை ஊக்கப்படுத்தலாம். பழங்காலப் பாசன முறையை மாற்றிப் புதிய பாசன முறைகளான சொட்டுநீர், தெளிப்பு நீர்ப்பாசனம் மூலமாக நீரை விரயம் இல்லாமல் உபயோகப்படுத்த முடியும்.

அண்மைக்காலமாக குழாய்க் கிணறுகள் அமைப்பது அதிகரித்திருக்கின்றது. இதனால் நிலத்தடி தண்ணீர் உறிஞ்சப்படும் விகிதமும் அதிகரித்திருக்கின்றது. குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கான சட்டக் கட்டுப்பாடுகள் எவையும் இல்லாத நிலையிலும் சில மணி நேரத்தில் வேலை முடிந்துவிடுமளவிற்குச் சுலபமாக இருப்பதும் செலவு குறைவாக இருப்பதும் குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கையை சடுதியாக அதிகரித்திருக்கின்றது. இவை சுற்றுச்சூழல் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன. அதிகமாக நிலத்தடி நீரை உறிஞ்சுவோருக்கும், தொழிற்சாலைகளுக்கும் சிறப்பு நீர்க் கட்டணம் வசூலிக்க வேண்டும். ஏனெனில் நிலத்தடி நீரை உறிஞ்சி அதனைச் சுத்திகரித்து விற்பதே இன்று ஒரு தொழிற்துறையாக வளர்ந்து வரும் நிலையில் அவற்றின் மீதும் கட்டுப்பாடுகள் அவசியம்.

வடக்கு கிழக்கில் தண்ணீருக்கான உயிர்நாடியாக உள்ளவைகள், குளங்கள், ஏரிகள், கேணிகள், குட்டைகள். இவற்றில் பலவும் ஆக்கிரமிப்புகளாலும், அடுத்தடுத்த ஆட்சிகளின் அலட்சியப் போக்காலும் சீரழிந்துவருகின்றன. இவற்றைக் காப்பாற்றி நீரின் அளிப்பை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். [illegible] பராமரிக்கவும் பாதுகாக்கவும் [illegible] முறையான திட்டம் வகுக்கப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவநிலை மாற்றத்தால், மழையின் அளவு குறைந்து தண்ணீர்த் தேவையிலும் அளிப்பிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக 'ஐபிசிசி' (IPCC) என்ற உலக பருவநிலை கண்டறியும் அமைப்பு கூறியுள்ளது. இது வருங்காலத்தில் தண்ணீர்ப் பிரச்சினையை மேலும் அதிகரிக்கும். எனவே, தண்ணீரின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தண்ணீர்தானே என்று அலட்சியம் செய்யாமல், அனைவரும் ஒன்று சேர்ந்து நீரைப் பாதுகாத்துப் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு வித்திடவேண்டும். ஒவ்வொரு சொட்டுத் தண்ணீரையும் வீணாக்காது பயன்படுத்துவோம்.

## இந்த வார சுடோக்கு - 33

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | 3 | | | 1 | |
| 1 | 3 | 9 | | 8 | 2 | | 6 | |
| 6 | | | | | | | 8 | |
| 7 | | 2 | | | | | | 1 |
| | | | 9 | | 4 | | | |
| 8 | | | | | | 9 | | 6 |
| | 8 | | | | | | | 5 |
| | 5 | | 1 | 4 | | 2 | 9 | 7 |
| | 1 | | | 9 | | | 3 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 3 | 7 | 5 | 9 | 8 | 2 | 4 |
| 4 | 8 | 9 | 2 | 1 | 6 | 3 | 7 | 5 |
| 5 | 2 | 7 | 8 | 3 | 4 | 6 | 1 | 9 |
| 9 | 6 | 5 | 1 | 7 | 8 | 4 | 3 | 2 |
| 3 | 7 | 8 | 5 | 4 | 2 | 9 | 6 | 1 |
| 1 | 4 | 2 | 6 | 9 | 3 | 7 | 5 | 8 |
| 2 | 5 | 4 | 9 | 6 | 7 | 1 | 8 | 3 |
| 7 | 9 | 1 | 3 | 8 | 5 | 2 | 4 | 6 |
| 8 | 3 | 6 | 4 | 2 | 1 | 5 | 9 | 7 |

*குறிப்பு: கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.*

# தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் பிறகு வைரஸ் தொற்றாதா?

■ குமாரதாஸன்

கொரோனா வைரஸ் தடுப்பூசியை ஒரு முறை ஏற்றிவிட்டால் பிறகு வைரஸ் தொற்றாது என்ற திடமான நம்பிக்கை அனைவரிடமும் உள்ளது. அதன்பின்னர் மாஸ்க் அணியாமல் சுதந்திரமாகச் சுற்றித் திரியலாம் என்று எண்ணும் பலரும்கூட இருக்கிறார்கள்.

இவை இரண்டுமே தப்புக் கணக்குகள் என்கின்றனர் தொற்றுநோயியலாளர்கள். தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டபின் தொற்று நோய்க்கு முந்திய பழைய வாழ்க்கைக்கு உடனே திரும்பி விட முடியாது. தடுப்பூசி ஏற்றிய பலர் மீண்டும் தொற்றுக்கு இலக்கானமை பற்றிய செய்திகள் உலகெங்கும் வெளியாகி வருகின்றன.

தடுப்பூசி பெற்றுக் கொண்ட ஒருவர் பின்வரும் காரணங்களால் மீண்டும் வைரஸ் தொற்றுக்கு ஆளாக முடியும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

*மாஸ்க் அணிதல், கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளி பேணுதல் போன்ற சுகாதார அமைச்சின் முன்னெச்சரிக்கை ஒழுங்குகளைப் பின்பற்றாமல் நடப்பது.


*தடுப்பூசி தொடர்பாக மருத்துவர் தரும் ஆலோசனைகளைப் புறக்கணிப்பது.

*குறித்த தவணையில் இரண்டாவது தடுப்பூசியை ஏற்றத் தவறுதல் அல்லது இரண்டாவது டோஸை ஏற்றாமல் விடுதல்.

*உடற்காப்பு சக்தி தூண்டப்படுவதில் ஏற்படும் தடை.

இத்தகைய காரணங்களால் ஒருவர் தடுப்பூசி ஏற்றிய பிறகும் தொற்றுக்கு உள்ளாக வாய்ப்புண்டு என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

தடுப்பூசி என்பது வைரஸின் முடிவு அல்ல




அது வைரஸின் தீவிரமான தாக்கத்தில் இருந்து உடலுக்குப் பாதுகாப்பு வழங்குவது மட்டுமே. அது தொற்றைத் தடுக்காது. தொற்றுக்கு எதிராக உடற் காப்பு சக்திகளைத் தூண்டி மரணத்தில் இருந்து காப்பாற்றும். எனவே தடுப்பூசி ஏற்றிய அனைவரும் தொடர்ந்தும் தொற்றில் இருந்து தங்களைப் பாதுகாக்கும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது கட்டாயம்.

அதேவேளை, தடுப்பூசி ஏற்றியவர்கள் தொடர்ந்தும் வைரஸை ஏனையோருக்குப் பரப்பிக்கொண்டே இருப்பார்கள். ஊசி அதனைத் தடுக்காது.

தடுப்பூசி ஏற்றிய ஒருவரது உடலில் வைரஸ் கண்டுபிடிக்கப்படலாம். ஊசி ஏற்றிக்கொண்ட அடுத்த ஓரிரு நாட்களில் கூட தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது இருக்கிறது.

ஆனால் ஊசி உடல் எதிர்ப்பு சக்தியைத் தூண்டி தொற்றின் தீவிரத்தைத் தணித்து விடுகின்றது.

எனவே தடுப்பூசி போட்டுக் கொண்ட ஒருவரது உடலில் மீண்டும் சோதனை மூலம் வைரஸ் கண்டறியப்பட வாய்ப்பு உள்ளது. ஆனால் அவை வலுக்குறைந்த வைரஸாக இருக்கலாம்.

இதைவிட வைரஸ் தடுப்பூசிகளின் பயன் பெறும் காலத்தின் பின்னர் மீண்டும் ஒருவர் தொற்றுக்கு ஆளாக நேரிடலாம். தற்போது பயன்பாட்டில் உள்ள பைசர் பயோஎன்ரெக் போன்றவை ஆறுமாதங்கள் பாதுகாப்பு அளிக்கக் கூடியவை என்று உத்தரவாதம் தரப்பட்டுள்ளது. ஊசிகளின் உண்மையான வலு என்ன என்பதை அறிய இன்னமும் சில காலம் பொறுத்திருக்க வேண்டும்.

கொரோனா வைரஸும் அதன் திரிபுகளும் உலகின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் ஒரே சமயத்தில் மறைந்து விடப்போவதில்லை. அதே போன்று உலக மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கிடைத்துவிடவும் போவதில்லை.

எனவே அடுத்த சில வருடங்களுக்காவது எங்கோ ஓர் இடத்தில் வைரஸ் தொடர்ந்தும் பரவிக்கொண்டுதான் இருக்கப் போகின்றது. அது வரை மாஸ்கும் எங்கள் வாழ்க்கையோடு பயணிக்கப்போகிறது.



# என்நாளும் நலம் வாழ மருத்துவம்



மருத்துவர் - கந்தையா சோதிதாசன்

## கோடை கால நோய்கள்

கோடை காலம் ஆரம்பித்துவிட்டது கொடும் வெயில் வியர்வை தாகம் நிழலான இடங்களை தேடி ஓடுகின்றன கால்கள்...

இந்த காலத்தில் வருகின்ற நோய்களும் சூரிய கதிரின் தாக்கத்தினால் தான் ஏற்படுகின்றது.

■ அதிக வெயில் உடலில் அதிக வியர்வையை ஏற்படுத்துகிறது இதனால் நீரிழப்பு ஏற்படுகிறது. உடலில் நீர்ச் சத்துக் குறைபாட்டால் வாந்தி மயக்கம் தலைசுற்றல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

■ இந்த வெப்பமான காலங்களில் அதிகளவு நீரை அருந்தவேண்டும் ஒருவர் ஒரு நாளைக்கு ஒன்றரை முதல் 2 லீற்றர் வரை நீரை அருந்த வேண்டும்.

■ உடலில் நீர்ச்சத்து குறையும் இடத்தில் களைப்பு, உடல் வலி, சிறுநீர் கடுப்பு, மலச்சிக்கல் என்பன ஏற்படுகின்றன. நீர் இழப்பு அதிகமானால் சிலருக்கு மயக்கமும் ஏற்படலாம் கோடை காலத்தில் வியர்வையோடு அதிக அளவு உப்பும் வெளியேறுவதால் உப்புச் சத்துக் குறைபாட்டால் தலைச்சுற்று உடல் சோர்வு என்பனவும் ஏற்படலாம்.

கோடை காலத்தில் எல்லோரும் தேவையான அளவு நீர் அருந்த வேண்டும்.

■ தாகம் ஏற்படுகின்றபோது எல்லோரும் நீரை அருந்துகிறார்கள் ஆனால் குடிக்கின்ற நீர் சுத்தமானதாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அசுத்தமான நீரினால் வயிற்றோட்டம், வயிற்றுளைவு, தைரொய்டு காய்ச்சல், செங்கமாரி, சிறுநீர் தொற்று போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன.

■ குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றோட்டம் குடிதண்ணீர் சுத்தமின்மையால்தான் அதிகம் ஏற்படுன்றது.

ஆகவே நாங்கள் குடிக்கும் நீர் சுத்தமாக இருப்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

■ கூடுதலாகக் கோடை காலத்தில் பலர் குளிர்சாதனப் பெட்டியில் வைத்த குளிர் பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம் வகைகளை அருந்துகிறார்கள். இதனால் உடல் வெப்ப நிலை மேலும் அதிகரிப்பத்தோடு தொண்டை வலி, இருமல், சளி கட்டுதல், மூக்கடைப்பு, தடிமன் போன்ற நோய்களும் ஏற்படுகின் றன.

■ கூடுதலான அளவுக்கு அதிக குளிரான பானங்களையும் உணவுகளையும் தவிர்க்க வேண்டும் இளநீர், பழங்களின் சாறு, மோர் போன்ற இயற்கையான நீராகாரங்கள் மற்றும் வத்தகை வெள்ளரி, பப்பாளி, அன்னாசி போன்ற நீர்ச்சத்து அதிகம் உள்ள பழங்கள் என்பவற்றை எடுக்க வேண்டும்.

■ அது மட்டுமன்றி கோடை காலத்தில் அதிகம் வியர்வை ஏற்படுகிறது. வியர்வையில் நுண்கிருமிகள் தொற்றி குறிப்பாக காளான் தொற்று ஏற்படுவதால் தோல் நோய்களும் ஏற்படுகின்றன. சொறி சிரங்கு படை போன்ற நோய்கள் இக்காலத்தில் அதிகரிக்கின்றன. எனவே இக்காலத்தில் உடலைச் சுத்தம் பண்ணுதல் என்பதில் மிக கவனமாக இருக்கவேண்டும் ஒரு நாளைக்கு இரண்டு முறை குளித்தல் வேண்டும்.

குளிக்கும் நீரில் மஞ்சள் அல்லது கடுக்காய்த் தோல் கலந்து குளித்தால் வியர்வை நாற்றம் தோல் நோய்கள் ஏற்படாது இருக்கும்.

■ மேலும் கோடை வெயிலின் தாக்கத்தை குறைக்க துளசி அல்லது கற்பூரவள்ளி இலைகளை நீரில் போட்டு நன்றாக கொதிக்க விட வேண்டும். அதன் பிறகு அந்தத் தண்ணீரை ஆறவிட்டு அதை அவ்வப் போது குடித்து வந்தால் உடல் வெப்பம் குறையும். அதேபோல, சீரக குடிநீர் அல்லது எலுமிச்சைப் பானம் தயார் செய்து குடித்து வந்தாலும் நல்ல பயனைப் பெறலாம்.



■ இந்தக் கோடை காலத்தைக் குளிர் செய்வதற்கு நீர் தன்மையுடைய பழங்களைக் கூடுதலாக உண்ணுதல் பயன் தரும். இளநீர் எலுமிச்சை மோர் போன்ற பானங்களை அருந்துவதும் சிறப்பானது. அத்தோடு நாம் அருந்தும் பானங்கள் சுத்தமானதாக இருப்பதை உறுதிப்படுத்துவதோடு சத்து நிறைந்த உணவுகளை எடுப்பதன் ஊடாக எங்கள் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரித்துக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டின் நெல்லை மாவட்டத்தில் உள்ள பொடியங்குளம் ஒரு குக்கிராமம். பேருந்து வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமல் அந்த ஊர் மக்கள் அல்லல்படுகின்றனர். பக்கத்து ஊரான மேலூருக்கு நடந்து சென்று போய் பேருந்து ஏறினால்தான் வெளியூருக்குப் போக முடியும். அப்படிப்பட்ட நிலையில் மேலூர்க்காரர்கள் பொடியங்குளம் மக்களைச் சம்பந்தமில்லாமல் சண்டைக்கு இழுக்கின்றனர். இளம் பெண்ணை கேலி செய்கின்றனர். அதைக் கண்டிக்கும் ஆண்களை இழுத்துப் போட்டு அடிக்கின்றனர். இதனால் வெகுண்டெழும் கர்ணன் (தனுஷ்) மேலூரைச் சேர்ந்த ஆதிக்க சாதியினரின் அகந்தைக்குத் தகுந்த பாடம் புகட்டுகிறார். இதனால் பிரச்சினை வலுக்கிறது. அது கபடி போட்டியிலும் எதிரொலிக்கிறது.

பொடியங்குளம் கிராமத்தில் நிற்காமல் செல்லும் பேருந்துகளால் கர்ப்பிணிப் பெண், கல்லூரி செல்லும் மாணவி, படையில் சேர தேர்வுக்காகச் செல்லும் நாயகன் உள்ளிட்ட அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலையில் கர்ப்பிணிப் பெண் மருத்துவமனை செல்வதற்காக பேருந்தை நிறுத்தாதபட்சத்தில் அவரது மூத்த மகன் கல்லெறிகிறான். இதனால் நிலவரம் கலவரமாகிறது. அது தொடர்பான விசாரணைப் படலமும், பொடியங்குளம் ஊர் மக்களின் அணுகுமுறையும் காவல் அதிகாரி கண்ணபிரானின் (நட்டி நட்ராஜ்) ஈகோவை உரசிப் பார்க்கிறது. அதற்குப் பிறகு அந்த ஊர் என்ன ஆனது, படையில் வேலை கிடைத்த நிலையில் நாயகன் என்ன முடிவெடுக்கிறார், பொடியங்குளம் கிராமத்துக்கு அடிப்படை வசதிகள் கிடைத்தனவா, போராட்டம் முடிவுக்கு வந்ததா போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.

'பரியேறும் பெருமாள்' மூலம் அரசியல் திரைப்படத்தை நுட்பமாகக் கொடுத்துப் பரவலான கவனத்தை ஈர்த்தவர் மாரி செல்வராஜ். சாதிய வன்முறையால் பாதிக்கப்படும் இளைஞன் அதையே எதிர்க்குப் பரிசளிக்காமல் அதிலிருந்து விலகி நின்று கல்வியை ஆயுதமாகக் கொள்கிறான். 'கர்ணன்' படத்தில் கல்வி, வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக நாயகன் போராட்டத்தை ஆயுதமாகக் கொள்கிறான். அரசியல் சினிமாவை பரப்புரை நெடி இல்லாமல் அவ்வளவு சாதாரணமாகப் படைத்துவிட முடியாது. ஆனால், அரசியலை அழகியலுடன் மிக நேர்த்தியாகக் கொடுப்பது எப்படி என்ற கலை மாரி செல்வராஜுக்கு கை வந்திருக்கிறது. தன் நேர்மையையும், உழைப்பையும் அப்படியே கொட்டி கர்ணனைக் கொடுத்திருக்கிறார்.

'கர்ணன்' கதாபாத்திரத்தில் தனுஷ் தன் முழுமையான ஆற்றலை அப்படியே அள்ளிக் கொடுத்திருக்கிறார். உரிமைக்காக குமைந்துகொண்டு, பிரச்சினை என்றால் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டு வருபவர் அடுத்தடுத்து பாய்ச்சலை நிகழ்த்துகிறார். தார்மீக ரீதியாக கோபப்படுவது, நல்லதைச் சொல்வது, தனி மனிதனாகக் களத்தில் இறங்குவது, உரிமைக்காக ஓங்கிக் குரல் கொடுப்பது, நிமிர்ந்து நிற்கும் அரசியலில் திருப்பி அடிப்பது, காதலியுடனான ஊடலில் இழவு வீட்டில் ஆடித் தன் துயரை வெளிப்படுத்துவது, காவல் நிலையத்தைக் களேபரமாக்குவது என நாயகனின் அத்தனை அம்சங்களையும் இம்மி பிசகாமல் செய்கிறார். தென் மாவட்ட வட்டார வழக்கில் தனுஷ் பேசும் லாவகமும், உடல் மொழியும் அபாரம்.

தனுஷின் ஆசானாக, வழிகாட்டியாக, ஏமராஜாவாக லால் பின்னி எடுத்திருக்கிறார். அவரின் உயிர்ப்பான நடிப்பு படத்துக்குப் பெரிதும் பலம் சேர்க்கிறது. தனுஷ் - லால் இணை அன்பின் அடர்த்தியைப் பரப்புகிறது.

கோமாளியாகப் பார்த்தே பழக்கப்பட்ட யோகி பாபு 'பரியேறும் பெருமாள்' படத்தில் குணச்சித்ர முகத்தைக் காட்டினார். அதன் நீட்சியாக இதிலும் பக்குவமான நடிகனுக்குரிய இயல்புகளை வெளிப்படுத்துகிறார்.

ரஜிஷா விஜயன் நாயகிக்குரிய பங்களிப்பில் எந்தக் குறையும் இல்லை. ஆனால், அந்தப் பாத்திரம் வழக்கமும் பழக்கமும் ஆனதாகவே இருப்பதால் பெரிதாக ஈர்க்கவில்லை. கௌரி கிஷனுக்குப் பெரிய அளவில் முக்கியத்துவம் இல்லை என்றாலும் படிக்க முடியாத ஏக்கத்தையும், வருத்தத்தையும் நன்கு வெளிப்படுத்துகிறார். தனுஷின் அக்காவாக லட்சுமிப்ரியா சந்திரமௌலி தேர்ந்த நடிப்பில் பிரமாதப்படுத்துகிறார்.

குற்ற உணர்ச்சியும், இயலாமையும் மிகுந்த தனுஷின் தந்தை கதாபாத்திரத்துக்கு பூ ராமு அவ்வளவு பொருத்தம். ஆதிக்க சாதியின் கர்வத்தை அழகம் பெருமாள் நுட்பமாக வெளிப்படுத்துகிறார். நட்டி நட்ராஜ் சாதியின் கோர முகத்தை அப்பட்டமாக பிரதிபலித்துள்ளார். ஊர்ப் பெரியவராக ஜி.எம்.குமாரின் நடிப்பு கச்சிதம். சண்முகராஜன், சுபத்ரா, ஜானகி ஆகியோரும் தங்கள் கதாபாத்திரங்களின் நோக்கங்களை நிறைவேற்றுகிறார்கள்.

தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவும், ராமலிங்கத்தின் கலை இயக்கமும், சந்தோஷ் நாராயணனின் இசையும் படத்தின் தரத்தை வேற லெவலுக்குக் கொண்டு சென்றுள்ளன. கண்டா வரச் சொல்லுங்க, மஞ்சனத்தி பாடல்கள் ஏற்கனவே சக்கை போடு போட்டிருக்கின்றன.

கதையமைப்பில், கதாபாத்திரக் கட்டமைப்பில் இயக்குநரின் மெனக்கெடல் தெரிகிறது. நாயகி தவிர்த்து மற்ற அத்தனை பெண் பாத்திரங்களும் அழுத்தமான வார்ப்புகள். லால் தன் முன்னாள் காதலியிடம் 10 ரூபாயைத் திருடுவது, அதை அறிந்த அவர், ''மஞ்சனத்தி புருஷா... 10 ரூபாய் போதுமா... வேணும்னா ஒரு முத்தம் கொடுத்துட்டுப் போ'' என்று சொல்வது. லால் அவரின் தலையில் முத்தம் பதித்துச் செல்வது, லால் - தனுஷ் இணையின் காட்சிகள் ஆகியவை ரசனை அத்தியாயங்கள்.

பேருந்து எரிப்பு, பேருந்து மீது கல்வீச்சு என்று பேருந்து தொடர்பான அரசியல் தென் மாவட்டங்களில் அதிகம். அதனை நினைவு கூரும் விதமான காட்சிகளை இயக்குநர் மாரி செல்வராஜ் பதிவு செய்துள்ளார். இறந்துபோன தனுஷின் தங்கையை நாட்டார் தெய்வமாக முன்னிறுத்துவது, தலை துண்டிக்கப்பட்ட புத்தரின் சிலை, தலையை மட்டும் வரையாமல் தரைப்படை உடையில் இருக்கும் ஓவியம், காவல் நிலையத்தில் அம்பேத்கர் படம் எனப் படம் முழுவதும் பல குறியீடுகள் உள்ளன. அத்துடன் வாளால் மீன் வெட்டும் மரபு, நாணயங்களை வைத்து சூதாடுவது என மண் சார்ந்த பண்பாட்டு அடையாளகங்களையும் படத்தில் வைத்துள்ளார்.

கர்ணனை நாயகனாக்கி, அவரது காதலியாக திரௌபதியைக் காட்டி, ஊர்ப் பெரியவருக்கு துரியோதன் என்று பெயர் சூட்டி, அவருடன் இருக்கும் அடிப்பொடியை அபிமன்யுவாக்கி, வில்லனைக் கண்ணபிரானாகக் காட்டி மகாபாரதத்தை மாரி செல்வராஜ் தனக்கே உரிய பாணியில் மாற்றி அமைத்துள்ளார். அந்த நுட்பமான அரசியல் ஆச்சரியம் அளிக்கிறது.

இந்த உலகம் அனைத்து உயிர்களுக்கும் சொந்தமானது என்பதை உணர்த்தும் விதமாக மனிதர்களுடன், கிராமத்து மக்களுடன், கோழிக் குஞ்சு, பருந்து, கழுதை, குதிரை, யானை, மாடுகள், பன்றிகள் என அத்தனை உயிர்களையும் காட்சிப்படுத்தியுள்ளார். அவரின் மனிதம் மகிழ்ச்சி அளிக்கிறது.

இவ்வளவு பலங்கள் நிறைந்து கிடந்தாலும் சில பலவீனங்கள் இருப்பதையும் மறுப்பதற்கில்லை. கொடியங்குளம் என்ற கிராமத்தில் முன்னர் நடந்த சாதிக் கலவரத்தைத்தான் படத்தின் மையமாக மாரி செல்வராஜ் வைத்துள்ளார். ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்வதற்குத் துணியவில்லை. தனுஷ் - ரஜிஷா விஜயன் காதலுக்கும் படத்தில் அவ்வளவாக அழுத்தம் இல்லை. சீரியஸ் படத்தில் காதல் காட்சிகள் தொய்வை ஏற்படுத்துகின்றன. வர்த்தகக் காரணத்துக்காகச் சேர்க்கப்பட்டாலும் அது படத்துடன் ஒட்டவில்லை.

முதல் பாதியில் மெதுவாக கதை சொல்லும் உத்தியைத் தவிர்த்திருக்கலாம். மக்களோடு மக்களாக நின்று, எதிர்க்கும் நாயகன் இறுதியில் தனித்து நின்றுக் களமாடுவதாகக் காட்டுவது தமிழ்த் திரைப்பட நாயக பிம்பத்தைத் தூக்கிப்பிடிக்கும் காட்சிகளில் இருந்து விலகிச் செல்ல முடியாத இயக்குநரின் பலவீனத்தைக் காட்டுகின்றது. அதிகம் உள்ளன. எப்போது தனுஷ் வாள் எடுத்துச் சுழற்றுவார், குதிரை மீது ஏறி அமர்ந்து வருவார் என்று பில்டப்பை ஏற்றிக் கொண்டே செல்கிறார்கள். அவற்றைக் குறைத்திருக்கலாம்.

இவற்றைத் தவிர்த்துப் பார்த்தால் 'கர்ணன்' தமிழ் சினிமாவில் தனித் தடம் பதித்துள்ளது. வன்முறை தெறிக்கும் காட்சிகள் அதிகம் உள்ளன. அதை நியாயப்படுத்துவது படத்தின் நோக்கமல்ல. ''என் தேவை என்ன, என் பிரச்சினை என்னன்னு புரிஞ்சுக்க முடியல. நான் எப்படி பேசுறேன், எப்படி நிக்குறேன்னு மட்டும்தான் உனக்குப் பிரச்சினையா தெரியுது'' என்ற மாரி செல்வராஜின் வசனத்தை உள்வாங்கிக் கொண்டால் 'கர்ணன்' உங்களுக்குக் காவியமாகத் தெரியும். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிறை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.04.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org